REGISTERED No. M. 1434.

தனிப்பிரதி அணா 2.

நாடார்குல மித்திரன்

THE NADAR KULA MITRAN.

அருப்புக்கோட்டை நாடார் கல்விப் பிரசங்க சபையினின்று

வெளிவரும்,

மாதம் மும்முறைப் பதிப்பு.

“கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்” (திருக்குறள்)

சுதந்தரம்! சமத்துவம்!! சகோதரத்துவம்!!!

பத்திராதிபர், சூ. ஆ. முத்துநாடார் பத்திராசிரியர்

நாடார்குல மித்திரன்
சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாட்டிற்கு வருடம் 1-க்குரூ 3-8-0.

சிங்கப்பூர், பினாங்கு, மலாக்கா முதலிய வெளிநாட்டிற்கு வருடம் 1-க்கு ரூபா 4-0-0.

நாடார்குல மித்திரன்
விளம்பர விகிதம்.

கலம் 1-க்கு தடவை 1-க்கு ரூபா 6-0-0.

சில்லரை விளம்பரம் அங்குலம் 1-க்கு ரூ 0-4-0

நீண்டகாலம் விளம்பரஞ் செய்வோர் மானேஜருக்கு எழுதவும்.

மலர் 4] துந்துபிஷு பங்குனிமீ 19உ ஞாயிற்றுக்கிழமை (அருப்புக்கோட்டை) 1923ஷு ஏப்ரல்மீ 1உ [இதழ் 22

இனம்! இனம்!!

பெருங்காயம் செய்யும் முறை.

எமது மல்லிகா ஆயில் என்னும் சிறந்த கூந்தல் தைலம் 3 பாட்டல் வாங்குபவர்களுக்கு மேற்படி பெருங்காயம் செய்யும் முறை இனமாய் அனுப்பப்படும். இம் முறையைக்கொண்டு ஒவ்வொருவரும் சக்திக்கேற்றபடி பெருங்காயம்செய்து, விற்பனை செய்வதால் சீவனம் செய்யலாம். மல்லிகா ஆயில் 3 பாட்டல் விலை ரூ 2. தபால் செலவும் இனம்.

K. N. S. & Co. ARIMALAM.

ஜீவகாருண்யர்.

மஹாசந்தனாதித் தைலம்.

இது சாஸ்திரோக்தமாய்ச் செய்தது சகல வியாதிகளையும் கண்டித்து தேக பலமும் தேககாந்தியும் தரும்.

புட்டி 1-க்கு ரூ 1—8—0.

ஜீவகாருண்ய வைத்தியசாலே,
மந்தித்தோப்பு,
கோவில்பட்டி S. I. R.

விளம்பரம்.

பல்போனவர்களுக்கு புதிய பல் கெட்டுவதல்லாமல் பல்சம்பந்தமான இதர சகல வியாதிகளுக்கும்தகுந்தவாறு மருந்து கொடுக்கப்படும். சார்ஜ விபரம் நேரில்.

விலாசம்:—
P. M. ஆப்ரகாம்,
அம்மாசாமி நாயக்கர் பங்களா
வடக்குமாசி வீதி மதுரை.

புதிய ஹோட்டல்.

ஐயா! தூத்துக்குடி யென்ற திருமந்திர நகரில் சாப்பாடு, காப்பிகளுக்கு வியவைகள் சுக்கவசதி மிக்க இல்லையென பலரால் சொல்லகேள்விப்பட்டு சௌகரியத்தை தர விருதுபட்டியிலிருந்து முன் வந்த எங்கள் ‘நவீன சுகபோஜன சாலையை’ இந்நகர் கீழூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரே மகா-ள-ள-ஸ்ரீ கனம் F. S. பெரையா அவர்கள் கட்டிடத்தில் ஸ்தாபனம் செய்திருப்பதால் சகல நாடார் கனவான்களும் உணவு அருந்தியெங்களை கௌரவப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். இப்படிக்கு

புரோப்ரைட்டர்கள் } எஸ். எஸ். கருப்பையா நாடார்.
விருதுபட்டி. } எஸ். ராமசாமி நாடார்

புதியசாலே! புதியசாலே!!

நாடார்குல மித்திரன்

புத்தகசாலே.

புதுவருஷத்தைமுன்னிட்டு விலையைக் குறைக்கப்பட்டிருக்கிறது.

புத்தக விபரம்.

அஸரியா நாடார் ஜீவிய சரித்திரம்	0—8—0
மகாமாயன் நாவல்	0—8—0
சௌந்திரகாந்தி நாவல்	0—12—0
அஸரியா நாடார் போட்டோ படம்	0—3—0
ஸ்ரீ முத்துமாரியம்மன் பதிகம்	0—1—6
நடராஜப் பதிகம்	0—1—6
ஸ்ரீ முத்துமாரியம்மன் திருவிழாச்சிந்து	0—1—6
செல்வாசக் கீர்த்தனே	0—3—0
நாடார் மகாஜன சங்கீத மஞ்சரி	0—4—0
5-வது நாடார் மகாஜன சங்க கான்பரன்ஸ் ரிப்போர்ட்	0—4—0
நமது குலத்தொழில் யாது	0—5—0
விகட வேசிகர்மாலே	0—1—6

குறிப்பு:—8-அணாவுக்கு குறைவான விலையுள்ள புத்தகங்கள் வி. பி. யில் அனுப்பப்பட மாட்டாது. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

மொத்தமாக வாங்குவோர்க்கு தக்ககமிஷன் கழித்துக் கொடுக்கப்படும். விபரத்திற்கு எழுதவும். விலாசம்:—

நாடார்குல மித்திரன் “புத்தகசாலே”
நாடார் ஹைஸ்கூல் ரோடு,
அருப்புக்கோட்டை.

தபால் பெட்டி. 555. தந்தி விலாசம். “முக்குந்தன்”

உலகெங்கும் புகழ்பெற்ற

பட்டணம் பொடி.

காரம், நிறம், வாடை, குணம், மணம் இவ்வைந்தும் ஒருங்கே அமையப்பெற்று தினசரி நூற்றுக்கணக்கான பார்சல்கள் அனுப்பப்பட்டு தங்கமெடல் வெள்ளி மெடல் பரிசுபெற்று தினசரி நற்சாக்ஷிகள் குவிகின்றன.

என். வி. ஷண்முகம் கம்பெனியார்,
பட்டணம் பொடி தொழிற்சாலே,
மதராஸ்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

ஸ்ரீகிருஷ்ண லீலை.

(வீரமாமுனி எழுதுகிறார்.)

துயில் கவர்ந்தது.

(முன் தொடர்ச்சி.)

இவ்விதமாக பிரார்த்தித்த கோபிகைகளைப் பார்த்த மகாமாயன் புன்னகையுடன் கம்பீரமாகச் சொல்லுகிறார்.

ஏஹ! பெண்களே!! நீங்களெல்லோரும் வெகுகாலமாக ஒன்றுசேர்ந்து ஒரே மனதுடையவர்களாய் உங்கள் முன்னோருக்குத் தெரிவிக்காமல், மனதிலொன்றும் வாக்கிலொன்றுமாய், விரதங்களை அனுஷ்டிக்கின்றீர்கள், உங்களைப்போல் விரதம் அனுஷ்டிப்பவர்கள் எந்தலோகத்திலும் கிடையாது. உங்களுடைய மோசகரமான சித்த விர்த்தியைக்கொண்டு, என்னைத்துறசெய்வது என்ன சாதுர்யமோ! ஆம நீங்கள் நன்ருய்த் தெரிந்தவர்களே. தயவுசெய்து ஜலத்தை விட்டு, வெளியில்வந்து உங்கள் வஸ்திரங்களை வாங்கிக்கொள்ளுங்க ளென்ருர்.

இப்படிச்சொல்லிய கிருஷ்ணபகவானுடைய வசனங்களைக் கேட்டமாத்திரத்தில் யமுனைநதி ஜலத்துடன் வேறுபாடு தெரியாமல் கலந்திருக்கின்ற கறுத்த அழகபாரத்தை தப்படைந்த இந்தகோப கன்யா சிரோன்மணிகள் ஒருவர்க்கொருவர் முகாரவிந்தங்களைப் பார்த்து அனந்த தாமரைப புஷ்பங்களில் அனந்த மூனரும் பிறைகள், ஏககாலத்திற்காணப்பட்டாற்போலப் புன்னகைசெய்துகொண்டு இவர் சொல்லுகின்ற மர்ம வசனங்களை குறித்து வெட்கியும் அதிகக் குளிருக்கஞ்சியும் கழுத்தளவு ஜலத்திலிருந்து கொண்டு பதிலுரைக்கலாயினர்.

ஆ! கிருஷ்ணா!! ஸ்திரீ ஜனங்கள் ஜலக்கிரீடைபண்ணும் அவ்விடத்திற்கு உத்தம புருஷர்கள் வரமாட்டார்கள். இப்படிச்சரித்திரங்கள் இப்பூமியில் முன்னமே நடந்ததென்று கேட்டதில்லை. இந்தக் காரியத்திலும் இச் செய்கைகளை நீயொருவன் மாத்திரம் துணிந்துசெய்தாயேயல்லாமல் மற்றொருவரும் பாசரிக்க மாட்டார்கள். ஆகையால், எங்கள் பிரபுவே! உனக்கு அடிமையானவர்களே நாம். சந்தேகமில்லை; யமுனைநதியினின்றும் பிராமாணமாகச்சொல்லுகின்றோம் உனது கிருபாபிமான வஸ்திரங்களை எங்களுக்குக் கொடுத்தருள்வாயென்று துதித்து, இன்றுமுதல் உனது ஆக்ஞையின்படி அடிமைக்கடிமைகளாய் ஆட்கொண்டு, எங்களுடைய சர்வேந்திரியங்களையும் உமக்கே சமர்ப்பித்து, உனது ஆக்ஞையை சிரசாய்வகித்து அனுஷ்டித்துக்கொண்டு வருகின்ருேமென மும பிரார்த்தித்தார்கள். தங்கள் ஸ்தனபாரங்களிலணிந்த செஞ்சந்தனக் குழம்புகளாய் கலக்கப்பெற்று சோணையாற்றுக கொப்பாய் விளங்குகின்ற யமுனாநதியிலிருந்து கொண்டு பிரார்த்திக்கின்ற கோபிகைகளை கடாட்சித்து கோபாலன் மர்மமான சில வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

சுகுண சுந்தரவதிகளே! நீங்கள் உங்கள் முன்னோர்களின் மீது பிரமாணப்படிக்கு எந்தப் புருஷனைப் பர்த்தாவாகக்கொள்வதற்கு பரிசுத்தமாய்மிகவும் பக்தியுடன் நோன்புகளை அனுஷ்டித்தீர்களோ அதன்படி உங்களிடத்தில் சனித்த தவப்பலமே உங்களுக்குலபித்தது. அப்படியிருக்க நந்தகோபனுடைய புத்திரனுகிய என்னையேன் வெறுக்கின்றீர்கள எந்த மகா புருஷனை மோகித்தீர்களோ அவன் உங்கள் மர்மதனங்களை யபகரித்தான். வெகு காலமாய் உங்கள் மனோவீதியில் பக்தியுடன் சிந்தித்துக்கொண்டிருந்த புருஷார்த்தவாஞ்சைக்கு, நான் அன்யனே பிரமாணமாகச் சொல்லுவீர்களென்ருர். சுவாமியானவர் இவ் வசனங்களைச்சொல்வதைக்கேட்டு ஒருவர்க்கொருவர் தங்கள் தாமரையொத்த முகங்களைப் பார்த்துக்கொண்டு, மனத்தாமரையில்முக்தியைக்கோரத்தக்கசர்வேந்திரியங்களையும் அடக்கிக்கொண்டுமௌனமாயிருந்தார்கள். அப்படி யிருக்கிறவர்களை தமது பரம கிருபையினுல் மறுபடியும் கடாட்சித்து லோகேந்திர பரமகுரு சிகாமணியாகிய அரியானவர், சாஸ்திர சம்மதமாய் சில நீதிவசனங்களை வெளியிட்டுச் சொல்லுகிறார்.

சுகுணவதிகளே! இன்றுமுதல் எப்போதும் எனது கிருதத்தில் நித்தியமாக வசித்து, நந்தகோப யசோதா தேவிகளுக்கு பணிவிடை செய்து எனக் கடிமைகளாய் என்னுடைய ஆக்ஞையை சிரசாகவகித்து அனுஷ்டிப்பீர்களாகில் இப்போதே உங்கள் வஸ்திரங்களைத் தருகின்றேன், வெளியேறிவந்து வஸ்திரங்களை, வாங்கிக்கொள்ளுங்க ளென்ருர். இவ்வண்ணஞ்சொல்லிய பகவானுடைய மதுர வசனங்களைக் கேட்டவுடனே குளிருக்கஞ்சி ஜலமத்தியிலிருக்கக் கூடாதவர்களாயிருக்கின்ற ஸ்திரீகள் சிலர் சகிக்கமாட்டாமல் வெளியே போகலாமென்ருர்கள். போனவுடனே நம்முடைய லச்சைகளை கோபாலன் அபகரிப்பானென்றனர் சிலர். இந்தப் பிரகாரம் நாளுவிதமான அபிப்பிராயமுடையவர்களாய் சீதஸ்பரிசவாய்வுடன் கூடிய நடுக்கத்துடன் என்செய்வோமென்று நிந்தித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது காற்றினுலசைகின்ற தாமரை புஷ்பங்கள் இந்த கோபிகைகளின் தனங்களிற் பந்தலால் கண்ணபிரானுடைய கரங்கள் இவர்களுடையஸ்தனங்களைப் பற்றுதல்போலு யிருந்தது. சில நேரஞ்சென்றபின்பு தங்கள் இருதயங்களை திடஞ்செய்துகொண்டு யாவருக்தாணிக்கு அவனிட்டவழக்காய்ப்ஸ்ரீபகவானிடத்தில் வைத்தமனமுடையவர்களாய்மெதுவான நடையாய் புன்சிரிப்புடன் ஜலத்திலிருந்து வெளியில்வந்து வெட்கமில்லாதவர்களாய் அவதூதாசிரமிகளைப்போல், நிஷ்களங்கமான மனதுடையவர்களாய் நின்ருர்கள். இப்படி நிற்கின்ற ஸ்திரீகள் ஒருவர்க்கொருவர் பார்த்துக்கொள்ளும் போது வஸ்திர மில்லாமலிருக்கிறோமே என்ற நினைப்பும் வெட்கமும் தோன்றுகின்றதே யல்லாமல் மற்றயோர்க்குவஸ்திர பூஷணலங்காரத்துடனிருந்து, வார்த்தை சொல்லிக்கொண்டிருப்பதாய்க் காணும்படி தமது கிருபாபிமான வஸ்திரங்களை இவர்களெல்லோருக்குங்கொடுத்து இவர்களைப் பார்த்து சில வார்த்தைகள் சொல்லுகிறார். விரத சீலைகளான சுந்தரவதிகளே! நானிந்த உலகத்தில் உற்பவித்தநாள் முதல் உங்களுடன் விருத்தியடைந்து கொண்டிருக்கின்றேன். இதுவுமன்றி எனது நிசாம்சத்தாலும் உங்களுடைய சம்பந்தத்தாலும், உங்களுள்ளும்புறம்புமாக வியாபித்துக்கொண்டிருக்கின்றேன். உங்களிடத்தில் நானறியாத தர்மங்களுண்டோ! உங்கள் மனோவாக்குக்காயமுதலிய சரீரகுணதர்மங்களுக்கு நான் அன்யனே ஆகையால், நீங்கள் நன்ருயோசித்துப் பாருங்கள். என்விஷயத்தில்நாணிக்கூசத்தக்க வியவகாரம் எவ்வளவுமில்லை. மேலும் நீங்கள் விரத நிஷ்டைகளில் அன்புடையவர்களாயிருந்து சாஸ்திரவிதிக்கு வேறுபாடாக வஸ்திரமில்லாமல்இம்மகாபுண்ணிய நதியிலிறங்கி ஸ்நானஞ்செய்யத்தகுமோ. ஆதலால் நீங்கள் தெரியாமல் நடந்ததைக் குறித்து பிராயச்சித்தமாக யாவரும் இரண்டு கைகளையுந்தூக்கி அஞ்சலிசெய்து உங்கள் வஸ்திரங்களை வாங்கிக் கட்டிக் கொள்ளுங்களென்ருர்.

இவ்விதஞ்சொல்லிய கிருஷ்ணனுடைய வசனங்களைக்கேட்ட கோபிகைகள் யாவரும் பிராணயமம் செய்யவுப்புக்கொண்டு ஸ்வாமியினுடையஆக்ஞைக்கு வித்யாசம் நேரிடுவதை தங்களுக்குள் யோசியாமல் வந்தனக்கிரமத்தை யுணராமல் ஒரு கைகளால் தங்கள் மர்மாவயவங்களை மறைத்து மற்றொரு அஸ்தத்தை சேவிக்கத்தக்கதாகக் காட்டினுர்கள். உடனே பகவான் பார்த்து உங்கள் விரத பங்கமில்லாதபடி சேவிக்கச் சொன்னதற்கு பின்னுமொரு குற்றஞ் செய்தவர்களாகினீர்கள். இப்படிச் செய்வதால் பகவத் துரோகமாகும். ஆகையால் இரண்டு கைகளையுந்தூக்கி அஞ்சலி செய்யுங்கள் என்ருர். நியமனப்படியே பயபக்தியுடன் தங்களிருகரங்களையுந்தூக்கி கிருஷ்ண சரணமென்று தண்டன் சமர்ப்பித்து பகவானுடைய கிருபையைப் பெற்று தங்களுடைய ஆடைகளையும் வாங்கியுடுத்திக்கொண்டு, திருப்தியுடன் கிருஷ்ணனைப் பர்த்தாவாக பாவனைசெய்துகொண்டு சலியாமல் நின்று பார்த்துக்கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில் ஸ்ரீகிருஷ்ணபகவானுனவர்வாருங்கள் விரத நிஷ்டைகளை அனுஷ்டித்த மகா லட்சணவதிகளே நீங்களே சொல்லாவிடினும் உங்கள் மனோதர்ம மின்னதென்று எனக்கு நன்ருய்த்தெரியும். நீங்கள் என்னைப் பர்த்தாவாக நினைத்து எனக்கு அடியார்களாய் எனது சாரூப்யத்தையடைந்து சுகிகளாய் தனுகரணபோகங்களையடைந்து அனந்தவித உபசாரகைங்கர்யங்களைச் செய்யவேணுமென்று கோரி விரதத்தை அனுஷ்டித்தீர்கள். ஆகையால் சத்யமாக பல காட்சியை இச்சித்து மகா காமியதேவதையாகிய அம்பிகாதேவியைக்குறித்து விரத மனுஷ்டித்ததற்கு போகங்களும் என்னைச் சரணமடைந்ததற்கு தேகாந்தரத்தில்முக்தியும்உங்களுக்குக் கிடைக்கும். நீங்கள் யாவரும் என்னைத் தியானித்துக்கொண்டு உங்கள் கிரகங்களுக்குச் செல்லுங்கள். இன்றுமுதல் அவரவர்கள் காலானுகுணமாய் ஏகாந்த சமயங்களில் தியானித்து நினைக்குந்தோறும் நான் பிரசன்னமாகி உங்கள் இஷ்டங்களை நிறைவேறச் செய்கிறேனென்று கிருபையாகச் சொல்லி விடை கொடுத்தருளினுர். (தொடரும்.)

மனதுக்குத் திருப்தியான வாழ்க்கை

மத்திம வாழ்க்கை.

இடம் பொருள் ஏவல் முதலிய ஆதரவு சிறிதுமில்லாதவர்கள் மலையேறிகப்பலேறி ஊரைவிட்டோடிதூர தேசங்களுக்குப் போய்வருந்தி உழைத்துப் பொருள் சம்பாதிக்கக் கருதுவார்கள். ஒருவிதத்திலும் குறைவில்லாத சீமான்களும் கப்பலேறி மலையேறி ஊரைவிட்டோடி அந்நியதேசங்களுக்குப் போய்தமைப் போலும் செல்வர்களுக்குரிய பிரதாபமான அருந்தொழில்களைச் செய்து, அதிகத்தனம் படைத்து அதிகக் கீர்த்திபெறக் கருதுவார்கள். தரித்திரமும் செல்வமுமுள்ள இவ்விருதரத்தாருக்கும் மத்தியமான ஸ்திதியிலுள்ளவர்கள்தான் சிறிதும் மனக்கவலையின்றி, வாழ்நாட்கழிக்க முடியும். அவர்கள் எளியவர்களைப்போல் அன்றன்று வருந்தி உழைத்து, அன்னவஸ்திராதிகளுக்குத்தகுந்த வழியின்றிச் சிறுமைப்படுவதுமில்லை. சீமான்களைப்போல்ச் செல்வமிகுதியால்க் கர்வங்கொண்டு பேராசையுடையவர்களாய்ப்பிறர்வாழ்வைக்குறித்துப் பொருமையடைவதுமில்லை. உத்தமமான வழியிலிருக்க விரும்புகின்ற செல்வரும் வறிஞரும் மத்திமமான வாழ்க்கையேதகுதியான தென்று கொள்வார்கள்.

வையகத்தை யாளும் வேந்தர்களும் தமது மேம்பாட்டால் வருந்துன்பங்களையெண்ணி பெரும்பாலும புலம்பி, தாம் பெரியோராக வாயினும் சிறியோராக வாயினும் பிறவாமல் மத்திய நிலைமையோராய்ப் பிறந்தால் எத்தனை சௌக்கியமாயிருக்குமென்று வருந்துகின்ருர்கள் தரித்திரத்தையாகிலும் செல்வத்தையாகிலும் எனக்குத் தரவேண்டாம் என்று சாலோமோன் பிரார்த்தனை செய்து மத்திய வாழ்க்கையே மெய்ப்பாக்கியமான வாழ்க்கையென்று கருதியிருக்கிருர். ஸ்ரீ ராமபிரானும் பிரபஞ்சத்தில் மனிதர்களுடைய வாழ்க்கை எத்தன்மைத்துடையதாயிருப்பின் அதுமெய்பாடுடையதாயிருக்கு மென்று நீண்ட நாள் சிந்தனை செய்து தாம் சக்கிரவர்த்தியாக இருப்பதையுங்கூட வெறுத்திருக்கிருர். பின்னர் வசிஷ்டரென்னும் தமது மகரிஷியால் தமது சந்தேகங்களைத் தெளிவபடுத்திக் கொண்டு தாம் சக்கிரவர்த்திஸ்தானத்தை அடைந்திருந்த காலத்திலுங் கூட மத்திய வாழ்க்கையிலுள்ளோர் மனப்பான்மையினராகவேவாழ்ந்திருக்கிருர் அசோகச்சக்கிரவர்த்தியும் தமது ஆடம்பரமான வாழ்க்கையை அரைக்ஷண நேரத்தில்த்துறந்து இவ்வுலகம் போற்றும் உத்தமராக விளங்கியிருக்கிருர்.

இம்மைக்குறிய ஆபத்துக்களுக்கு செல்வரும் வறிஞரும் ஆளாகிருர்கள். மத்தியஸ்திதியிலிருப்பவர்களுக்கு வரும் துயரம் சொற்பமேயாம்; சுகதுக்கங்களில் அத்தனை மாறுதலுமில்லை. செல்வருக்குத் துன்மார்க்கத்திலும் சுகபோகங்களினுலும் ஆராதுரித்தனத்தினுலும் பற்பலமனத்துயரங்களும் பிணிகளுமுண்டாகின்றன. வறியோர் மிகவருந்தி உழைப்பதினுலும் அன்னவஸ்திரமுதலிய ஜீவனுதாரப் பொருள்களில்லாமையினுலும் சுகத்திற்கடாத எளிய போஜனத்தை உண்பதினுலும் திருப்தியான போஜனத்தை உண்ண இடமில்லாமையினுலும் எப்பொழுதும் மனத்துன்பப்படுவதுமன்றி கொடிய வியாதிகண்டு உபத்திரவப்பட இடமுண்டாகிறது. இவ்விதத்துன்ப துயரங்கள் மத்திய நிலைமையோராகிய சாதாரண ஜனங்களுக்கு உண்டாவது அபூர்வம். அவர்களே, சர்வசற்குணராய் நாலுவித அநுபவங்களையும் எளிதில் அடைவார்கள். சமாதானமும் பரிபூரணமும் அவர்களுக்குத் தொண்டு செய்யக் கூடும். மதுவிலக்கு, மனஅடக்கம், அமைதி, சுகம், ஜனசமூக ஊழியம், நாலுவித நற்காலக்ஷேபம், இச்சிக்கத்தகும் சகல இன்பங்கள், இகபர சாதனமுதலிய இவைகளெல்லாம் மத்திய நிலைமையிலிருப்பவர்களுக்குறிய நல்வரங்களேயாம்.

இவ்வகுப்பார் பூலோகத்தில் மனச்சாந்தியுடன் சஞ்சரிப்பார்கள். அவர்கள் சரீரம் வருந்திஉழைப்பதில்லை அன்றன்று ஆகாரத்திற்கு அடிமைத்தொழில் செய்கிறவர்களுமில்லை. மனதுக்குச்சமாதானமும் சரீரத்துக்கு ஆறுதலுமில்லாமல் உடலையும்உயிரையும்வருத்தும் ஆபத்து அவர்களை அதிகமாய்ப் பாதிப்பதுமில்லை. பொருமையின் மூர்க்கவெறியுமுண்டாகாது, பேராசை யென்னும் தீ அவர்களுள்ளத்தில் மூளாது, அவர்கள் சுகமாய் வாழ்ந்து உலகப்பிரயாணத்தில் சங்கடமின்றிச் சென்று இகபரசாதனங்களை தடையின்றி, அனுபவித்து தாங்கள் மணப்பாக்கிய முன்னவர்களென்று சாட்சி பூர்வமாய்க் கண்டறிவர்களன்றே?

எளியவர்களும் தங்களுக்கு அன்றன்றுகிடைக்கும் சொற்ப வருமானங்களில் திருப்தியுடையவர்களாய்ஈஸ்வரன் நமக்குக் கொடுத்த பாக்கியம் இவ்வளவுதான் போலும் இன்னும் நமக்குக்கிடைக்க வேண்டிய பாக்கியமிருப்பின் அதுதானே வரக் கூடுமென்று மனச்சாந்தியுடன் அவர்கள் கடமையில் தவறாமல் நிற்பரேல் அவர்களும் மத்திய வாழ்கையுடையவர்களா இருக்கக் கூடும். செல்வர்களும் மற்றொருவர் தம்மைப்போல் செல்வராக வரப்போகும் விஷயத்திலும் தம்மைப்போல் மற்றொருவர் முன்னேறும் விஷயத்திலும் பொருமை கொள்ளாமல் தாம்பெற்ற செல்வம் தம்முடைய வல்லமையினுலே உண்டாய்விட்டதாக அகம்பாவங் கொள்ளாமலும் உலகத்திலுள்ள சகல ஜீவர்களுக்கும் பொருட்டு சகல பொருட்களும் ஈஸ்வரனுல் சேமித்துவைக்கப்பட்ட பொருளின் ரூபாகம். ஈஸ்வரனுல்கமக்களிக்கப்பெற்றதென்றும் அப்பொருளை ஈஸ்வரப்பிரியமான ஜீவ கோடிகளுக்கு இயன்ற அளவு தருமங் கொடுத்துதவி செய்யவேண்டுமென்ற ஈகையாளர்களாயிருக்கும்பட்சத்தில் அவர்களும் மத்திய வாழ்க்கையுடையவர்களேயாவர். இப்படி முத்திறத்தார்களும் மத்திம வாழ்க்கையாகிய மனச்சாந்தவழியில் நின்று வழிபடுவரேல் அதுவே கடவுளுக்கும் பிரியமான வணக்கமுமாகும் அதுவே உலகக்ஷேமத்துக்குச் சிறந்த ஒரு நன்மார்க்கமும் சன்மார்க்கமுமாகுமன்றே. சுபம்! தேவிதாஸன்.

இலங்கை வர்த்தமானம்.

(நமது சொந்த நிருபரிடமிருந்து)

கால நிலை.

வெகுநாட்களாய் மழை பெய்யாததால் உஷ்ணம் அதிகரித்தும் ஒட்வோட்டடி வியாதிகளும் பரவிக்கொண்டிருந்தன. இப்போ இரண்டுமூன்று நாட்களாய் சில மழை பெய்தும் பகலில் உஷ்ணம் கடோமாகவேயிருக்கின்றது.

தென்னிந்திய ஜாதிபேதமற்ற கத்தோலிக் சங்கம்.

மேற்சங்கத்தின் திருநெல்வேலி ஜில்லாக் கிளை இங்கு ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது இச்சங்கத்தின் இரண்டாவது வருடாந்தரமஹோத்சவம் மார்ச்சு 11உ ஞாயிற்றுக்கிழமை 2 மணிக்கு கனம் பி. ஜான் தாமஸ் என்பாரின் அக்கிராசனத்தின்கீழ் கொன்னுப்பிட்டியில் நடைபெற்றது. பெரியோரும் முக்கியஸ்தர்களும் சுமார் 250 பேர் விஜயஞ் செய்து கூட்டத்தைச் சிறப்பித்தனர். அக்கிராசனருக்குப் பூமாலைசூட்டியபின்னர், அவர்கள் 'முயற்சி' யென்னும் விஷயத்தைப் பற்றி மிகவும் சாதுரியமாய்ப் பேசினர்கள். இடைக்கிடையே பாட்டுக் கச்சேரியும் நடந்தது. இறுதியில் புதிய வருஷத்திற் குறிய உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டு புகைப்படமொன்று எடுத்ததின் பின்னர் கூட்டம் இனிது முடிவுபெற்றது. மேற்கண்ட சங்கத்தின் பேரால் 'ஜாதிபேத மற்ருேன்' என்னும் மாதாந்தரப் பத்திரிகையும் உலாவி வருகின்றது.

வேலை நிறுத்தம்.

தொழிலாளர்கள் யாவரும் அன்ன ஆகாரமின்றி வெகுநாளாய் கஷ்டப் பட்டமையால் தொழிற்சாலைக்கு அவ்களே வலியப்போய் வேலை செய்துவருகிறார்கள். நமது குலத்தவர்களில் சுமார் 50 பேர் காஸ் கம்பேனியில் வேலைசெய்து வந்ததையிட்டு அவர்களையும் அநேகர் நிறுத்தஞ்செய்ய வற்புறுத்தினதை அதிகாரிகளறிந்து தகுந்தபோலீஸ் பந்தோபஸ்து கொடுத்தார்கள். அவர்கள் வேலையை நிறுத்தாமலிருந்தது மெச்சத் தக்கது.

தேகவியோகம்.

கனம் ஜாண் கோவாஜயரவர்களின் தந்தை நோவா சாமியடிபான் உபதேசியாரவர்கள் சபையில் மார்ச்சு 11உ காலை 3½ மணிக்கு சமாதானத்துடன் விண்ணுலகடைந்தனர். கனம் உபதேசியாரவர்கள் சுவிசேஷபுரம் சர்க்கிளைச் சார்ந்த சௌக்கியபுரத்தில் நெடுங்காலமாய் வேலைசெய்து பென்சன் பெற்ற பின் வைராக்தருமை மகன் இல்லத்தில் வசித்து வந்தார்கள். தான் சீக்கிரம் மறுமைக்குட்படுவதை யுத்தேசித்து தனது பேரப்பிள்ளைகளையெல்லாம் ஆசீர்வதித்தார்கள். துக்கசாகரத்தில் மூழ்கியிருக்கும் குடும்பத்தார்க்கு இறைவன் ஆறுதலளிப்பாராக.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

புதியபோஷகப்பிரபுக்கள்

திருநெல்வேலி ஜில்லா, கலிசேஷபுரம். இரங்கூன் கார்ப்பொரேஷன் கமிஷனர், ராவ்சாகிப டாக்டர் J. S. லாமேக்நாடார் L. R. C. P. & S. (Edin) L. F. P. S. (Glas) L. M. (Drb) அவர்கள் வரவு ரூ 100.

இராமநாதபுரம் ஜில்லா, வைநூர் இரங்கூன் சாக்கு வியாபாரம் மெஸ்ஸர்ஸ் வை. மு முத்துக்குமார் நாடார் அன் பிரதர்ஸ் அவர்கள் வரவு ரூ 101.

திருநெல்வேலிஜில்லா, ஆறுமுகநேரி. இரங்கூன் மரவியாபாரம் ஸ்ரீமான் அ. சி. பொன்னுச்சாமி நாடார் அவர்கள் வரவு ரூ 101.

திருநெல்வேலிஜில்லா, இட்டமொழி. இரங்கூன் மரவியாபாரம் (Saw Mill owner) ஸ்ரீமான் A. யோவடியான் நாடாரவர்கள்ரூ 100.

இராமநாதபுரம் ஜில்லா, இலுப்பையூர். இரங்கூன் சாக்கு வியாபாரம் மெஸ்ஸர்ஸ் பு. கு. அ கணபதிநாடார் அன் பிரதர்ஸ் அவர்கள் வரவு ரூ 101.

இராமநாதபுரம் ஜில்லா, முத்தாதிபுரம். இரங்கூன் மரவியாபாரம் மெஸ்ஸர்ஸ் கு. பி. பொன்னையா நாடார் அன் பிரதர்ஸ் அவர்கள் வரவு ரூ 61.

மதுரை: இரங்கூன் ஹைகோர்ட் வக்கீல், ஸ்ரீமான் G ஜோசப் நாடார் அவர்கள் M. A. B L. வரவு ரூ 50.

திருநெல்வேலிஜில்லா, மணக்காடு இரங்கூன் மரவியாபாரம் ஸ்ரீமான் ரா. பொன்னையா நாடார் அவர்கள் வரவு ரூ 50.

திருநெல்வேலி ஜில்லா. காதன்கிணறு. இரங்கூன், மரவியாபாரம் ஸ்ரீமான் S. தங்கச்சாமி நாடார் அவர்கள் வரவு ரூ 50.

திருநெல்வேலி ஜில்லா, கிழமைநல்லூர். இரங்கூன், மரவியாபாரம் ஸ்ரீமான் த. ரா. ஜெயமணி நாடார் அவர்கள் வரவு ரூ 50.

திருநெல்வேலி ஜில்லா, ஊத்தங்கரைவிளை. இரங்கூன் மரவியாபாரம் ஸ்ரீமான் ரா. உலகநாத நாடார் அவர்கள் வரவு ரூ 50.

திருநெல்வேலிஜில்லா, கிழவனேரி. இரங்கூன், மரவியாபாரம் ஸ்ரீமான் க. ம. அந்தோணிமுத்து நாடார் அவர்கள் வரவு ரூ 50.

திருநெல்வேலிஜில்லா, நாங்குநேரிதாலுகா: புதூர். இரங்கூன் மரவியாபாரம் ஸ்ரீமான் ரா. பாக்கியநாத நாடாரவர்கள் வரவு ரூ 50.

திருநெல்வேலி ஜில்லா, ஆறுமுகநேரி. இரங்கூன் மரவியாபாரம் ஸ்ரீமான் ஆ. பொ. தங்கராஜ் நாடார்அவர்கள் வரவு ரூ 50.

இராமநாதபுரம் ஜில்லா, முத்தாதிபுரம். இரங்கூன் மரவியாபாரம் மெஸ்ஸர்ஸ் பெ. ப சின்னக்கனி நாடார் அன் பிரதர்ஸ் அவர்கள் வரவு ரூ 50.

இராமநாதபுரம்ஜில்லா, முதுகுளத்தூர். இரங்கூன் மரவியாபாரம் ஸ்ரீமான் மா. கருப்பையா நாடார் அவர்கள் வரவு ரூ 50.

இராமநாதபுரம் ஜில்லா, அகத்தாயிருப்பு. இரங்கூன் மரவியாபாரம் ஸ்ரீமான் மா. க. ராமசாமிநாடார் அவர்கள் வரவு ரூ 50.

இராமநாதபுரம் ஜில்லா, மேட்டுப்பட்டி. இரங்கூன் மரவியாபாரம் ஸ்ரீமான் பெ. பிச்சை நாடார் அவர்கள் வரவு ரூ 50.

திருநெல்வேலி ஜில்லா, கொம்படிக்கோட்டை. இரங்கூன் மரவியாபாரம் மெஸ்ஸர்ஸ் ச. தங்கப்பாண்டி நாடார் அன் பிரதர்ஸ் அவர்கள் வரவு ரூ 50.

இராமநாதபுரம் ஜில்லா, அகத்தாயிருப்பு இரங்கூன் மரவியாபாரம் மெஸ்ஸர்ஸ் த. வ. சி கிருஷ்ண நாடார் அன் பிரதர்ஸ் அவர்கள் வரவு ரூ 50.

திருநெல்வேலி ஜில்லா, ஸ்ரீவைகுண்டம்தாலுகா, நடுவக்குறிச்சி. இரங்கூன் மரவியாபாரம், மானேஜர், 'சவுத் இந்தியாடிரேடிங் கம்பெனி" ஸ்ரீமான் ந. தி. வெள்ளையா நாடாரவர்கள் வரவு ரூ 50.

திருநெல்வேலி ஜில்லா, மணக்காடு. இரங்கூன் வியாபாரம் ஸ்ரீமான் ஆ. சாமிநாத நாடார் அவர்கள் வரவு ரூ 50.

இராமநாதபுரம் ஜில்லா, கிழப்பெருங்கரை. இரங்கூன் மரவியாபாரம் மெஸ்ஸர்ஸ் பெ ச. மாடசாமி நாடார் அன் பிரதர்ஸ் அவர்கள் வரவு ரூ 50.

திருநெல்வேலிஜில்லா, இட்டமொழி இரங்கூன் மரவியாபாரம் மெஸ்ஸர்ஸ் N. சாலோமோன்நாடார் அன் பிரதர்ஸ் அவர்கள்வ ரூ 50.

திருநெல்வேலிஜில்லா, சாத்தான்குளம். இரங்கூன்சாக்குவியாபாரம் ஸ்ரீமான் த. பெ. மரியராயப்ப நாடாரவர்கள் வரவு ரூ 51.

இராமநாதபுரம் ஜில்லா, செட்டியபட்டி. இரங்கூன் சாக்கு வியாபாரம் ஸ்ரீமான் செ. அ. சக்திவீர நாடாரவர்கள் வரவு ரூ 51.

இராமநாதபுரம் ஜில்லா, இலுப்பையூர். மாண்டலே சாக்கு வியாபாரம் ஸ்ரீமான் வே. பொன்னையா நாடாரவர்கள் வரவு ரூ 51.

மதுரை ஜில்லா, பொட்டிப்புரம். இரங்கூன் சாக்கு வியாபாரம் ஸ்ரீமான் அ. இருளப்ப நாடார் அவர்கள் வரவு ரூ 51

இராமநாதபுரம் ஜில்லா, பழையனூர் இரங்கூன், வியாபாரம் மெஸ்ஸர்ஸ் செ. மு. சிவன் நாடார்அன் பிரதர்ஸ் அவர்கள் வ ரூ 51

இராமநாதபுரம் ஜில்லா, லிங்கநாயக்கன்பட்டி. இரங்கூன் சாக்கு வியாபாரம் ஸ்ரீமான் கி. ஆ. காமாக்ஷி நாடாரவர்கள் வரூ 51

இராமநாதபுரம்ஜில்லா, இலுப்பையூர். இரங்கூன் சாக்குவியாபாரம் ஸ்ரீமான் மா. க. மதலைக்கருப்ப நாடாரவர்கள் வரவு ரூ 51.

திருநெல்வேலிஜில்லா, வெள்ளாளன்விளை. இரங்கூன் மரவியாபாரம் ஸ்ரீமான் யோ. யோசேப்பு நாடார் அவர்கள் வரவு ரூ 51.

திருநெல்வேலி ஜில்லா, மாணூதெண்டுப்பத்து. இரங்கூன் மரவியாபாரம் ஸ்ரீமான் கு. ந. நவமணி நாடாரவர்கள் வரவு ரூ 50.

இராமநாதபுரம் ஜில்லா, வளநாடு மரவியாபாரம் இரங்கூன் ஸ்ரீமான் சி. சாமியய்யா நாடார் அவர்கள் வரவு ரூ 61.

திருநெல்வேலி ஜில்லா, இராஜாவின்கோவில் மரவியாபாரம் இரங்கூன் ஸ்ரீமான் செ. சுடலைமுத்து நாடார் அவர்கள் வரவு ரூ 51.

இராமநாதபுரம் ஜில்லா, முத்தாதிபுரம், கார்ப்போரேஷன் இன்ஸ்பெக்டர் இரங்கூன் ஸ்ரீமான் பெ. சி. ப. முத்தையாநாடாரவர்கள் வரவு ரூ 50.

சட்டசபை.

அதன் தேறுதல் விபரமும் நமது கடமையும்.

(முன் தொடர்ச்சி.)

[வாசக நேயர்கள் முன்பின் தொடர்ச்சிகளை நன்றாய் வாசித்து அறிந்து அதன்படி காரியத்தில் காட்ட முற்படவேண்டும்.]

மேற்காட்டியுள்ள விகற்பங்களும் பிழைகளும் கிராமாந்திரக் கணக்குகளில் மாத்திரமிருப்பதாக நினைக்கவேண்டாம். யூனியன் முனிசிபாலிடி இலாகா வீட்டுவரி நிலவரிக் கணக்குகளிலும் மேற்காட்டிய பிழைதன்மலிந்து கிடக்கக் காணலாம்.

ஆனதால் பட்டாக்களைப் புதிப்பியுங்கள். கிரையங்கொடுத்தவரும் கிரையம் பெற்றவரும் ஒருமித்து பட்டாவைமாற்றிவிடுவதற்கு ஒப்புக்கொள்ளும் பக்ஷத்தில் இவர்கள் இருவர்களிடத்திலும் ஒரு சிறிய கைப்பது (Statement) வாங்கிக்கொண்டு பட்டாவை மாற்றிவிடுவதற்கு ரெவின்யூஇன்ஸ்பெக்டரே உத்தரவு கொடுத்து விடலாம். இதற்கு அவருக்கு இரண்டு நிமிஷங்கள்கூடப்பிடிக்காது, ரெவின்யூஇன்ஸ்பெக்டர் உங்கள் கிராமங்களுக்கு வரும்போது இருகக்ஷிக்காரர்களும் சமாசாரத்தைச் சொல்லிக்கொண்டால் யாதொருவிதமான கஷ்டமுமில்லாமல் காரியம்சுலபமாய்முடிந்துவிடும். சிலகிராமங்களுக்கு வருஷத்தில் அநேக மாதங்களில் ரெவின்யூஇன்ஸ்பெக்டர்வராமலே நின்றுவிடலாம். அப்படிப்பட்ட இடங்களில் இலவுகாத்த கிளிபோல் இருந்துவிடாமல் அவர் இருக்கும் இடத்தைதேடிப் போயாவது காரியத்தைமுடித்துக் கொள்ளுங்கள். அனுபவதாரும் பட்டாதாரும் ஒத்துக்கொண்டாலும் இவ்விதமாக சுலபமாகவே பட்டாமாறுதல் செய்யலாம். இவ்விருகக்ஷிக்காரர்களும் சம்மதப்படாத கேஸ்களில் பட்டா மாற்ற இஷ்டமுள்ளவர்கள் உடனே தாலுகா தாசில்தார்களுக்குமனுக்கொடுத்துக் காரிய சித்தி பெறுங்கள்.

யூனியன் களிலும் முனிசிபாலிடிகளிலுமுள்ளவர்கள் அந்தந்த போர்டுகளின் மெம்பர்களையும் சேர்மன் பிரிசிடெண்டு இவர்களைக்கொண்டும் இந்தக்காரியங்களை நிறைவேற்றிக் கொள்ளுங்கள்.

இவ்வளவு வரையில் நாம் தயாராயிருப்பமானால்பின்னால் நடக்கும காரியங்கள் என்னவென்று விசாரிக்கலாம். முதலில் நமது சென்னைமாகாண சட்டசபையைக் கவனிக்கலாம். இந்தசபையில் மொத்தம் சுமார் 1‥5 அங்கத்தினர். அதில் சுமார் 100 பேர் ஜனங்களால் ஓட்டுக் கொடுக்கப் பெற்று தெரிந்தெடுக்கப்படுவார்கள். மற்றவர்கள் சர்க்காரால நியமிக்கப்படுவார்கள். ஜனங்களால்தெரிந்தெடுக்கப்படுபவர்கள் அநேகவிதமாகப்பிரிக்கப்படுவார்கள் இவர்களை (1) சாதாரண பொது ஜனங்களால் தெரிந்தெடுக்கப்படுபவர்களென்றும் (2) மஹமதியர்களால்தெரிந்தெடுக்கப்படுபவர்களென்றும் (3) இந்திய கிறிஸ்தவர்களால் தெரிந்தெடுக்கப்படுபவர்களென்றும் (4) ஐரோப்பியர்களால் தெரிந்தெடுக்கப்படுபவர்களென்றும் 5 நிலச்சுவான்தார்களால்தெரிந்தெடுக்கப்படுபவர்களென்றும் (6) காப்பி முதலிய தோட்ட விருத்தி செய்பவர்கள் வியாபாரிகள் இவர்களால் தெரிந்தெடுக்கப்படுபவர்களென்றும் (7) சர்வகலாசாலையாரால் தெரிந்தெடுக்கப்படுபவர்களென்றும்பிரித்திருக்கிறார்கள் இவைகளுள்முதலாவதுதான்நமக்கு முக்கியமானது. பொது ஜனங்களால் தெரிந்தெடுக்கப்படும் அங்கத்தினர்தான் அதிகம். ஒவ்வொரு ஜில்லாவிற்கும் இரண்டு அல்லது மூன்று மெம்பர்களும் ஒவ்வொரு முனிசிபாலிட்டிக்கு ஒவ்வொரு மெம்பரும் இவ்விதமாகத் தெரிந்தெடுக்கப்படுவார்கள். சர்க்காருக்குப் பத்துரூபாய் தீர்வை செலுத்துபவர்களெல்லாம இவர்களை நியமனம் செய்வதற்கு ஓட்டுக் கொடுக்கலாம்.

மேற்கண்ட ஏழுபிரிவுகளுக்கும்ஓட்டுக்கொடுக்கும் யோக்கியதையுள்ளவர்களுக்கும் தனித்தனியே ஜாபிதாதயார் செய்வார்கள்.

பொது ஜனங்களால் தெரிந்தெடுக்கப்படுபவர்களின் ஜாபிதா மிழில் தயார் செய்யப்படும். ஒவ்வொருடிப்டிகலெக்டரும் தன் இலாகாவில் நடக்கும் எலெக்ஷனுக்கு ஜவாப்தாரியாவார். இந்த இலாக்காவிலுள்ள கிராமங்களில் பத்துப் பன்னிரண்டை ஒன்றாய்ச்சேர்த்துப் பிரிப்பார்கள்; இப்படிப்பட்ட ஒவ்வொரு பிரிவிற்கும் போலிங் ஏரியா என்று பெயர். இந்த கிராமங்களை முதலில் அகரமுதலாக அடுக்கி அதன்பிறகு ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள ஓட்டர்களையும் அகரமுதலாக எழுதுவார்கள். இந்த ஜாபிதாவில் ஓட்டர்களின் (1) நம்பர் (2) பெயர் (3) தகப்பன்பெயர் (4) விலாசம் (5) யோக்கிய தாம்சம் இவைகள் குறிக்கப்பட்டிருக்கும். அப்படிததயார் செய்த ஜாபிதா ஒவ்வொரு ஜில்லா கெஜட்டிலும் பிரசுரமாகும். டிப்டிகலெக்டராபீசிலும் ஒருபிரதி ஒட்டப்படும். இந்த ஜாபிதாவின் பிரதிகள் டிப்டிகலெக்டர் ஆபீசிலும் தாசில்தார் ஆபீஸ்களிலும், டிப்டிதாசில்தார் ஆபீஸ்களிலும் விலைக்குக் கிடைக்கும், இதன்கூடவே இந்த லிஸ்டில் கண்டபெயர்கள் விட்டுப்போய் இருந்தாலும் அனுவசியமான பெயர்கள் சேர்க்கப்பட்டிருந்தாலும் அது விஷயங்களை இன்ன தேதியில் இன்ன இடத்தில் நேரிலாவது தபாலிலாவது தெரிவித்துக் கொள்ளலாமென்று ஒரு நோட்டீசையும் மேற்படி டிப்டி கலெக்டர் பிரசுரம் செய்வார். மேற்கண்ட விஷயங்களில் ஆக்ஷேபணைசெய்பவர்கள் அதேற்கென்று அச்சிட்டுத் தயாராயிருக்கிற நமூனுக்களில் தெரிவித்துக்கொள்ள வேண்டும். இந்த நமூனுக்களை மேற்படி டிப்டிகலெக்டர் ஆபீஸில் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். இப்படிச்செய்யப்பட்ட ஆக்ஷேபணைகளை அவர் (டிப்டிகலெக்டர்) தன்னுடைய ஆபீஸிலும்தாசில்தார்டிப்டிதாசில்தார்ஆபீசுகளிலும்ஒட்டச்செய்வார். இந்த ஆக்ஷேபணைகளின் பிரதிகள் யார்பெயருக்கு ஆக்ஷேபணை செய்யப் படுகிறதோ அவருக்கும் அனுப்பப்படும். இந்த ஆக்ஷேபணைகளைப்பற்றிய விசாரணை டிப்டிகலெக்டர் முன்னிலையிலும் கலெக்டரால் நியமனம்செய்யப்படும் உத்தியோகஸ்தரல்லாத இருவர் முன்னிலையிலும் நடக்கும். அவர்கள் விசாரித்து மேற்படி ஆக்ஷேபணைகளை பைசல் செய்வார்கள். இந்த ஆக்ஷேபணை மனுக்களை விசாரணை செய்யுங் காலத்தில் அதில் சம்பந்தப்பட்ட எவரும் ஆஜராகித் தங்களுடைய ஆக்ஷேபணைகளைச் சொல்லிக்கொள்ளலாம்

இந்த ஆக்ஷேபணைகளை அனுசரித்து முதலில் தயாரிக்கப்பட்ட ஓட்டர்களின் ஜாபிதாவை திருத்துவதற்கு டிப்டி கலெக்டர் உத்திரவுசெய்வார். இப்படி முடிவாக தயார்செய்த ஜாபிதா டிப்டி கலெக்டராபீஸில் ஒட்டப்படும். ஒவ்வொரு கிராமத்திலும் இந்த ஜாபிதா ஒட்டப்படும். இந்த ஜாபிதாக்கள் விலைக்கும் அகப்படும்.

இவைகளெல்லாம் ஆனபிறகு அந்த ஜில்லாவின் கலெக்டர் அந்தஜில்லாவிற்கு எத்தனைபேர்கள் நியமனம் செய்யப்படுவார்கள் என்றும் அந்தஸ்தானத்திற்குப் போட்டியாக நிற்கும் அபேக்ஷகர்கள் எந்தத்தேதியிலெந்தயிடத்தில் கலெக்டர் முன்பாகத் தெரிவித்துக்கொள்ள வேண்டுமென்றும் ஒரு நோட்டீஸ் பிரசுரம் செய்து தங்களாபீஸில் ஒட்டச் செய்வார்கள், இந்த நோட்டீஸ்அந்தந்தஜில்லா கெஜட்டுகளிலும்பிரசுரமாகும் விரவும், டிப்டி கலெக்டராபீஸிலும், தாலுக்கா ஆபீஸிலும், சப் மேஜிஸ்டிரேட் ஆபீசுகளிலும், போலிஸ் ஆபீசுகளிலும், முக்கியமான போஸ்டாபீசுகளிலும், கிராமச் சாவடிகளிலும் இந்த நோட்டீஸ்ஒட்டப்படும் அபேக்ஷகர்களைபிரேரிப்பவர்கள் அதற்கென்று அச்சிடப்பட்டிருக்கும்நமூனுக்களில் செய்யவேண்டும். இந்த நமூனுக்கள் கலெக்டராபீஸ்களில் இலவசமாய்க்கிடைக்கும். ஆனால், அச்சிட்ட இந்தநமூனுக்கள் அகப்படாத காலத்தில் இந்த பாரத்தை கையெழுத்தாலும் தயாரித்துக்கொள்ளலாம்.

(இன்னும் வரும்) குமாரசாமி.

இராமநாதபுரம்ஜில்லா, வடபட்டி. இரங்கூன் சாக்குவியாபாரம் ஸ்ரீமான் அ. க. வேலாயுத நாடார் அவர்கள் வரவு ரூ 50.

இராமநாதபுரம் ஜில்லா, சிவகாசி. இரங்கூன் ஸ்ரீமான் M. தருமராஜ் நாடாரவர்கள் B. A; B. L; வரவு ரூ 50.

பழைய போஷகப் பிரபுக்கள் வசம் ரூ. 656—0—0.

ஆக கூடி போஷக நிதி வரவு ரூ 2833—0—0.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

விடுமுறை.

நமது மித்திரன் வாசஸ்தலத்தில் நடைபெறும் பிரதம உற்சவமாகிய பங்குனித்திருவிழா நாளாது மார்ச்சுமீ 27 தேதி முதல் ஏப்ரல்மீ 8உ வரையில் நடைபெறும். அவ்வுற்சவத்தின் பிந்திய முக்கிய திருவிழாக்களை உத்தேசித்து நமது அச்சாபீஸ் காரியாலயத்திற்கு ஒருவாரம் விடுமுறை விட்டிருப்பதால் அது சமயம் 11-4-23 யில் வெளிவரவேண்டிய மித்திரனை குறிப்பிட்ட காலத்தில் பிரசுரிக்கத் தாமதமேற்படுகிறதாகையால் இனி 21-4-23ல் மித்திரன் வெளிவரும். இதற்கீடாக 21-3-23 யில் வெளிவந்த பத்திரிகையிலும், 2-பக்கங் கொண்ட விசேஷ அனுபந்தம் வைத்திருந்தோம். இத்தடவை (1-4-23)ல் பிரசுரமாகும் பத்திரிகையிலும் நான்கு பக்கங்கள் கொண்ட விசேஷ அனுபந்தம் வைத்து அனுப்புகிறோம். பின்னும் 21-4-23 யில் வெளியாக இருக்கும் பத்திரிகையிலும் விசேஷ அனுபந்தம் வைத்து அனுப்புவோமென்பதை நமது சந்தா நேயர்களுக்கு அறிவித்துக் கொள்ளுகிறோம்.

மானேஜர்.

நாடார்குலமித்திரன்
ருந்துபிஞூ பங்குனிமீ 19உ

சுற்றுப் பிரயாணம்.

நமது நாடார்குல மித்திரன் அபிவிருத்தியை நாடி நாம் சுமார் ஐந்து மாதங்களாக ஸிலோன் பர்மா முதலிய ஜலப் பிரதேசங்களுக்குச் சென்று சுகமாக நமது வாசஸ்தலம் வந்து சேர்ந்த விபரத்தை முன்னரே குறிப்பிட்டிருந்ததை நேயர்கள் நன்கு கவனித்திருக்கலாம்.

நாம் சென்ற விடங்கள் தோறும் மிகுந்த மரியாதையுடன் வரவேற்று மித்திரன் பாலன்பு கூர்ந்து பேரபிமானங்காட்டி பெரிதும் உதவிபுரிந்திருக்கும் விபரங்களைத் தாம் நாடார்குல நண்பர்கள் நன்கறிந்திருக்கலாம்.

மித்திரன் உற்பத்திக்கு மூலகாரணமாயிருந்த ஸிலோனிலும் மித்திரன் இக்காலத்தில் வாரமொருமுறை வெளியிடுவதற்கு ஹேதுவான புத்துயிர் கொடுத்துதவிய பர்மாவிலும் மித்திரனுக்குத் தகுந்த ஆதரவிருக்கிறதென்பதை நமது பிரயாணத்தில் நேரிலாய்க் கண்டுகொண்டதோடு ஆங்காங்கு வசிக்கும் நாடார்களின் தற்கால நிலைமையும் அவரவர்கள் கொள்கையும் சகலருக்கு மிருக்கும் தேசாபிமானமும் குலாபிமானமும் எத்தன்மைத் தென்பதையும் அறிந்து கொள்வதற்கு நல்லசந்தர்ப்பங் கிடைத்ததன்றோ!

மித்திரனுக்கு வேண்டிய ஒத்தாசை புரிந்த ஸிலோன் பர்மா வாசிகளாகிய நாடார்குல நேயர்களனைவோருக்கும் நமது உள்ளன்பான நன்றி பாராட்டி அவர்கள் உதார குணத்தைப் பற்றி மிகவும் பாராட்டுகின்றோம்.

இன்னமும் மித்திரனை எப்போதும் மறவாத சிந்தையுடையவர்களாய் மித்திரன் அபிவிருத்திக்கு தொடர்ச்சியாக ஒத்தாசை செய்து வருவார்களென்று நம்புகின்றோம்.

நமது பிரயாண ஆரம்பத்திலேயே, ஸிலோன் பர்மா பிரயாணம் முடிந்தவுடன் பினங்கு, சிங்கப்பூர், கோலாலம்பூர், மலாக்கா முதலிய நாடுகளுக்கும் போவதாகவே உத்தேசித்திருந்தோம். ஆனால் ஸிலோனிலும் பர்மாவிலும் சுமார் ஐந்துமாதங்கள் வரையும் காலதாமதப்பட்டுவிட்டதாலும் இரங்கூனிலிருந்து அவசர நிமித்தம் ஊருக்கு உடனே வந்து சேரவேண்டிய அவசியம் நேர்ந்துவிட்டதாலும், பினங்கு சிங்கப்பூர் முதலிய நாடுகளுக்கு மற்றொரு முறை செல்வதெனத் தீர்மானித்திருக்கின்றோம்.

நாம் இரங்கூனிலிருந்து புறப்பட்டு சென்னை வந்து சேர்ந்தவுடன் பினங்கிலிருந்து நமது நண்பரொருவர் வந்திறங்கினர். அவர்கள் மூலம், பினங்கிலும் மித்திரன் மீது மிகுந்த பட்சமுடையவர்கள் பலபேர்களிருப்பதாகவும் பர்மாவிலிருந்தே கோலாலம்பூருக்கும் அவசியம் நாம் வருவதாக எதிர்பார்த்து சகல ஏற்பாடுகளும் முன்னக் கூட்டியே முடித்து வைத்திருந்ததாகவும் சொல்லக்கேட்டு மிகவும் சந்தோஷமடைந்தோம்.

பினங்கு, சிங்கப்பூர் முதலிய விடங்களில் வசிக்கும் அன்பான நண்பர்களைப் பார்க்காமல் வரநேர்ந்தது பற்றி மிகவும் விசனிக்கக் கூடியதேயாயினும், இன்னு மிரண்டு மூன்று மாதங்கள் சென்ற பிறகாவது சிங்கப்பூர் பினங்கு முதலிய விடங்களுக்குச் செல்வதாகத் தீர்மானித்திருக்கிறோமென்பதை அந்நாட்டிலுள்ள நமது நேயர்களுக்கு அறிவிக்கின்றோம்.

நியமனம்.

நாடார் மகாஜன சங்கத்தில் சிறிதுகாலம் பிரசாரகராயிருந்தவரும், பால்ய குலாபிமானியுமாகிய மிஸ்டர் ஏசுதாஸ்நாடாரவர்கள் 15-3-23முதல் நமதுமித்திரன் காரியாலயஉத்தியோகஸ்தர்களில் ஒருவராயமர்ந்திருக்கிறார். திருநெல்வேலிஜில்லா நான்குநேரிதாலுகா சிதம்பர புரத்தில் நாளது ஏப்ரல்மீ 5, 6 தேதிகளில் நடைபெறப் போகும் மகாநாட்டிற்கு அன்னவர் நம்பிரதிநிதியாக விஜயஞ்செய்வதோடு, சிறிதுகாலம் அவ்வட்டகையில் நமது மித்திரன் அபிவிருத்தியை நாடி சுற்றுப் பிரயாணஞ் செய்வார்: மித்திராபிமானிகள் ஆதரித்து அனுப்புமாறு வேண்டுகிறோம்.

குறிப்புகள்.

இரங்கூனில் நமது மித்திரனின் பிந்திய புதிய போஷகப் பிரபுக்கள்.

நமது அதிபரவர்கள் இரங்கூனிலிருந்து இந்தியாவுக்கு திரும்பிவந்த பிற்பாடு நண்பர் ஏசுதாஸ் மூலமாய் மரவியாபாரம் ஸ்ரீமான் சி. சாமியய்யாநாடாரவர்கள் ரூ 61ம் கார்ப்பொரேஷன் இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் பெ. சி. ப. முத்தையநாடார் அவர்கள் ரூ 50-ம், மரவியாபாரம் ஸ்ரீமான் செ. சுடலைமுத்து நாடார் அவர்கள் ரூ 50-ம் போஷகப்பிரபு நிதிக்குக்கொடுத்து அனுப்பியிருக்கிறார்கள். இதன்முழுவிபரத்தையும் புதியபோஷகப்பிரபு இனத்தினிருதியில் இணைத்திருக்கிறோம். நமது மித்திராபிமானிகளாகிய புதிய போஷகப்பிரபுகளுக்கு நமது அன்பான வந்தனத்தை அளிக்கின்றோம்.

9-வது மகாநாடு.

நமது நாடார் மகாஜன சங்கம் 9-வது கான்பரன்ஸை எந்த விடத்தில் நடத்த ஏற்பாடு செய்கிற தென்பதை தீர்மானிக்கஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டது நாம் அறிந்ததே. நாடார் மகாஜன சங்கக் கௌன்ஸிலால் எத்தனையோ கமிட்டிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றனவாயினும் வேலை செய்யாமலிருக்கிற வகையில் ஒன்றுக்கொன்று தோற்றுப் போனவைகளல்லவென்றே நினைக்கிறோம். அத்திபூத்தாற்போல் ஏதோ இரண்டொரு கமிட்டிகள் வெளியேறி வேலை செய்தன. அவைகளும்தங்களுடைய முழுப்பொறுப்பையுமுணர்ந்து பூராவேலையையும் செய்து முடித்ததாகத்தெரியவில்லை. அவைகளெல்லாம்வெறும்பெயரளவிலேயேகமிட்டிகளாயிருக்கின்றன அவைகளைப்போல்சமபத்தில் 9 வது கான்பரன்ஸை கூட்டி வைக்க ஏற்பட்ட கமிட்டியும்அசிரத்தையாயிருக்குமானல் அது சிறிதும் பொருத்தமாகாது. 9-வதுகான்பரன்சு நடைபெற வேண்டியகாலம்மிகவும் சமீபத்தில்தானிருக்கிறது. அவசரத்தில் அவதிப்படுவதைக் காட்டிலும் காலா காலத்தில், காரியத்தைக் கவனித்து தக்க ஏற்பாடு செய்வதுதான் உத்தமமாகும். வெள்ளம்வந்தபிற்பாடு அணைகட்டுவது உசிதமான காரியமல்லவென்பதைஞாபகப்படுத்துகிறோம்.

பாலியர்களே!

இதுவல்லவோ க்ஷத்திரிய வீரம்!

வெளித் தோற்றத்திற்கும் பெயருக்கும் க்ஷத்திரியத்தன்மை பொருந்தாதென்பது வெளிப்படை. ஆனால் வீர, தீர, சூர பராக்கிரமமாய், உயிர்ழக்க நேரிடினும் முன்வைத்தகாலை பின்வைக்காமல் காரியத்தில் கண்ணும் கருத்துமாயிருந்து காரிய சித்தியாக்குவதே க்ஷத்திரிய வீரமும் குணமும் தன்மையுமாகும். இப்படி இயற்கை க்ஷத்திரிய இரத்தம் நம்மனோர் தேகத்தில் இன்னும் ஓடிக்கொண்டு தானிருக்கிறதென்பதை சமீபத்தில் கண்டறியசந்தர்ப்பங்கிடைத்தாவது: ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டகையில்; நமது நாடார்மகாஜன சங்கத்தின் நன்னோக்கத்தைபரவச்செய்ய வேண்டி தீவிரப்பிரசாரஞ் செய்த நம்குலாபிமானிகளான 32பேர்களின்மேல் பொறுமை கொண்டபோலிகள் பொய்க்கதையைக்கட்டிவிட்டார்கள். கவர்ன்மெண்டார் தப்பபிப்பிராயங் கொள்ளும்படிபலபோலிப்போதனைகளைச்செய்தார்கள். நமது க்ஷத்திரிய வீரசிகாமணிகளுடைய முயற்சி கிளர்ச்சிகளை எல்லாம் தளர்ச்சி செய்யும்பார்த்தார்கள். பொய்சாக்ஷிசொல்லி புகழடையவும் பார்த்தார்கள். நமது க்ஷத்திரிய சிங்கங்களுக்கு இடுக்கண் பல ஏற்றிப் பார்த்தார்கள். ஜாதியிருமாப்புக்கொண்ட சில சண்டாளர் கீழ்தர கலால் உத்தியோகஸ்தர்களின் பொய்ப்போதனைக்கு தங்கள் காதுகளை இரவல்கொடுத்து ஏமாந்தவர்களாய் கவர்ன்மெண்டார் நமது வீரர்களை வீணில் சிறிது காலம் சிறையிட்டுப்பார்த்தார்கள். தலைக்கு ஒருவருட மிருவருட மென்று தண்டனையையும்விதித்துப்பார்த்தார்கள் இதற்கெல்லாம்அசையாமல் எல்லாம் தெரியும். எதற்கும் அஞ்சோம். எங்கள் பக்கம் ஈசனிருக்கிறான். வந்தது வரட்டும். நாங்கள் சத்தியத்தின்மேல் நிற்கிறோம். சாதிக்கும் வன்மை எங்கள் சாதிக்குரியது. பொய் புரட்டு உருட்டுக்கு அஞ்சிப்புறங்கொடுத்து ஒதுங்குவது எங்கள் வழக்கமுமில்லை. அது எங்கள் குல தர்மமுமில்லை. நியாயம் என்றும் நிலைபெறும். சிறையிட்டுச் சிறைப் படுத்துங்காலம் இதுவல்ல! சத்தியத்திற்கும் உண்மைக்கும் பாடுபட்டு காராக்கிரகத்திற்கு சென்று மீண்டால் கழுத்தில் புஷ்பாபரணங்கள் அணியப்படுவதை ஒவ்வொருவரும் ஆழ்ந்து ஆராய்ந்துபார்க்கவேண்டும். மேலும் எவ்வித இடையூர்கள் வந்தாலும் ஏற்றுக்கொள்ளத்தயார் என்று மார்தட்டி முன்வந்த நமது குலாபிமானச்சிங்கங்கள் தங்கள்ன் னேற்றத்திற்குப் பங்கம்வாராமல் பாதுகாத்துக் கொள்ள வைராக்கிய சுத்த க்ஷத்திரிய இரத்தம் தேகத்தின் ஒவ்வொரு நாம்புகளிலும் ஓடப்பெற்றவர்களாய் முன்வைத்தகாலை பின்வைக்காமல் குலமுன்னேற்ற இயக்கத்தில் சதாகண்ணும்கருத்துமாயிருந்த அவர்களின்மேன்மைக் குணத்தை எங்ஙனம் புகழ்வது! அவர்களுடைய வீரத்தன்மையை எப்படி எற்றித்துதிப்பது. அவர்களுடையஇடுக்கண்களுக்கு எவ்வாறு இரங்குவது! இவைகளை எல்லாம் சகித்துக் கொண்டிருந்த அவர்களுடைய பொறுமைக்குணத்தை நாமெப்படி போற்றுவது! கடைசிவரையில் கரைகண்ட காரியசித்த வல்ல கன்னிய சீலர்களை எங்ஙனம் பாராட்டுவது! எல்லாம் ஈசன் செயலே! மறுபடியும் மதுரையில் நடந்த அப்பீல் தாவாவில் மாறுத மனதுடைய நம்குல மக்கள் மாசற்றவர்கள் என்று தீர்மானிக்கப்பட்டதை உலகம் அறிந்து உண்மையை உணர்ந்து கொண்டது. பொய்க் கதை கட்டினபோலிகளும் தங்கள் போதனை பலிக்காததுகண்டு ஏமாற்றமடைந்தார்கள். பொறுப்பற்ற வார்த்தைகளுக்கு செவிசாய்த்த உயர்தர உத்தியோகஸ்தர்கள் தங்கள் தெரியாமைக்கும் அறியாமைக்கும் வருந்துகிறார்கள்.

பாலியர்களே! பார்த்தீர்களா? பாரினிலிருக்கும் பற்பலர் களுடைய மணப்பான்மையை. எது எப்படியானாலும் சத்தியந்தான் நித்தியமென்பதை அறிவீர்களா? பொய்ப்போட்டி மெய்முன்னிலை நிற்காது என்பதை தெரிந்துகொண்டீர்களா? தற்சமயம் உலகம் எவ்வித நிலைமையிலிருக்கிறதென்பதை உணர்கிறீர்களா? உலகத்தில் இப்போது நிகழ்ந்து கொண்டுவரும் ஒவ்வொரு காரண காரியங்களும் பிற்காலத்தில் நமக்குசாதகமாகவோ பாதகமாகவோ எதிர்காலத்தில் ஒரு லக்ஷியத்தை அடிப்படையாகக்கொண்டு நமதுவாழ்க்கையைப்பாதிக்குமென்பதை சிந்திக்கிறீர்களா? உலகத்தின்போக்கு எத்தகையதாயிருக்கிற தென்பதை தெரிந்து அதற்கு தகுந்தாற்போல் நமது போக்கும் சரியாயிருக்கிறதா வென்று கவனித்தீர்களா? ஆனால் அதனின் நம் மாறுபட்டதாயிருந்தால் அதற்கு தகுந்தபடி சிறிதுசிறிதாக சீர்படுத்திக்கொள்ள எண்ணுகிறீர்களா? உலகத்தில் பலவிதமான தோற்றங்களும், உணர்ச்சிகளும், அடிக்கடி காலச்சக்கிரத்தின் வேகத்திற்கு ஏற்றவாறு உண்டாகிக்கொண்டு வருகிறது. அவைகளில் எது உண்மையானது, நியாயமானது,என்றும் நிலைபெறக்கூடியசத்தியமானதெதுஎன்றுகூராய்ந்தறியவேண்டியதிருக்கிறது அப்படிபபட்ட உண்மைத்தோற்றமும்நல்லஉணர்ச்சியுந்தான் கடைசிவரையில்நிலைபெறுமென்பதை நமதுவீரசிகாமணிகள்காட்டிவிட்டார்கள். அவர்கள் எந்தசற்காரியத்திற்காக போராடினார்களோ அந்த போராட்டத்தில் வெற்றி பெற்று ஜெயசீலர்களாய் விளங்கினார்கள். அதுபோல் பாலியர்களே! நாமும் சத்தியமானதும், நியாயமானதுமான நமது இயக்கங்களுக்கும் கிளர்ச்சிக்கும் எவ்வித இடையூர்கள்வந்தாலும் நியாயமான வழிகளில் போராடுவதற்கு பின் வாங்கக்கூடாது. தற்சமயம் ஒவ்வொரு நிமிஷ நேரத்திலும் நிகழ்ந்துகொண்டு வரும் காரண காரியங்களும் நம்முடைய எதிர்கால வாழ்க்கையில் பயனளிக்ககூடியவைகளாயிருப்பதால் அவைகளின் தாரதம்மியங்களைசீர்தூக்கி உசிதாஉசிதங்களைக் கவனித்து ஒழுகவேண்டியது பாலியர்களே!நமது கடமை என்பதை மறந்துவிடுவதற்கில்லை.

P. T R. மேனிகாதன்.

கவனிப்பு.

மதுரை, விருதுபட்டி, சிவகாசி சாத்தூர், திருமங்கலம், திண்டுக்கல் திருச்சுளி, நிலக்கோட்டை. சின்னையாபுரம், கமுதி, கல்லூரணி முதலிய இடங்களுக்கு நமது ஏஜெண்டுகள் கூடிய சீக்கிரம் வருவார்கள் நமது சந்தா நேயர்கள் நேரில் ரசீது பெற்றுக் கொண்டு பணத்தை செலுத்திவிட வேண்டுகிறோம்.

மானேஜர்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

ஜார்ஜ் மன்னர்.

தம் காலத்தை எங்ஙனம் செலவழிக்கிறார்?

ஜார்ஜ் மன்னர் உடுத்திக் கொள்வதற்குத் தொண்ணூறு யூனி பாரங்களை வைத்துக் கொண்டிருக்கிறார். வேட்டையாடுகையில் உடுத்திக் கொள்ளும் உடுப்பை அணிந்து கொள்ளும்போது அவர் பார்வைக்கு மிகவும் நன்றாய்க் காணப்படுகிறார். மிகவும் நல்ல உழைப்பாளி. இவர் வேலை செய்வதே தம்கடமையாகக் கொண்டிருக்கிறார். காலை 7-30 மணிக்கு எழுந்திருக்கிறார். பின்னர் தேயிலைப்பானத்தை அருந்திவிட்டுக் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்கிறார். காலை போசனமாகச் சாதாரண உணவையேஇவர் அருந்துகிறார். பின்னர் சில சொந்தக்கடிதங்களைப் பார்வை யிடுகிறார். இதற்குப் பின்னர் அரைமணிநேரம் கழித்து ஹைட் பார்க்கில் குதிரைச் சவாரி செய்யப்புறப்பட்டு விடுகிறார். குதிரைச்சவாரி செய்யும்போது வேல்ஸ் இளவரசனாயினும் அல்லது வேறு பிள்ளைகளில் ஒருவரையாகிலும் உடன் அழைத்துச் செல்வது வழக்கம். சவாரி செய்தானவுடன் அரண்மனைக்குச் சென்று குளித்து விடுகிறார். இதனால் இவர் காலையிலே இரண்டு தடவை குளித்து விடுகிறார். இதற்குள் காலை 8-30 அல்லது சுமார் 9-மணியாகி விடுகிறது. ஒன்பது முதல் கொண்டு பத்து மணிவரை பத்திரிகைகளை வாசிக்கிறார். இதற்குப்பின்னர் அரைமணி நேரம் வரை தம் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுடன் சம்பாஷிக்கிறார். மனைவியுடனும் பிள்ளைகளுடனுமே அதிகமாகப் பேசுவார். இதைமுடித்து விட்டுக் காரியாலயத்திற்குச் செல்கிறார். காலைபத்தரை மணி ஆனவுடன் அரசரின் அந்தரங்கக் காரியதரிசியான லார்டு ஸ்டாம் போர்டுஹாம் அரசரைக் காண்கிறார். இவர் அரசர் பதிலளிப்பதற்கு வேண்டிய கடிதங்களையும் அரசாங்கப்பத்திரங்களையும் இதர உத்தியோக ஜாபிதாக்களையும் தம்முடன் கொண்டு வருகிறார். இவைகளை யெல்லாம் பார்த்து என்னென்ன செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்து விடுகிறார். தம்முடைய தகப்பனார் பாட்டியார் ஆகிய இவர்களைப்போல் இவரும் நல்ல மனிதர்களை வரவழைத்து அவர்களுடன் பல்வேறு விஷயங்களைப் பற்றி சம்பாஷிப்பதுண்டு. பகல் பன்னிரண்டு மணிக்குத் தம் குமஸ்தாவிடம் கடிதம் யாராருக்கு எம்மாதிரி எழுத வேண்டு மென்பதைப் பற்றிச் சொல்லுவார். எப்போதாகிலும் ஒன்றிரண்டு கடிதங்களைத் தாமாகவேஎழுதுவார். பன்னிரண்டரை மணிக்குமேல் தர்மங்களுக்குச் சந்தா கொடுப்பார். பகல் ஒருமணிக்கு பகல் ஆகாரத்தைத் தம் குடும்பத்துடன் சேர்ந்து உட்கொள்வார். சண்டை ஏற்பட்டதிலிருந்து பக்கிங்ஹாம் அரண்மனையில் அதிகமான விருந்துகள் நடைபெறுவதில்லை. அப்படி விருந்துகள் நடை பெற்றாலும் சாதாரண ஆகாரமே போடப்படுவது வழக்கம்.

ஆகாரம் புசிக்கும்போது மேஜையின் ஒருபக்கத்தில் ஜார்ஜ்மன்னரும் இன்னொரு பக்கத்தில் மேரி அரசியும் உட்கார்ந்து கொள்வது வழக்கம். சில சமயங்களில் அரசரின் தாயாரான அலக்ஸாண்ரா ராணியாரும் உடனுட்கார்ந்து கொண்டு போஜனம் அருந்துவர். சில சமயங்களில் காருட்டுக் கோமகனும் மந்திரியொருவர் அல்லது தூதர் ஒருவர் அல்லது அரசரின் நெருங்கிய சிநேகிதர் ஆகிய இவர்களில் ஒருவராகிலும் உடனுட்கார்ந்து உணவு அருந்துவது வழக்கம்.

பகல்போஜனம் ஆனபின்னர் அரசர் வேலை ஒன்றுமில்லாமல் இருந்தால் ஒரு மணி சாவகாசத்தைப் பத்திரிகைபடிப்பதிலாகிலும் அல்லது நண்பருடன் பேசுவதிலாகிலும் கழிக்கிறார். புத்தகங்களைப் படிக்கும் விஷயததில் இவருக்கு அதிகமான ஆர்வம் உண்டு. இவர் அரசாங்க சம்பந்தமான புத்தகங்களை அதிகமாகப் படிக்கிறார். இவருக்குச் சரித்திரக்குறிப்புகளில் அதிக ஆர்வம் உண்டு. இங்கிலாந்தை அரசாண்ட ஜார்ஜ் மன்னர்களின் சரித்திர விஷயத்தில் அவருக்குப் பிரியம் அதிகம். அமெரிக்கர்கள் சுதந்திரத்திற் காகச்செய்த போராட்டத்தைப் பற்றி இவர் செவ்வையாய்ப்படித்து உணர்ந்திருக்கிறார்.

ஜார்ஜ் அரசரின் விளையாட்டுகள் புத்தகங்களைப் படிப்பதும்வேட்டையாடிச்சுடுவதும் சவாரிசெய்வதும் தபால் முத்திரைகளைச் சேகரிப்பதுமாகும்.

பகல் 3-30 மணி ஆனவுடன் அரண்மனையை விட்டுவிட்டுத் தொழிற்சாலைகளையோ சிகிச்சைச்சாலைகளையோ பார்வையிடச் செல்கிறார். இல்லாவிட்டால் ஏதாவதொரு ஞாபகார்த்த காரியத்தைச் செய்யச்சொல்லுகிறார். 5மணிக்குள் திரும்பவும் அரண்மனை வந்துசேர்ந்து விடுகிறார். அதற்குப்பின்னர் வெளியில் செல்வதில்லை. அரசருக் குறிய ஆப்த நேயர்கள் மிகச் சிலரேயாவர். இவர்கள் அனைவரும் அரசரிடம்மிகுதியும் பற்றுள்ளங்கொண்டவர்களாவர். இவர்களுடன் அரசர் உலாவவோ சீட்டாடவோ அல்லது நண்பர்களைக் காணவோ செல்வதும் வழக்கம்.

மாலை நேரங்களை அரசர் குடும்பவிஷயங்களில் செலவழிப்பது வழக்கம். இராப் போஜனத்திற்குப் பின்னர் அரசரும் அரசியாரும் ஏதாவதொரு நாடகக் கொட்டகைக்குச் செல்வார்கள். இல்லாவிட்டால் டிராயிங் ரூமில் உட்கார்ந்து கொண்டும் படித்துக்கொண்டுகாலத்தை கழிப்பார்கள். எப்போதாகிலும் அரசர் தம் நண்பர்கள் யாரேனும் நோயாய் இருந்தால் அவர்களை அந்தரங்கமாய்ப் போய்ப் பார்வையிட்டு வருவார். இரவு பதினொரு மணிக்கு அரசர் சயனித்துக்கொள்கிறார்.

தமிழகம்.

நமது பாலியவீரர்

ஐரோப்பிய மஹா யுத்தத்தில் பிரிட்டிஷ் பட்டாளத்தில் சேர்ந்து பாலஸ்தீனப் போர்முனையில் வெகு திறமையுடன் சமர்புரிந்து வெற்றிபுனைந்த இந்தியர்களுள் நல்வரான ஸ்ரீ V.A. அஸரியா நாடாரவர்கள் (late of King's Royal Rifles Pelastine) சென்னையில் தமது உத்தியோகபதவியை ஏற்றுக் கொள்ளுமுன் தாய் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருக்கிறார். 10-3-23தேதியில் பறமன்குறிச்சியில் தம் உறவினரிடம் தங்கி அன்றிரவு பொதுஜனவேண்டுகோட்கிணங்கி கல்வி முன்னேற்றத்தைபபற்றி உபந்நியாசம் செய்தார். இதைக் கேள்வியுற்ற தென்னாட்டுப்பிரபல மிராஸ்தார்களிலொருவரும், மித்திரன் போஷகப் பிரபுவும், குலாபிமானியுமான தண்டுப்பத்து ஸ்ரீயான் சோ. செல்லத்துரை நாடார் அவர்கள் தம்மூருக்கும விஜயஞ் செய்யுமாறு விருப்புற்றழைத்தமைக் கிணங்கி கனம் நாடார் அவர்கள் 11-3-23 காலையில் தண்டுப்பத்துக்கு விஜயமானார்கள். அவ்வூர் பிரபலஸ்தர்கள் மிகுந்த குதூகலத்துடன் பாண்டுவாத்திய கோலாகல வைபவமாய் வரவேற்றுபசரித்தனர். நமது பால்யவீரரை கனம் செல்லத்துரை நாடாரவர்கள் சபையோருக்கறிமுகம் செய்து வைக்கையில் இக்கனவானின் முன்னோர்கள் தண்டுப்பத்து வாசிகளென்றும், அதிபாலியத்தில் இங்கிலீஷ் பட்டாளத்தில் சேர்க்கப்பட்ட முதல் இந்தியரும் இம்பீரியல் சர்வீஸ் உயர்தர உத்தியோகம் பெற்ற முதலாவது நாடாருமான இப்பால்ய சிறார் தம் முன்னோர்களின் பூர்வீகவாசஸ்தலமாகிய நம்மூருக்கு இன்று விஜயஞ் செய்தது சந்தோஷிக்கத்தக்கதென்றும் தமது அரியயுத்தசேவையில் நாடார் ஜனசமூகத்திற்கும் தேசத்திற்கும்கண்ணிய முண்டாக்கியஇப்புண்யசீலர் நீடிய ஆயுளோடிருக்க வேண்டுமென்றும் வாழ்த்தினார்கள். கனம் அஸரியா நாடார் அவர்கள் நீண்டகரகோஷங்களுக்கிடையில் பதிலளிக்கையில் நாடார்கள் ஒற்றுமையாயிருக்க வேண்டுமென்றும், இவ்வூரில் ஒரு ஹைஸ்கூல் ஏற்படுத்தி மாணவர்களுக்கு இலவசமாய் கல்விபயிற்றுவிக்க வேண்டு மென்றும், நாடார்களின் இயற்கையானஸ்பாவத்தின்படி எக்காலமும் இராஜ விஸ்வாசிகளாயிருக்கவேண்டு மென்றும், தென்னாட்டில் பெண்கல்வி அபிவிருத்தியாகவேண்டு மென்றும், தாழ்ந்த நிலைமையிலுள்ளவர்களை கைதூக்கிவிடவேண்டு மென்றும் நயப்பிட்டுப் பேசி தம்மையுபசரித்ததற்கு மனமார்ந்த வந்தனம் செலுத்துவதாகவும் சொன்னார். கடைசியில் கூட்டம் இனிது கலைந்தது. கனம் நாடாரவர்கள் மாலை 5-மணிக்கு சந்தோஷ ஆரவாரத்துடன் வழியனுப்பப்பட்டார் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

ஐரோப்பாவின் நிலைமை.

உலகத்திலுள்ள எல்லா தேசங்களும் எப்போதும் ஒரே நிலைமையிலிருந்து கொண்டே வந்திருப்பதாகத் தெரியவில்லை. ஒவ்வொரு தேசமும் வெவ்வேறு காலங்களில் சகல துறைகளிலும முன்னேற்றமடைந்து உலகத்திற்கே திலகம் போல் விளங்கிக் கொண்டிருந்திருக்கின்றன வென்பது சரித்திர பிரமாணம். 16-வது நூற்றாண்டிலும், 16-வது நூற்றாண்டிற்கு முன்பும இந்தியாவானது சகல துறைகளிலும் அபிவிருத்தியடைந்து சிறந்து விளங்கிக்கொண்டிருந்தது. இதரதேசங்களைப் போல் இந்தியா தனக்கு அத்தியாவசியமாக வேண்டிய உணவுப்பொருள் முதலியவைக்குமற்றதேசங்களுடைய உதவியை விரும்பியும் எதிர்பார்த்தும் நின்றதில்லை இதுவிஷயத்தில் இந்தியா அப்போதும் இப்போதும் எப்போதும் ஒன்றுபோல் தானிருக்கின்றது. மேலும் சகல விதமான மதஸ்தாபனங்களுக்கும் இந்தியா தான் உறைவிடமாயுமிருக்கிறது. ஆகையால் பற்பல மதஸ்தர்களுடையவும மதாச்சாரிகளுடையவும அபிமானமும ஆதரவும் இந்தியாவிற்கு கிடைத்துக் கொண்டிருக்கிறது. அப்படியிருந்தும் இந்தியாவினுடைய இயற்கை பிரகாசம்மங்கியிருப்பதற்கு காரணங்கள் பல உள. இந்தியாவினுடைய ஏற்றகாலம் 16-வது நூற்றாண்டின்இறுதியிலேயேகொஞ்சம் கொஞ்சமாய் தளர்ச்சியுற ஆரம்பித்துவிட்டது. 17-வது நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே இங்கிலாந்து விழித்துக்கொண்டு மிக்கபரபரப்புடன் தனது அபிவிருத்தியைநாடி வேலைசெய்ய ஆரம்பித்தது. இதுவே ஐரோப்பாவின் உன்னத பதவிக்கு அஸ்திவாரமாகும். ஐரோப்பாவிலுள்ள இதர தேசங்களைக் காட்டிலும் இங்கிலாந்து இடைவிடாது தனது அபிவிருத்திக்கு சதா போராடிக்கொண்டு, தனதுமுழுமுயற்சியையுங்காட்டி, பாடுபட்டது. இங்கிலாந்தானது ஒவ்வொரு முயற்சிக்கும் கிளர்ச்சிக்கும் முன்மாதிரியாயிருந்து ஐரோப்பாவிலுள்ள இதர தேசங்களின் முன்னேற்றத்திற்கும தூண்டுகோலாயிருந்தது. கடந்த மூன்று நூற்றாண்டுகளுக்குள் ஐரோப்பாவின் சரித்திரத்தை கவனித்தால், கிரீஸ் இட்டாலி பிரான்சு பிரிட்டன் முதலிய தேசங்களும் ஒவ்வொரு சாதனத்தைக் கொண்டு வெவ்வேறு காலங்களில் உன்னத ஸ்திதியில் மிக்கச் செல்வாக்குடனிருந்திருக்கின்றன. மேலும் இக்காலத்தில்ஐரோப்பாவானது மதம் நீதி ஆசாரம் ஒழுக்கம் முதலியவைகளில் சிறிதும் தவறாமல் சத்தியத்துடன் நடந்து வந்திருக்கிறது. ஆனால் சமீபத்தில் நடந்த மகாயுத்தத்திலஐரோப்பாசத்தியவழியை கைவிட்டது. சொல்லுவதொன்றுமசெய்வதொன்றுமாகிவிட்டது. உடன்படிக்கைகளெல்லாம்காற்றில் பறந்தன. சத்தியம் தவறியவுடனேமுறைதாரதம்மியம் உசிதா உசிதம் என்ற வரம்புகளு மில்லாமல் போய்விட்டது. யுத்தஞ்செய்வதிலும் சத்தியத்தை யனுசரித்து சிற்சில விதிகளுக்கு அடங்கி சதுர்வித உபாயங்களைக்கொண்டு எதிரியை மடக்குவது தான்வழக்கம். அப்படிப்பட்ட பழக்கவழக்கங்களுக்கும்விரோத மாகமகாயுத்தத்தின்போது, ஒருவரைஒருவர் கெடுத்து அந்தந்த தேசங்கள் எவ்வளவுதூரம பாழ்படுத்த முடியுமோ அவ்வவ்வழிகளில் எல்லாம் தங்களுடைய சாமர்த்தியத்தை காட்டினார்கள். நாடுகளை எல்லாம் காடாக்கினார்கள். குபேர பட்டணங்களைப் போலுள்ள எண்ணிறந்த பட்டணங்களையும் நகரங்களையும் பெரியபெரிய கட்டடங்களையும்கோட்டைகளையும்குட்டிச்சுவராக்கி குவித்தார்கள். அணைக்கட்டு பாலம் முதலியவைகளை உடைத்து தகர்த்தார்கள். ஆயுதங்களைப்போல் மனிதர்களைவெட்டினார்கள். எனவே அவர்களுடைய ஆராய்ச்சி அறிவு அனுபோகமுறைகளை எல்லாம் இந்தவழியில் ஒரேயடியாய் செலுத்திவிட்டார்கள்.

ஒரு தேசத்தினுடைய விழ்ச்சிக்கும் அத்தேசத்தின்தாழ்வுகாலத்திற்கும்அறிகுறியாக இத்தகைய சம்பவங்கள் நிகழ்வதோடு நான் பெரியன் நீ சிறியவன் என்ற போட்டியில் ஒன்றைஒன்று நசுக்கிவிட்டுதான் தலைமைப்பதவியடையப்பார்க்கும்போது சண்டை வராமலிராது. அதன் பயனாக தேசத்தில் செல்வ நிலைகெட்டு பொருளாதார நிலைமை குன்றி, அன்னியர் ஆதிக்கத்திற்குப் படிப்படியாக உள்ளடங்கவேண்டியது வரும். ஏனென்றால் தங்களுக்குள் ஒன்றோடொன்று ஒற்றுமை யில்லாமல் போகவும் வலிமை யுடனிருக்கும் அன்னியர்களுடைய சகாயத்தை எதிர்பார்க்கவேண்டியது வரும். அதன் மூலமாக அவர்கள்தங்களுடைய ஆதிக்கத்தை நிலைநாட்ட முயல்வார்கள். இப்படித்தான் இந்தியா ஒரு காலத்தில் தனக்குள்ஏற்பட்டசண்டைச்சரவால் ஒற்றுமையின்றி நெல்லிக்காய் மூட்டைபோல் ஒன்றுக்கு ஒன்றுகெடுத்துக்கொள்ள போட்டிபோட்டுப்போராடிய பலாபலனை இப்போது அனுபவித்துஉண்மைஅறிந்து, தனது அறியாமைக்கும் தெரியாமைக்கும் பரிதபிக்கிறது. அந்த போட்டியால் தான்இந்தியாஐரோப்பாவிற்கு அடிமையானது. தெற்கேயடித்தநாறு திரும்பியடிக்கிறதைப்போல்இவ்வித நிலைமைஐரோப்பாவிற்கும்ஏற்பட்டுவிட்டது. அக்காலத்தில் இந்தியாவுக்கு ஏற்பட்ட நிலைமை இப்போது ஐரோப்பாவிற் கேற்பட்டிருக்கிறதாவென்று கவனிப்போம் ஐரோப்பியதேசங்கள் ஒன்றை ஒன்றாக்ரமித்துக் கொண்டுவிட்டது அந்தவகையில் பாக்கியில்லை. பொருளாதார நிலைமையும் குன்றிவிட்டது. அந்த வகையிலும் பாக்கியில்லை: இன்னும் யாதாவது சண்டை செய்ய சக்தியிருக்கிறதென்றுகவனித்தால் அந்தவகையிலும்பாக்கியில்லை. ஏனென்றால்இப்போது ஜெர்மானியர்சண்டையில்சாத்வீகப்போராட முன்வந்ததேஅதற்குதாரணம். ஆனால் இன்னும் அன்னியர்களை ஒத்தாசைக்கு அழைப்பதில் தான் பாக்கியிருக்கிறது. அதுவும் அநேகமாய் பாக்கியில்லை யென்றே சொல்லலாம். அமெரிக்காதான் ஏதோ ஊடாடிக்கொண்டு திரிகிறது. தற்சமயம் சகல வழிகளிலும் அமெரிக்காதான் சிறந்துவிளங்கிக்கொண்டிருக்கின்றது ஐரோப்பா பணத்திற்கும் மத்தியஸ்தத்திற்கும் அமெரிக்காவைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அமெரிக்காவே!எல்லாவற்றிற்கும்உன் தயவுதான்வேண்டியதிருக்கிறது ஐரோப்பாவின்நிலைமையெல்லாம் உனக்குத் தெரிந்ததுதான். அதனுடைய முன்னேற்றத்தைகருதி சிறிது கைதூக்கிவிடுவாயாக! ஆனால் இந்தியா சீர்கெட்டநிலைமையிலிருக்கும்போது ஐரோப்பியதேசங்கள் இந்தியாவுக்கு உதவிசெய்வதில் போட்டிபோட்டு கடைசியில்இந்தியா எப்போதும் தன்னை எதிர்பார்த்து நிற்கும்படிசெய்ததுபோல் உன்னுடைய ஆதிக்கத்தையும் அதிகாரத்தையும் செலுத்திவிடாதே!. அது மகாப்பாவம். அமெரிக்காவே உன்னை அண்டி வந்தவர்களை ஆதரிப்பாயாக!

மேலத்தெய்வீக விருக்ஷம்.

மாவீடுபெண்ணை என்னும் பேரூரிலுள்ள நாடார்களுக்குப் பூர்வீகமாகச் சொந்தப்பட்டு முழுமையாக பாத்தியப்பட்ட புண்ணிய பூமியானது தற்போது அதிபோகத்திலிருக்கக் கூடியதுமான வயல் ஓரத்தில் கடம்பாற் குளக்கரை யோரத்தில் மேல்திசையில் அமைந்த தெய்வீக விருக்ஷ மகிமையை முன்னரே விளம்பரப்படுத்தி யிருந்தனம். அதன் சொந்தக்காரரான ஷை ஊர் நாடார்கள் உயர்ந்த சுந்தரமான பந்தலலங்கிர்தம் செய்து ஆயிரக் கணக்கான ஜனங்கள் சௌகரியமாய் நிற்கக்கூடிய விதமாக நிலத்தை ஒழுங்குப்படுத்தி கோவிலை முன்னைவிட ரமண்யமுடன் உயரத்தில் செங்கற்பாவி ஒழுங்குடன் விளங்கவும் நூற்றுக்கணக்கான பிணியாளர்கள் அநேக நாள் தங்கி இருப்பதற்குப்போந்த சௌகரியம் செய்து கொடுத்து புண்ணிய ஸ்தலங்களில் தலைமை பெற்றனது, எனுமாறு நித்திய மங்களவாத்திய வேதொனி கேட்குமாறு ஒழுங்குப்படுத்தியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. செவ்வாய் வெள்ளி முதலிய கிழமைகளில் வந்துகுவியும் ஜனங்களுக்கு எண்ணிக்கை யில்லை, குற்றமற்ற மெய்ஜோதி சகல ஆலயங்களையும் விட்டுவிட்டு இவண் அமர்ந்து விட்டனவோவென யாவரும் ஐயுறுகின்றனர். பிரதிமாதம் கடைசி வெள்ளிக்கிழமையில் வந்து குவியும் ஜனங்களை ஏற்றுக்கொள்ளத்தக்க இடம் அங்கில்லாமைக்கு விசனிக்கின்றோம். இம்மேலமரத்தின் ஆலயத்தில் கூடிய சீக்கிரத்தில் உற்சவம் நடத்த ஆலோசனை செய்திருக்கின்றனர். பின்னர் எழுதுவாம். ஜனங்கள் ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கின்றனர். வெள்ளிக் கிழமைகளில் பிணியாளர்கள் சுகம்பட்டு பாற்குடம்செலுத்தும் மகிமையை என்னென்பாம் என்று ஸ்ரீமான் எ. ராஜநாயகம் நாடார் எழுதுகிறார்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

கடிதங்கள்.

[கடித லேகர்களின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்திரவாதியல்லர்.]

விடுமுறை விண்ணப்பம்.

பாண்டியமாபாலன் மேனேஜர் கடைத்திட்டமால் இந்த ஸ்தலங்களில் மேற்படி பட்ட விசாரணையை முன்னரே முறை கம்மித்தியில் என்றால் சால்ன்கள் விண்ணப்பத்தைக் கவனியாமலிருப்பது பற்றி பெரிதும் விசனிக்கிறோம் விடுமுறை அவசியம் என்பதைப் பற்றி பாண்டியபாலன் நன்கு விளக்கியுள்ளாரலின் மீண்டும் அவைகளை எண்டு கூறுதல் அனாவசிய மெனக்கினைக்கிறோம்.

ஒவ்வொரு மதஸ்தரும் வாரத்தில் ஒரு நாளைத்தங்களுக்கு விடுமுறை நாட்களாகக் கொண்டிருக்கின்றனர். சிவகாசி நம் குலமாசிகள் வார்த்திகை தினத்தை தங்களுக்கு விடுமுறை நாளாகக்கொண்டிருக்கின்றனர். அதுபோல் இம்மதுரை மாநகரிலும் ஒரு நாள் விடுமுறை யிருக்குமானால் எவ்வளவோ நன்மையுண்டாகக்கூடும். மதுரை நாடார் வாழியபிரசாங்கபையார் மீட்டிங் கூட்டிவைப்பதற்கு போதிய சௌகரியங்களில்லாத காரணத்தினாலேயே தண்டப் பிரசுரத்தோடு நிற்கிறார்களென்றும், இல்லையேல் மீட்டிங்குகள் கூட்டிவைத்து நம்குல விருத்திக்காக வேண்டிய இன்னும் பல காரியங்களைச் செய்வார்களென்றும்கனதனவான்களுக்கு மிகவும் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். இம்முறையாவது கனவான்கள் இவ்விண்ணப்பத்தைக் கவனிப்பார்களென்றும் முன்போல் டிலோராமிகமா யிருக்கமாட்டார்களென்றும் நம்புகிறோம். மேலும் நாடார் வாழியப்பிரசாதசபையாரும் இவ்விஷயத்தில் சிறிது சிரத்தை எடுப்பார்களாயின் மிகவும் நலமாயிருக்குமென்றும் நம்புகிறோம்.

K. A. S. லிங்கம்.

ஜாதித்து வேஷம்.

சர்வசாத் ஈஸ்வரனால் யாதொரு பேதமின்றி சிருஷ்டிக்கப்பட்ட மானிட வகுப்பில் ஜாதித்துவேஷ மென்னும் சண்டாளப்பிசாசு புகுந்து சகோதரத்துவம் என்னும் ஒற்றுமையை பாழ்படுத்தி வருவதால், நமது தேசம் சீர்குலைந்திருக்கிறது. ஒருவருக்கொருவர் உண்ணல் உறவாடல் கொடுக்கல் வாங்கலில் தான் ஜாதித்துவேஷ மென்றால், வியாபாரம் வாங்குவதிலும்வித்தியாசமா? இது என்ன மட்டம்! சென்ற ஏகாதசியன்று நான் திருத்தங்கல் என்னும் க்ஷேத்திரத்திற்கு மிட்டாய்க் கடை கொண்டு போயிருந்தேன். அப்போது எம்மனோர்சிலர் வந்து மிட்டாய் செய்வதற்கு சீனி, மாவு முதலிய வியாபாரங்கள் எங்கே வாங்கினாய்? என்று கேட்டார்கள். சிவகாசியில் நாடார்களிடம் வாங்கினதாகச் சொன்னேன். நாடார்களிடம் ஏன் வாங்கினாய்? நமது சகாக்களான..................

......களிடம் ஏன் வாங்கக்கூடாது? அங்கே வாங்கினதால், இங்கொன்றடைவங்கக்கூடாதென்று தடுத்துத்தவிர என் கடைமுன் நின்று அறியாத ஜனங்களை வாங்கவொட்டாமல் பிரசாரஞ்செய்தார்கள். இது என்ன விபரீதம்! சமத்துவம் சகோதரத்துவத்தை நாமும் இக்காலத்தில் ஜாதிவித்தியாசத்தை நீக்கி சுயராஜ்யம்அடைய விரும்பி மகாத்மாகாந்தி அடிகளும் அவர்சகாக்களான உத்தமதேசபக்தர்களும் சிறைவாசஞ்செய்யும் இக்காலத்தில், வியாபாரம் என்ற ஒன்றுமாத வேஷங்காட்டுவது?முன்னேற்றமடைய விரும்பும் எம் கம்மவார் குலத்திற்கு இது பொருத்தமற்றதென்பதை எம்குலாபிமானிகள் அறியாதது விந்தையிலும் விந்தையே! கம்மவார்குல சகோதரர்களே! மகரிஷிகளாலும் மதிக்கப்பட்டவிவசாயத்தைக்கைக்கொண்ட உத்தமர்களே! நாடார்களிடம் வியாபாரம் வாங்கக்கூடாதென்கிறீர்களே. சிவகாசிசாத்தூர் விருதுபட்டியில் வந்துபாருங்கள் நம்மவர்களில் தலைவர்கள் அபிமானிகள் முதலிய எல்லோரும் சரக்கு வாங்குவதில்லையா? நம்தலைவர்களின் ஒருவராகிய காரணபுரம் சென்னகேசவ நாயக்கரிடம் விவசாயம் செய்வது நாடார்களல்லவா? தோட்டம் சாய்போகம் செய்பவர்கள் நாடார்களல்லவா? பணம் கொடுக்கல் வாங்கல் செய்வது நாடார்களிடமில்லையா? இன்னும் எத்தனையோ பேர்கள் அப்படியிருக்க. மிட்டாய் கடைவிற்கும் நான்தானா வடபட்டரகம்மவார்குலத்திற்கு வசையுண்டுபண்ணினேன்! இதை எல்லாம் நன்குணர்ந்து ஜாதித்துவேஷ மென்னும் பிசாசை ஓட்டி, சமத்துவம் சகோதரத்துவத்தை காட்டி, நம்தேசம் நம்ஜாதி முன்னேற்றமடைய வேண்டிய வழிகளில் உங்கள் அபிமானத்தைச் செலுத்துவீர்களென்று நம்புகிறேன்.

குருசாமி நாயக்கர்
கம்மகுலாபிமானி, சிவகாசி.

கோர்வை செய்த குட்டிக் கதைகள்.

(முருகதாஸன் எழுதுகிறார்)

கெடுவான்கேடு நினைப்பான்

வளஞ்சூழ்ந்த வையகத்தில் தானமும் தருமமும் சதாநிறைவும் தவறாமற் செய்யும் சர்சன ஜனங்கள் நிறைந்து வாழும் தருமபுரி யென்னும் சிறியதோர் பூமியை தருமசீலன் என்னும் ஒரு அரசன் நீதி வழுவாமல் அரசாட்சி செய்துகொண்டிருந்தான். அந்நாட்டில் தனவீரன் என்னும் ஒருபிரபு திரண்ட ஆஸ்தியுள்ளவனும் அரசனுக்குச் சமானமான செல்வாக்குடன் வாழ்ந்து வந்தான். அரசனுக்கும் தனவீரனுக்கும் மிகுந்தகட்புண்டு. அரசர்தம்முடைய சமஸ்தான நிருவாகத்திற்குக் கொஞ்சம் பணக்கஷ்டம் ஏற்படும்போது தனவீரனுடைய பாங்கில்பணம் வட்டிக்குப் பெற்றுக்கொண்டும் பணம் கிடைத்தவுடன் அதை தீர்த்துக்கொண்டும் வந்தான். இப்படித் தனவீரன் தனவானாயிருந்து வருவது அரசனுடைய நிருவாகம் சரியாய் நடத்தவும் தம்முடைய தேசத்தில் நவீனமுறைகளை உண்டுபண்ணவும் மிக்க ஏதுகரமாயிருந்தது பற்றி அரசன் தனவீரன்மீது மகாபிரியங்கொண்டு அதிகமாய் நேசித்தான். தம்மைப் போலுள்ள அரசர்கள் பலரோடு சிநேகமுஞ்செய்துவைத்தபின் சமஸ்தானத்தில் நடக்கும் சகல கொண்டாட்டங்களும் தனவீரனையே தலைமையாகவைத்து நடத்தினான். தம்முடைய சமஸ்தானக் குடிகளின் விவகாரங்களையும் தனவீரனுடைய யோசனை பெற்றுக்கொள்ளுங்களென்றும் அனுப்பிவந்தான். அதற்கேற்றவாறு தனவீரனும் மகாபுத்திசாலித்தனமாய் நடந்துகொண்டு வந்தான்.

இதனால் தனவீரனை ஜனங்கள் அதிகமாய் நேசித்தார்கள். பற்பல பிரபுக்கள் அரசர்கள் சிநேகமெல்லாம் தனவீரனுக்குக் கிடைத்தது. இப்படி பற்பல வழிகளிலும் முற்போக்கடைந்து கொண்டிருக்கும் தனவீரனுக்கு கர்வம் தலைக்கேறி கெட்டகாலம்வந்து சம்பவிக்கப்போகிறது. அதாவது ஒரு நாள் உத்தியான வனத்தில் தனியே யிருந்துகொண்டு ஆலோசிக்கின்றான். ஆகா! இந்த அரசன் அரசனாக இருந்தும் கேவலம் தனவீரனாகிய நானின்றி அவன் ஜீவிக்க முடியுமா?என்னுடைய தனத்தினாலல்லவா அவன் சமஸ்தான நிர்வாகமும் அவனுடைய பல தருமகைங்கரியங்களும் செவ்வனே நடைபெற்று வருகின்றது. நமக்கோ பற்பல அரசர்கள் சிநேகமும் பல பிரபுக்கள் உறவுமிருந்து வருகிறது. அரசனுடைய பிரஜைகள் சகலருக்கும் விவகாரம் தீர்க்கும் நியாயாதிபதியாகவும் விளங்குகின்றோம். அரசனோ முழுச் சோம்பேரியாய் விட்டான். அரசனால் ஆவதொன்றிருப்பதாய்த்தெரிய வில்லை. ஆகையால்அரசனை எப்படியேனும் வேலையைத்தீர்த்துவிட்டால்நாமே இப்பூமிக்கு அரசனாகி விடலாம். பின்னர் மற்ற அரசர்களையும் நமக்குச் சிற்றரசர்களாக்கி நாமொரு சக்கிரவர்த்தியாகி விடலாமென்று மகாபடுமோசகாரியத்தைப் பற்றிச் சிந்தனை செய்து அப்படியே தீர்மானித்துவிட்டான்.

நினைக்கத் தனக்கென்ற பழமொழிக்கேற்ப தனவீரனுடைய கெடுவாலக்குறியின் கெட்ட எண்ணமானது சும்மாயிருந்த அரசனுடையஇருதயத்தில் ஊடுருவிப்பாய்ந்து; அரசன் என்ன நினைக்கிறான், ஆகா என்ன! தனவீரன் நம்முடைய கூட்டுறவால் தாட்டீகம் பெற்று மேட்டிமையுற்று நன்றிது தீதிது என்றறியாமல் தனக்கேதடியுண்ணுமல் புதைத்து மனம்போனபடிநடக்குமகாலோபிகளைப்போலாகிவிட்டான். பொய் பேசுவதையே பிரதானமாய்க்கொண்டுளான். மேலும் அவனுடைய இல்லமே சமஸ்தான அரண்மனைபோலாகிவிட்டதால் சமஸ்தானத்தின் கண்ணியமே குறைந்து வருகிறது தவிர நமது நிர்வாகச் செலவுக்குப் பணம்வேண்டும் போதெல்லாம் அவனிடம் போய்ப் பல்லைக்காட்டவேண்டியதாயுமிருக்கிறது, ஆகையால், தனவீரனையே வேலையைமுடித்து விட்டால் அவனுடைய தனமெல்லாம் சமஸ்தானத்தில்ச் சேர்த்துவிடலாமென்று நினைத்தான். இதைப்பற்றி சமஸ்தான முதல் மந்திரியிடம் ஆலோசித்தான். ஒத்துக்கு மத்தளம்போடும் உத்தம தளவாய் அவர்களும் ஒத்துக்கொண்டு காற்றோடு நெருப்பாய் கலந்தார் தனவீரன் நினைத்து முடிக்கு முன்னரே அரசன் நினைத்தபடி முடிக்கச் சகல சாதனங்களும் சரியாயிருந்தபடியால் அரசன் நினைத்தபடியே தனவீரன் சோலியை முடித்துத் தனத்தை சமஸ்தானத்தோடு அரசன் சேர்த்துக்கொண்டான்.

'கெடுவான்கேடு நினைப்பான்' என்ற பழமொழி தனவீரனுக்குகேர்ந்த சம்பவித்ததையைச் சகலரும் அறிந்து நடக்க வேண்டியது அவசியமாகிறது.

செய்தித் திரட்டு.

செங்குன்றபுரம்.

இவ்வூருக்கு நம் நாடார்மகாஜன சங்கம் பிரசாரகர் ஸ்ரீமான் எஸ். அப்பாத்துரை நாடார் அவர்கள் 3-3-23 ல் விஜயம் செய்தார். அன்னவரை அன்புடன் வரவேற்று உபசரித்த மறுதினம் புதிய அங்கத்தினர்களாக 4 பேர் சேர்ந்தார்கள். ஆனால் இன்னு மிரண்டு மாதம் கழித்து, நம் மகாஜன சங்கம் தலைக் கட்டுவரியும் எளிதான அங்கத்தின் வரும் சேர்த்துக் கொடுக்கலாமென்று சொன்னதின்பேரில் அடுத்தவர்களுக்குப்பிரசாரகர்சென்றிருக்கிறார் என்று ஸ்ரீமான் வே. பால்வண்ணநாடார் எழுதுகிறார்.

* *

சென்னிமாமலை.

ஈரோடு தாலுகாவில் சென்னிமாமலை என்று ஒரு சுப்பிரமணியக் கடவுள் ஆலயம் ஒன்று இருக்கிறது. மேஷ்டி ஆலயத்தில் வருஷா வருஷம் தைப்பூசத்தேரோடும், ஆண்டவருக்கு ரத உற்சவம் நடந்து வருகிறது. அங்கு நமது நாடார் குலத்தவர்க்கு சுமார் ஐயாயிரம் ஜனங்களை அடங்கக்கூடிய கட்டடமும் விநாயகர் ஆலயமும் கல்மண்டபமும் நமதுமுன்னோர்களால் ஏற்பட்டிருக்கிறது. அதில் இந்த ராஜாக்களால் ஏற்படுத்தியிருக்கும் கொடிவேரி பட்டயத்தில் நமது நாடார்குலத்தவருக்கு கொடிக் கட்டிய ஏழாவது நாளில் நாடார்கள் மண்டபக் கட்டளை யென்றும் கண்டிருக்கிறது. அதின்படி மண்டபக்கட்டளை நடத்த சுமார் 60 ரூபாய் வரையிலும் செலவேற்படுத்தப்பட்டிருக்கிறது. அதன்படியே இவ்வருஷம் நடந்த திருவிழாவில் கொடிக்கட்டிய ஏழாவது நாளில் சுமார் நமதுகுலாபிமானிகளில் காங்கயம் பிர்க்கா சிரனூர் மகா-ள-ள-ஸ்ரீ மே. குப்பண நாடார் அவர்களும், தாழுபபதி தா. க. கருப்ப நாடார்அவர்களும், இன்னும் சில முக்கியஸ்தர்களும், மேசன்று மேஷ்டி மண்டபக் கட்டளை விஸ்தீப்படி தொகை செலுத்தி ஆண்டவரை மண்டபத்திற்கு எழுந்தருளச் செய்து கட்டளை மேளவாத்தியங்களுடனும் சதிர்கச்சேரிகளுடனும் வெகு சிறப்பாக கட்டளை நடந்தேறியது. இப்பெருங் காரியத்திற்கு சிரத்தை யெடுத்து பொதுக்காரியங்களில் முன்னின்று பாடுபடக்கூடிய குலாபிமானிகளுக்கு முருகபிரான் தீர்க்காயுளும் சகல சம்பத்தும் அளிப்பாராக:

மகா-ள-ள-ஸ்ரீ மே. குப்பண நாடாரவர்களுக்கு இவ்விஷயமாகத் தன் சொந்த ஐக்வஜிலிருந்து ஆயிரம் ரூபாய் வரையும் செலவாகியிருப்பது போற்றத் தக்கது என்று ஊத்துக்குளி ஸ்ரீமான் கு. பழனிமலை நாடார் எழுதுகிறார்.

* *

நாடார் மகாஜன சங்கமும் 9-வது மகாநாடும்.

சர்வஜீவ தயாபரன் திருவருளால் நமது 8-வது மகாநாடு சிவகாசியில் கூடப் பெற்றது. 9-வது மகாநாடு கூடுமிடம் இன்னும் தென்பட வில்

சென்னையில்,

நாடார்போஜனசாலை

பர்மா, பினாங்கு, சிங்கப்பூர் போகிற ஜனங்கள் தங்கிப் போவதற்குத் தகுந்த சௌகரியமுண்டு

S. பழனியப்ப நாடார்,
மலையப்பெருமாள் வீதி,
நெ 59 வீடு.
மதராஸ்.

சங்க விஷயங்கள்.

க்ஷத்திரியகுல பாலியரின் மனோஹர வாசகசாலை கொழும்பு.

இச்சங்கத்தின் 4-வது மாதாந்தரக் கூட்டம்4-3-23 ஞாயிற்றுக்கிழமைஇரவு 9-30 மணிக்கு ஸ்ரீமான் சொ. ம, சவுரிமுத்து நாடார் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது.

அவ்வமயம் சுமார் 100 அங்கத்தவர் குழுமியிருந்தனர். சனம் அக்கிராசனாதிபதி, அன்னைப் பற்றி ½ மணி நேரம் உபந்நியாசித்த பின்னர், சங்கத் தலைவரால் மூடர்ச்சி தன்மெய்வருத்தக் கூலிதரும் என்பதை வெகு இனிமையோடும்,1 மணி நேரம்வரை உபந்நியாசிக்கப்பட்டது பின், சனம், காரியதரிசியவர்களால்கென்றபீர்ரிப்போட்வோசிக்கப்பட்டு ராஜவாழ்த்துடன் கூட்டம் இனிது முடிந்தது என்று காரியதரிசி ஸ்ரீமான் சூ. அமிர்தமிக்கேல் நாடார் எழுதுகிறார்,

* *

புல்லாப்பட்டி.

இது இலுப்பையூருக்குதெற்கே10மைலில் தூரத்திலிருக்கிறது. இதில் நம்மவர்கள்வீடு 50 வரையுமிருக்கிறது. நாளது வருஷம் மாசிமீ 7 தேதியன்று இரவு 8-மணிக்கு மகா-ள-ஸ்ரீ அம்பலம் சண்முக நாடார் அக்கிராசனத்தின் கீழ் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது அவ்வமயம் கமுதி மகா-ள-ள-ஸ்ரீ மாயக்காளைநாடாரவர்களும் முத்திருளாண்டிநாடாரவர்களும் பள்ளிக்கூடம் ஏற்படுத்த வேண்டிய அத்தியாவசியத்தை பற்றி உபந்நியாசஞ் செய்தார்கள். ஸ்கூல் டண்டுக்கு நன்கொடையாக ரூ 22-8-0வசூலிக்கப்பட்டது என்று ஸ்ரீமான் பலவேச நாடார் எழுதுகிறார்,

---

லை. மேலும் மதுரை நாடார் மகாஜன சங்கம் ஆபீஸில் 18-2-23 ல் பட்டிவீரன்பட்டி ஸ்ரீமான் ஊ. பு. அ. சௌந்தரபாண்டிய நாடார் M. L. C. அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் கூடிய கௌன்ஸில் மீட்டிங்கில் திருநெல்வேலி முதலிய நகரங்களில் 9-வது கான்பரன்ஸ் கூடிய சீக்கிரம் நடத்தி வைக்கும் ஏற்பாடு செய்யும் பொருட்டு ஒரு கமிட்டி நியமித்திருக்கிறதாய் அறிந்து சந்தோஷிக்கின்றேன்.

திருநெல்வேலி ஜில்லாவில் நம் குலத்தவர்கள் 3 லட்சம் ஜனத்தொகை இருந்தும் ஒரு கான்பரன்ஸ்தவிர மறு கான்பரன்ஸ் நடத்தக் காணவில்லை. என்னேவிந்தை. முக்கியமாய் தென்னாட்டிலே வருஷா வருஷம் தவறாது கான்பரன்ஸ் நடந்துவரவேண்டு மென்று கவனிக்காமலிருப்பது மிகவும்விசனிக்கத்தக்கதே. இனி மேலாவது கௌன்சில் ஏற்படுத்திய கமிட்டியார்கள் கூடிய சிக்கிரம் வெளிக்கிளம்பி தென்னாட்டிற்கு திலகம்போல் விளங்கும் திருநெல்வேலி ஜங்ஷனிலே ஒன்பதாவது மகாநாடு கூடிய சீக்கிரம் நடத்திவைக்க யேற்பாடு செய்வார்களென்று யென்முழுமனதுடன் நம்புகிறேன்.

மும்மூர்த்திகளாகிய திருமூர்த்திகள் வசிக்கக் கூடிய அதிருநெல்வேலியில் 9-வது மகாநாடு அட்டியன்னியில் திட்டமுடன் நடத்திவைக்கும் பொருட்டுதிருநெல்வேலி வாசிகளுடன் ஆறுமுகநேரி, காயாமொழி, இட்டமொழி, முக்கூடல். தண்டுபத்து, வெங்காடம்பட்டி, சாத்தான்குளம், மெஞ்ஞானபுரம், வாசிகளான குலாபிமானிகள் சிறிது கவனித்து மகாநாட்டை விடாமுயற்சியுடன் நடத்திவிட்டால்இச்சில்லாவில் இருக்கும் புண்ணியவான்களை நாடார்உலகம் போற்றித்துதிக்குமென்பதில் ஐயமில்லை. 9-வது மகாநாடு அட்டியன்னியில் திட்டமுடன் நடத்தும்பொருட்டெல்லாம் வல்ல ஈசனைப் போற்றுகின்றேன் என்று ஸ்ரீமான் கோ. மா, சுப்பைய நாடார் எழுதுகிறார்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

சிந்தனை மொழிகள்

அருட்பெருஞ்சோதியின் திருவருளால் தோன்றிய இவ்வுலகம் தற்சமயத்தில் தன்னிலை யறியாது தடுமாறி நிற்கின்றது. ஸாத்விக குணம் நிறைந்தவர் பலரோ, நாடுகள் எல்லாம் நலம் பெருகிநிற்கவேண்டுமென நன்முயற்சி செய்துவருகின்றனர். "நாகரீகம்" "நாகரீகம்" "அநுபாவுதல்வேண்டும்" எனஎல்லோரும்முறையிடும்இக்காலத்தில் நாகரீகம் என்பது யாது? என்பதை அறிந்து அதனையடைய உழைக்க வேண்டுமே யொழிய பகட்டுகளைக் கண்டு மயங்குதல் பேதமை எனப்பெரியோர் கூறுகின்றனர். இவ்வாறு கூறி நிற்காது உண்மை நாகரீகம் எது வென்பதைத் தங்கள் வாழ்க்கையிலறிந்து, அதனைக்கையாண்டும் வருகின்றனர். ஆயின் இவ்வாறுசெய்வது அனைவருக்கும்விருப்பமில்லை.

மானிடரிற் சிலர் தமது வாழ்வினைப்பயனுலோ, அல்லது மற்றெந்தக்காரணங்களைக்கொண்டோ தம்வாழ்க்கையில் இந்திரிய சுகங்களையும் அவற்றின் முதற் காரணமாயுண்டாகும் பிறவிஷயங்களையுமே முக்கியமானவைகளெனக்கண்டு, அவைகளுக்குதவியானவைகளையே மேன்மேலும் வளர்த்துவருகின்றனர். இந்திரிய சுகங்களோ, எவ்விதமானிடனையும், இருதய சுத்தியின்றேல் எளிதில் மயக்கவல்லவை, அவற்றை அனுபவிக்க அனுபவிக்கமேலும் அவா பெருகுமே யொழியக் குன்றாது. உலகத்திலோ மானிடர்க்கு வேண்டியவை சுவையே என நினைக்கச் செய்யும் வன்மையுடையவை இவை. ஆகையால் இவற்றில்ஈடுபட்டோர் இப்பூமியிற்பலருளர்.

மற்றொரு விஷயமும் இங்கு குறித்தல் அவசியம். மெய் வாய் கண் மூக்கு செவி ஆகிய ஐந்து இந்திரியங்களும், தம்மைத் திருப்தி செய்வதற்கு பல பொருள்களை நாடி நிற்பனவாதலால் அப்பொருட்களை உண்டாக்குவதற்கும் அதனைப்பலரும் அடையும் வண்ணம் செய்வதற்குமே, ஜனங்களிற் பெரும்பாலார் ஆயுளைச் செலவழிக்கின்றனர். இத்தகைய வேலை பெருக பெருக, மென்ன மானிடனுக்குத்தன் உண்மை நிலை மறந்துவிடுகின்றது.

பஞ்ச பூதங்களின் சேர்க்கையாலுண்டாகிய இவ்வுடலும் அதனிலுள்ள பஞ்சேந்திரியங்களும் மாத்திரம் மனிதனன்று. அவனுடலையும், அதுவளர்தற்கும், அழகுடன் சோபிப்பதற்கும் செய்யும் காரியங்கள் மாத்திரமே முக்கியமானவை என நினைப்பது மதியீனம். எனெனில் மானிடன் எனப்படுபவன், இவைகளைத்தன் உபகரணங்களாய்க் கொண்டு, அவற்றின் உதவியால் தான் யார் எனவும், தன்னுண்மை நிலையடைய வழி எது வென்பதையும் அறிந்து கொள்கிறான். இவ்வெண்ணம் தோன்றிய போது, இக்காலத்தில் நாகரீகம் எனக் கூறப்படுவது எவ்வளவு தாழ்ந்தது என்பது விளங்கும்.

இருப்புப் பாதைகள் இயந்திரங்கள், தந்தி முதலிய சாதனங்கள் பலவகை உணவுகள், கண்ணைக் கவரும் உடைகள், காலங்கழிக்க ஏற்பட்டுள்ள பலவிநோதங்கள் இவையெல்லாம் இக்காலத்தில் மேன் மேலும் விருத்தியடைந்து வருகின்றன. முற்காலத்தைக் காட்டிலும் தற்காலத்தில் ஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கும் சுகங்கள் எண்ணிறந்தவை அதுவரையில் மகிழ்ச்சியடையாதார் ஒருவருமிலர்.

ஆயின் இவைகளில் விருத்தியுண்டானது போலவே, மனிதன் தன்னுண்மை நிலையை யறிவதிலும், தான் பரம்பொருளின் அம்சமென்பதையும் அறிய வழிகளை விருத்திசெய்து வந்திருக்கிறானு? என்னும் கேள்விக்கு விடையென்ன? நாகரீகம் விருத்தியடைந்துள்ளது அது முன்னிலும் பரவியுற்றது எனக் கூறுவார் விடையளிக்கட்டும்.

உண்மை நாகரீகம்—என்பது உயர் வாழ்க்கையையே குறிக்கும்; குறிக்க வேண்டும். உயர் வாழ்வென்பது உடலெடுத்தோர் அனைவருள்ளும் இருந்து அவனை ஆட்டுவிக்கும் சக்தி, பரமசக்தியின் அம்சமே என்பதையே வற்புறுத்தும். இப்படிவற்புறுத்தினுல், மானிடர்க்குள் ஆத்மஞானம் பரவஅதன்பயனுல் சமத்துவம், சகோதரத்வம், பரோபகாரம், சாந்தம் முதலிய நற்குணங்கள் பொலிந்து நிற்கும் இவ்வுலகம். பிறர்க்குதவி செய்வதே பெருந்தொழிலாக, ஒவ்வொருவரும், பிறர்க்கு நன்மை புரிவதையே விரதமாகக் கொண்டு, நன்மைபுரிய முன்வருவர். ஈசுவரத்தன்மை எங்கும் நிறைந்து நிற்கும்.

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்.

ஈகை.

(முன் தொடர்ச்சி)

"இழித்தவை தாளிரங்கான் வைவாரா நச்சா
விகழ்ந்தவை யின்புறுனில்லார்—மொழிந்தவை
மென்மொழியா லுண்ணெகிழ்ந் தீவானேல் விண்ணோரால்
இன்மொழியா லேத்தப்படும்"

என்றபடி. ஒருவன்நடந்த சங்கதியைப் பற்றி அனுதாபப்படாமலும், தனக்கு எட்டாத பொருள்மேல் ஆசைவைக்காமலும் அறிவுடையவரால் இகழப்பட்டவைமேல்விருப்பங்கொள்ளாமலுமிருந்து யாசகர்க்கு அவர் வேண்டிய பொருளை இன் சொற்களோடு இரங்கிக் கொடுப்பானுல் அவனை இவ்வுலகத்தில் மாத்திரமன்றி விண்ணுலகத்திலுள்ளோர்களும் இன் சொற்கொண்டு துதிப்பார்கள்.

"அற்றாழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்றான்பொருள்வைப்புழி" என்பதனுல் ஏழைகளுடைய பசியைத்தீர்த்தபொருள் விண்ணுலகில் வந்து அத்தீர்த்தவனுக்கு தவுகிறதென்றும்,

"ஈத்துவக்கு மின்பமறியார் கொலுமுடைமை
வைத்திழக்கும் வன்கணவர்"

என்பதனுல், அவ்வின்பத்தை அறியவருவாராயின் தமும் அடைய விரும்புவாரென்பதும் ஈயாமை குற்றமென்றும் உள்ளங்கை நெல்லிக்கனிபோன்று புலப்படுகிறது.

அகிலாண்டமான இப்பூமண்டலத்தில் வாசஞ்செய்யும்மனிதர்யாவரும் ஈகையதிகாரத்தில் மூன்று வகையினராகப் பிரிக்கப் பட்டிருக்கின்றனர்.

"ஈன்னுனு மொருதவி யாதொருவன் யார்க்கெனினுந்
தன்னுன் முடிவதெனிற்றானே முடித்தறலை
சொன்னுன் முடித்தலிடை யாருஞ்சொல்கினும்
பன்னுண் மறுத்துப்புரிதல் கடைப்பான்மையதே"

என்று ஞானபக்தியிற் சிறந்த கச்சியப்பசிவாகாசாரியார் சொன்னபடி யாராயினுமொருவன் யாதாயினுமோர் உதவியைத் தன்னுற் செய்யக்கூடியதாயின் அவன் சொல்லாமலே தானேசெய்து முடிப்பது உத்தமசெய்கை யென்றும், அவ்வுத்தம செய்கையைச் செய்பவரே பெரியவரென்றும் அங்ஙனமின்றி அவன்வேண்டியபின் செய்துமுடித்தல் மத்திமமான செய்கை யென்றும், இச்செய்கைமத்திமரிடம்குடிகொள்ளுகிறதென்றும், இரண்டுமின்றி அவன் சொன்னபின்பும்உடனே செய்யாமல் பன்னுட்கழித்துச்செய்தல்அதமமான செய்கையென்றும்அச்செய்கை சிறியவரிட முண்டென்றும் தெற்றெனப் புலப்படுகிறது. இப்பொருள்பட "சொல்லாமற் செய்வார் பெரியர் சொல்லிச் செய்வர் சிறியர் சொல்லியுஞ் செய்யார் கயவரே" என்ற பழமொழியும் உண்டு. மேற்சொன்ன மூன்று வகையினர்களில் நம் நாடார் குலத்தவர் ஒவ்வொருவரும் எவ்வினத்தைச்சேர்ந்திருக்கின்றார்களோ! பிறவிக்குற்றங்களையே குடிமியெனக் குறித்தவரும் சிறியர் கூட்டத்தில் எத்தனைபேர் சேர்ந்திருக்கின்றனரோ! அவர்களின் எண்ணமும் மனதும் பலராலும் இகழப் படத்தக்கதன்றோ! தொல்லையில்ஆழ்ந்து கஷ்டப்படுஞ் சமயம் அவர்களுக்குத் தெரியும்போலும்.

இனி எவ்வெவருக்குத் தருமம் 'செய்ய வேண்டும் எவ்வெவருக்குச் செய்யக்கூடாதென்பதைக் கவனிப்போம்.

"முகனெதிரொன்றும் பிரியின் மற்
றொன்றுமொழிபவர் விழைவுறுதூத
ரகன்றகேள் வியிலாருமருத்துவர்களும்
பொருள் கவருநர் தூர்த்தர்
புகலருந்தீமை புரிபவர் மல்லர்செருக்கி
னர் புன்றொழிற்றீயோ
ரிகழ்தரு வினையோரொன்பது பெயர்க்
கு மீந்திடல் பழுதென விசைப்பார்"

என்று கூறப்பட்டுள்ளது. ஆதலால், முகத்துக்கெதிரே ஓர்வகை வார்த்தையையும் பிரிந்துசென்ற விடத்து முன் சொன்னதற்கு மாறாக வேறொரு வார்த்தையையும் சொல்பவர்களாகிய புறங்கூறுபவர்களுக்கும் பொருளாசை மிக்க அன்னியருடைய தூதர்களுக்கும், பாக்த நூற்கேள்வியில்லாதவர்களாய் அருமையான மருந்தை கொடுத்தற்கு ஏற்ற வைத்தியர்களுக்கும், அநியாயமாக பொருளைக் கவர்ந்துசெல்பவர்களுக்கும், காமதூரல் தீயவழியில் செல்பவர்களுக்கும் அளவில்லாத் தீமைகளைச் செய்ய விரும்புபவர்களுக்கும் மற்போற் செய்வோர்களுக்கும், அகங்கார முடையவர்களுக்கும் தருமஞ்செய்தல் பிரயோஜனமற்றதென்றறியலாம். இவர்களன்றிக் குருடர் முடவர் சிறுகுழந்தைகள்வயோதிகர் அங்கவீனர் வியாதியாளர் தரித்திரர் புலவர் துறவிகள் இன்னுஞ் சில நன்னடக்கையுள்ளவர்களுக்கும் தருமஞ் செய்தல் தருமநெறியினின்றும் பெறுதற் கூடிய இன்பவழியாம்.

க. செ. அ. ஞானகிரிநாடார், சிவகாசி.

கிருஷிகக் களஞ்சியம்

கரும்பிற்குநிலம்.—தேர்ந்தெடுத்தநிலத்திற்கு தண்ணீர் பாசன வசதியிருக்கவேண்டும். தண்ணீர் போதுமான அளவு கட்டப்பிறகு சிலமாதங்களையில், இல்லாமல் தட்டிப்போய் விடுமாயின் கரும்புப் பயிர்க்குக் கெடுதல் சம்பவித்துவிடும். பள்ளநிலங்களும் மழைக்குப்பிறகு தண்ணீர் தேங்குமிடங்களும் வடிகால் வசதியில்லா நிலங்களும் கரும்பு சாகுபடிக்கு லாயக்கானவை யல்ல. வியாதிசம்பவிக்கும் காலங்களிலெல்லாம் பள்ளமான தண்ணீர் தேங்கும் வடிகால் வசதியில்லா நிலங்களிலேயே, தோன்றி அதிதீவிரமாய், கரும்புப் பயிரை வாட்டும்.

* * *

தேங்காய் மட்டைகளில் நார்களின் இடுக்குகளின் மத்தியிலிருக்கும் பொடி போன்ற வஸ்துவை விவசாயிகள் உபயோகப்படுத்திக் கொண்டதாகத் தெரியவில்லை முதலாவது போதிய வளவு கிடைக்குமாயின் பாத்திகளில் நிரப்பி நாற்றுவிடலாம். அல்லது புஷ்பப் பாத்திகளிலிருந்து கோடைகாலத்தில் ஈரம் காய்ந்துபோகாமல் திடுக்க நிரப்பி வைக்கலாம். புஷ்பச்செடிகளை பதியம் போடுவதற்கும் இந்த வஸ்துவை உபயோகிக்கலாம். மோட்டார்கள் இப்பொழுது ஆளிவிதை எண்ணெயுடன் கலந்து இயந்திரத்தினுல் பலமாய் அழுத்தி, நடை ஜமக்காளங்கள் தயார் செய்கிறார்களாம்.

* * *

ஜாவாவில் புகையிலை:—இத்தீவில் புகையிலை செழிப்பாய் பயிராவதற்குக் காரணம் நிலத்தின் பாங்குதான். எரிமலையினின்று வெளிவரும் மண் அடித்துக்கொண்டு போகப்பட்டு நிலத்தின்மேல்மட்டத்தில்தங்கி நிருதுவான களிமண்ணும் மணலும் கலந்த பக்குவத்திலிருக்கின்றது. இம்மண்ணில் 100-க்கு 1.84லிலிருந்து5- பாகம் வரையில் சாம்பல்காரம் (Potash) நிறைந்திருக்கிறது. இச்சத்து புகையிலைக்கு இன்றியமையாதது. தவிர, சுண்ணும்பும் (Lime)பிரகாசிதாமிலமும்(Phosphoric acid)போதுமான அளவு இருப்பதாக கண்டறிந்திருக்கிறார்கள். இக்காரணங்கள் பற்றி புகையிலை கஷ்டமில்லாமலே செழித்து வளர்கிறது. கிருஷிக மித்திரன்,

வியாபாரக் குறிப்புகள்.

(நாடார் வியாபாரப்பிரகாசிகையிலிருந்து)

1. உங்கள் வியாபாரங்களை நல்ல லாபத்துடன் விஸ்தரியுங்கள். பேருக்காகவும் புகழுக்காகவும் லாபமின்றி எதையும் செய்யாதீர்கள்.

2. பொறாமைக் குணத்தையும்,போட்டிபோட்டு விலை வைக் குறைத்து விற்பதையும் விட்டுவிடுங்கள். ஒற்றுமையுடன் நடந்து கொள்வதே வியாபாரத்தைப் பலப்படுத்தும் சக்தியை உண்டாக்கும்.

3. மலிந்தசரக்குகளைக் கொள்ளுவதும் லாபமிருப்பதை விற்பனைசெய்வதும்தன் ஸாமர்த்தியம். ஜாஸ்தியான லாபத்தை யுத்தேசித்த கடன் கொடுப்பதைக் காட்டிலும் சொற்ப லாபம்வைத்து ரொக்கத்திற்கு விற்பனை செய்வது மிகவும் உத்தமமானது.

4. சூதாட்டத்திற்குச் சமானமான ஸ்பெக்லேஷன் வியாபாரங்களைச்செய்வது கண்டிப்பாய் கஷ்டங்களை விளைவிக்குமாதலால் அதில் தலையிடாதிருக்க வற்புறுத்துகிறோம்.

5. நமது வியாபாரங்களை சகல ஜனங்களும் மதிக்கும் வண்ணம் உண்மையுடனும் நம்பிக்கையுடனும் ஊக்கத்துடனும் நடத்தவேண்டும்.

6. "அகல உழுவதைக்காட்டிலும்ஆழ உழுவதே மேன்மை" என்றபெரியோர்களின் வாக்கியத்திற்கிணங்க முதலின் சக்திக்குத் தகுந்தபடி வியாபாரத்தைக் கெட்டியாக நடத்துவதுயுக்தியான காரியமாகும்.

7. சரக்குகளை கூடுமானவரை ரொக்கத்துக்கு விற்பனை செய்யவும் பிரயாசைப் படவேண்டும். ஏனெனில்கடன் வாங்காமலும் கடன் கொடாமலும் நடத்துகிற ஐரோப்பிய வர்த்தகசாலைகள் நாளுக்குநாள் அபிவிர்த்தியடைகிறதுபோல் நாமும் அதைப்பின்பற்றி நடப்போமானுல் நமது வியாபாரம் நீடித்தகாலம் க்ஷேமமாகவும் விசேஷலாபகரத்துடனும் நடைபெற ஹேதுக்கள் உண்டாகும்.

8. கூட்டுறவு வியாபாரக் கம்பெனிகளைத் ஸ்தாபித்து நடத்துவது பல ஜனங்கள் லாபமடைந்து க்ஷேமமாக வாழ்வதற்கும் ஜன சமூகம் விசேஷ செல்வாக்கைப் பெறுவதற்கும் ஆதரவுகளை அளிக்கும்

9. நம்மில் ஒருவர்செய்யும் தொழிலையே திருப்பித் திருப்பிச் செய்யாமல் நூதனமான புதிய வியாபாரங்களைக் கண்டுபிடித்து நடத்தினுல் சுலபமாகவிசேஷலாபத்தை அடையலாம். இதற்குவியாபாரக் கல்வி கற்பது அத்தியாவசியம். இதை நாடார் மகாஜனங்கள் நன்கு கவனிக்கவேண்டும்.

நமது மித்திரன்

போஷகப் பிரபுக்கள்.

பாலக்காடு முனிசிபல் கௌன்ஸிலர் ஸ்ரீமான் க. கு. பொன்னப்ப நாடார்.

அருப்புக்கோட்டை முதலாளி ஸ்ரீமான் மு மு. முத்துக் குமாரசாமி நாடார்.

சென்னை, நீலநூல் வியாபாரம், நாட்டாண்மை ஸ்ரீமான் கா. ஆறுமுக நாடார்.

சென்னை "விநோதவிகடன்" பத்திராதிபர் ஸ்ரீமான் ஆ. ப. வை. கோதண்டராம பாண்டியநாடார்.

திருநெல்வேலி, முனிஸிபல் கௌன்ஸிலர் ஸ்ரீமான் அரி. அ. சேண்பக நாடார்.

திருநெல்வேலி ஜில்லா மாணூடு தண்டுப்பத்து,மிராஸ்தார் ஸ்ரீமான் சோ செல்லத்துரை நாடார்

ஸ்ரீமான் சி. பொ. ம. பொன்னையா நாடார் அன் பிரதர்ஸ் 26-நிர் நாரீஸ்ரோடு கொழும்பு.

ஸ்ரீமான் மா. நா. ரு. நாராயண நாடார் திருப்பாப்பு நாடார்விளை திருநெல்வேலி ஜில்லா, (வியாபாரம் கொழும்பு)

ஸ்ரீமான் வே. சுடலைமாடநாடார், சிறுநாடன் குடியிருப்பு திருநெல்வேலி ஜில்லா. (வியாபாரம் கொழும்பு)

ஸ்ரீமான் நா. ஆறுமுகநயினார் நாடார், பெரியகண்டம்வடலி திருநெல்வேலி ஜில்லா. (வியாபாரம் கொழும்பு)

ஸ்ரீமான் இ. அய்யங்கண் நாடார், சிறுநாடன்குடியிருப்பு திருநெல்வேலி ஜில்லா. (வியாபாரம் கொழும்பு)

ஸ்ரீமான் சு. குருஸ்வாமி நாடார், சிறுநாடன்குடியிருப்பு திருநெல்வேலி ஜில்லா. (வியாபாரம் கொழும்பு)

ஸ்ரீமான் ஞா. யோசேப்பு நாடார் உடையார்குளம் திருநெல்வேலி ஜில்லா. (வியாபாரம் கொழும்பு)

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

நாடார் நண்பன்.

இது நாடார்குல அபிவிருத்தியை நாடி திருவிதாங்கூரிலிருந்து மகா-ள-ள-ஸ்ரீ எஸ். ஐ. சத்தியனேசன் நாடார் எம். எ.; பி. எல். அவர்களின் பத்திராசிரியத்தில் வெளிவரும் ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை. இதை ஒவ்வொரு நாடார்கள் வீடுகளிலும் தருவித்து வாசிக்கவேண்டியது அவசியம். ஆகவே இதைக் கண்ணுறும் ஒவ்வொரு நாடார் கனவானும் உடனே அடியில்கண்ட விலாசத்துக்கு வருடச் சந்தா முற்பணமாக அனுப்பி பத்திரிகை பெற்றுக் கொள்வதுடன் எனைய நாடார்களையும் தூண்டி நண்பனை அபிவிருத்திப்படுத்தக் கோருகின்றோம்.

சந்தா விபரம்.

திருவிதாங்கூருக்கு வருடம் 1-க்கு ரூபாய்	1—0—0
வெளிநாடுகளுக்கு (இந்தியாவுக்குள்) வருடம் 1-க்கு ரூபாய்	1—4—0
சிங்கப்பூர், பீனாங், மலாக்கா, நெட்டால் முதலிய அன்னிய நாடுகளுக்கு வருடம் 1-க்கு ரூபாய்	1—8—0

மானேஜர், நாடார் நண்பன்,
செய்யாற்றின்கரை, தென்திருவிதாங்கூர்.

துந்துபி வருஷத்திய கடைசிவிற்பனை.

இவ்வளவு சகாயவிலைக்குக் கிடைப்பது அரிது. சொற்ப மாதத்திற்குத்தான் இவ்விலை. எங்களுடைய உண்மையை பரிசோதிக்க இதுவேநல்லசமயம்

கெ. 50 புதிய லெஜஸ் நிக்கல் பாக்கெட் லீவர் கெடியாரமானது 16-சையிஸ் அளவும் 13 கெம்புகள் செதுக்கியதும் சரியான நேரத்தைக்காட்டக் கூடியது.	ரூ 17—0—0
51. ஷை அசல் சொக்க வெள்ளி	ரூ 24—4—0
52. புதிய நிக்கல் லீவர் 12 கெம்புகள் செதுக்கியதும் சிறிய சையிஸ் அளவுள்ளதும், கையில் கட்டிக் கொள்ளக் கூடியதும்ரிஸ்டு வாட்சு ரேடியம் டயலுள்ளது	ரூ 14—8—0
53. ஷை அசல் சொக்க வெள்ளி ரிஸ்டு வாட்சு	ரூ 20—8—0
51. ஷை 14 காரட் தங்க லீவர் ரிஸ்டு வாட்சு மிக்க சிறிய சையிஸ் அளவும் 15 கெம்புகள் செதுக்கியது	ரூ 35—0—0
55 ஷை 18 காரட் தங்கலீவர் ரிஸ்டு வாட்சு	ரூ 50—0—0
56. புதியசிலண்டர் சுபீரியர்ரிஸ்டு வாட்சு தோல்பட்டையுடன்	5-12-0
57 ஷை அசல் சொக்க வெள்ளி	ரூ 7—12—0
58. நூதன பாக்கெட் லீவர் வாட்சு நடுத்தர அளவும் 5-வருஷ உத்திரவாத முள்ளது	ரூ 5—0—0
59 ஷை சுபீரியர் குவாலட்டி	ரூ 8—8—0

கெடியாரங்களுக்கு ஆர்டர் செய்வோர்களுக்கு ருத்திரோக்காரி வருஷத்திய தமிழ் இங்கிலீஷ் தேதிகளும் விசேஷ தினங்களும் உள்ள 12 பக்கம் கொண்ட கியாலண்டர் இனாமாய் அனுப்பப்படும். தனி கியாலண்டர் விலை அணா ஒன்று.

லண்டன் வாட்சு அண்கோ,
திருவாதி, தஞ்சை ஜில்லா,

ஓர் உண்மையான ஔஷதம்.

மதனகாமேஸ்வர தாதுபுஷ்டி லேகியம்.

இவ்வுத்தம ஔஷதமானது சில அபூர்வமான மூலிகைகளின் சத்துக்களாலும், அநேக விலையுயர்ந்த வஸ்துக்களாலும். சுயமான தங்க பஸ்பமும் கலந்து முடிக்கப்பட்டது. நீண்டகாலமாய் உபயோகித்து அநுபவத்தில் புகழ்சிறந்து விளங்குவது. குணஞ் செய்வதிலிருந்தும் ஒருக்காலும் தவறாதது. இதனை டைரக்ஷனில் சொல்லியப்படி உட்கொண்டு வருவதினால் அக்கினிமாத்திய ரோகம் நீடித்த மலபந்தம் பித்தாதிக்க ரோகம், அஜீர்ணரோகம், வாதப்பிடிப்புரோகம், தலைவலி, சரீரம் இளைத்து துர்பலமாயிருத்தல், இந்திரியம் நீர்த்துவிழுதல், வெள்ளை, வெட்டை, தந்திமேகம் இதன்வகுப்பில் சேர்ந்த 12 வகையும் க்ஷயம், காசம், குண்மம், பாண்டு, சோகை; நீரழிவு முதலிய கொடியரோகங்களை நிவர்த்திப்பதில் வல்லமையுள்ளது. இது கெட்ட இரத்தத்தை சுத்தித்து சுத்த இரத்தத்தையும் இந்திரிய வீர்த்தியும் அக்கினி வீர்த்தியும்உண்டாக்குவதுடன்சரீரம்பீமனைப்போன்ற வலுவும் உண்டாக்கி மலஜல விஸர்ஜனத்தையும் ஒழுங்குபடுத்தி சரீரமும் திடகாத்ராரோக்கியமாக இருக்கும்.

இந்த அதிர்ஷ்டகாலத்தை வீணாக்க வேண்டாம். ஒரு முறை வாங்கிஉபயோகித்துப் பார்த்தால் இதன் உண்மை விளங்கும். 24-நாள்சாப்பிடும் மருந்துடப்பி 1-க்கு விலை ரூபாய் 3—0—0. தபாற்சார்ச்சு இனாம்.

N. G. ராஜா அண்டு கம்பெனி,
மருந்து ஷாப் நெ 182.
பெரியகடை; திருச்சி.

தேவை.

நாடார் வர்த்தகக் கம்பெனி லிமிட்டெட் நாகபட்டணம்.

நாடார்கள் வியாபாரத்தில் முன்னேற்றமடையவேண்டி ஸ்தாபனமாயிருக்கிறது. மூலதனம் ரூ 50,000.

பங்கு 1-க்கு ரூ 10 வீதம் 5,00 பங்குகள் அடங்கியது.

கம்பெனிக்கு வரவேண்டிய பங்குகள் சேர்ந்து வியாபாரம் துடங்கி நடந்து வருகிறது.

குலாபிமானத்துடன் வியாபாரிகள் வேண்டிய ஆர்டர் கொடுத்து கம்பெனியை விருத்தி செய்யவும், வேண்டிய பங்குகள் எடுத்துக் கொள்ளவும் கோருகிறேன்.

குலாபிமானத்துடன் கம்பெனிக்கு ஏஜண்டுகள் தேவை. தக்ககமிஷன் கொடுக்கலாகும். உடனே எழுதுங்கள்.

S. K. ராமசாமி நாடார்,
ஏஜண்டு
நாடார் வர்த்தகக் கம்பெனி லிமிட்டெட்
நாகபட்டணம்.

ஹரிதாசர் மருந்துகள்.

மிகவும் கைகண்டது.

கால்ரா மருந்து:—கொடுத்தவர் எல்லாரும் பிழைத்துக் கொண்டார்கள் ரூ 1—4—0

வாய்வு மாத்திரை.—50-க்கு ரூபாய் 1—0—0 சகல வாய்வுகளையும் கண்டிக்கும்.

என்னாத்தைலம்:—ரூ 1—4—0 இதை ஸ்நானம் செய்தால் சகல கண்வியாதிகளும் மேகரூடும் நீங்கும்.

நியூரல் தைலம்:—ரூ 1—4—0 இதை ஸ்நானம் செய்துவர சகல பித்தம், தலைநோய் பீநிசம் நீங்கும்.

ஹரிதாசர்மாந்த மாத்திரை.—50-மாத்திரை அணா 12 இதை உபயோகித்தால் சகலவித குழந்தை நோய்கள் தீரும் கைகண்டது. மற்ற வியாதிகளுக்கு எழுதி விபரம் அறியலாம். தீராத நோய்கள் நமது மருந்தில் தீரும் நிச்சயம்.

வைத்தியர் H. தேவதாஸ்
B. A, L. T. A. T. T. U.M.P.
தாசா வைத்தியசாலை,
தின்னனூர்,
M. S. M. R.

நாடார் பாங்கு லிமிட்டெட் தூத்துக்குடி,

மூலதனம் ரூ 20,00,000

வாக்குறுதி செய்யப்பட்ட (SUBSCRIBED) மூலதனம்
(31-12-22 முடிய) ரூபா 378450
செலுத்தப்பட்ட மூலதனம்
(31-12-22 -முடிய) ரூபா 177777—8—0

தூத்துக்குடியில் நடந்த ஆறாவது நாடார் கான்பரென்ஸின் தீர்மானத்தின்படி பாங்கு ஆரம்பித்து வேலை நடந்து வருகிறது. மூலதனம் ஜாஸ்தியிருக்கச்செய்தால் அதற்குத்தகுந்த லாபமிருக்கும் பங்கு எடுத்தவர்களுக்கும் அநுகூலமாயிருப்பதோடுகூட லாபத்தில் ஒருபாகம் நம் பொது நன்மைக்காக செலவிடப்படுமாதலால் நாடார்குலத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் தங்கள் சக்திக்கு ஏற்றவாறுகூடுதலான பங்குகள்எடுத்து இந்தப்பொதுக் காரியத்தை சித்திபெறச் செய்யவேண்டியது நம் கடமை. ஆகையால் காலதாமதம் பண்ணாமல் உடனே பாங்கில் பங்குகளுக்கு அப்பிளிக்கேஷன் அனுப்புங்கள் வரலாற்றுப் பத்திரிகையும் அப்பிளிக்கேஷன் பாரமும் கேட்பவர்களுக்கு உடனே அனுப்பிவிக்கப்படும்.

THE "TAMILAHAM"

KUALA LUMPUR.

THE LEADING HIGH-CLASS TAMIL NEWSPAPER OF MALAYA.
Bi-weekly Edition Published on Mondays and Thursdays
The Cheapest and the best vernacular medium of advertisement which has a wide circulation in the Malay Peninsula, India, Burma, Ceylon, Sumatra, Borneo, French Cochin China and the Far Eastern Countries.
A boon for Advertisers and a Treat for Subscribers.
Annual Subscription Is Only Ten Dollars
or Rupees Fifteen Payable In Advance.
FOR ADVERTISEMENT RATES PLEASE APPLY to-
THE MANAGER,
THE "TAMILaHaM"
190, Batu Road,
KUALA LUMPUR,
Federated Malay States.

FOUNDER OF THE ROLL BISCUITS FIRST AT MADURA.

Best Indian Biscuits Factory.

பெஸ்டு இந்தியன் பிஸ்கட்ஸ் பாக்டரி.

மதுரைமா நகரில், முதல் முதல் ரோல் பிஸ்கட்ஸ் கம்பெனி ஸ்தாபித்து. இந்தியா. சிலோன், முழுவதும் நற்கியாதிவாய்ந்து அனேக டாக்டர்களாலும், கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களாலும், டாக்டர் லேடிஸ்களாலும். மானிட ஜென்மங்களாகிய நமக்கு. சுகாதாரத்துக்கு ஏதுவான தென்று பரிசோதிக்கப்பட்டு. தங்கம் வெள்ளி மெடல்களும். அனேக சர்ட்பிகேட்களும் பரிசளிக்கப் பெற்ற ஆர். எம். எஸ். அன்ஸன்ஸ் கம்பெனியாரால் தயாரிக்கப்படுகின்ற பெஸ்ட் இந்தியன் பிஸ்கட்ஸ்களை வாங்கி உபயோகியுங்கள்.

எங்கள் கம்பெனியில் தயாரிக்கப்படுகின்ற நமம் பிஸ்கட்ஸ்கள் ஆங்கிலேய சுகாதார முறைகளை அனுசரித்து, திரேகத்திற்கு புஸ்டியையும் பலத்தையும் கொடுக்கக்கூடிய அனேக விதமான எஸன்ஸ்களைச் சேர்த்து மைபிஸ்கட்ஸ்களுக்கு சமமாகத் தயாரிக்கப் படுவதினால். அனேக வியாபாரிகள் எங்கள் கம்பெனிக்கு ஏராளமான ஆடர்கள் கொடுத்து சரக்கு தருவித்து விர்பனை செய்து வருகிறார்கள். அவசியம் எங்கள்டிரேட் மார்க்கு "இஞ்ஜின்" போட்ட பிஸ்கட்ஸ்களை கவனித்து வாங்குங்கள். வேண்டுவோர் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதினால் விலை விபர ஜாப்தாவும் கேட்லாக்கும் இனாமாக அனுப்பப்படும்.

விலாசம்,
ஆர். எம். எஸ். அன்ஸன்ஸ்
பெஸ்டு இந்தியன் பிஸ்கட் பாக்டரி,
புரோப்ரைட்டர், ராமச்சந்திரன். நற்பாளையத்தெரு மதுரை.

நாடார் பாங்கு லிமிட்டெட் தூத்துக்குடி,

கரண்ட் பிக்ஸட் டிபாஸிட், சேளிங் பாங்க் கணக்குகள் வைக்கப்படும். வட்டிவிபரம் மதுசெய்து தெரிந்துகொள்ளலாம், சரியானசெக்யூரிட்டியின் பேரில் கடன்களும், ரொக்க கிரடிட்டும் கொடுக்கப்படும். எக்ஸ்சேஞ்சு தொழிலும் நடத்தப்படும்.

குற்றாலத்தின் குளிர்காற்று வாங்கும் காலம் தெருங்கிவிட்டது.

நங்குல சுகவாசு கனவான்களின் சௌகரியத்தை பிரதானமாய்க் கருதி நாங்கள் குற்றாலத்தில் ருத்ரோற்காரி ஸ்ரீ வைகாசி மீ முதற்கொண்டு அங்கு வீசன்டயத்திற்கு விஜயம்செய்யும் கனவான்களுக்கு ஜாகை, போஜன, வசதி முதலியவைகள் செய்துகொடுக்க ஏற்பாடு செய்துகொண்டிருப்பதால் அங்கு விஜயம்செய்யும் கனவான்கள் ஷை ஸ்ரீ சித்திரை மீ முதல் தேதிக்குள் எங்களுக்கு நாலிலொருபாகம் கட்டணத்துகையுடன் ஆர்டர் அறிவிக்க வேண்டுகின்றோம்.

காலை: ரவைத்தோசை, இட்டலி, காபி. மத்தியானம்: போஜனம். இரவு: போஜனம்.

கட்டண விபரம்.		
2 மாதத்திற்கு	ரூ 60—0—0	மானேஜர்— பச்சைய நாடார் தனலெக்ஷிமி லாட்ஜ் கீழமாசி வீதி. மதுரை.
1 ,,	ரூ 35—0—0	
15 நாளுக்கு	ரூ 20—0—0	
1 வாரத்திற்கு	ரூ 10—0—0	
நாள் ஒன்றுக்கு	ரூ 1—8—0	

Printed and Published, By S. A. Mutha Nadar at Sri Muthumariamman Press Aruppukotta.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

பிரயாணத்தில் கண்ட காட்சி.

இரங்கூன்.

கலியுகவரதராகிய ஸ்ரீ முருகப்பிரான் திருவிளையாடல் புரிந்த ஸ்தலங்களிலொன்றான திருச்செந்தூருக்கு தென்கிழக்கேயுள்ள இலங்கைத் தேசத்தை விட்டு மிகப்பிரமாண்டமான 'மார்க்வேஷர்' என்னுங் கப்பலில் ஆரோகணித்திருக்க இராவணேஸ்வரன் பராக்கிரமத்துடன் ஆண்ட லங்கையைப் பிரதட்சணமாகச் சென்ற அக்கப்பலின் அழகோ மிகப்புகழத்தக்கது. இரண்டாம் நாள் இலங்கைத்தீவு மறைந்தவுடனே விரிந்த கடலும் பரந்த ஆகாயமுமன்றி வேறு ஆதாரமொன்றுந் தோன்றவில்லை. இராவசனுகிய சந்திரனும் அவனுடைய சேனை சைன்யங்களாகிய நக்ஷத்திரக் கூட்டங்களும் கடலோடு அடங்குபொழுது வானம்போல் அதன் பிம்பங்கள் கடலில் கடலின் உடலெப்புறப் பார்ப்பினும் கொப்புளங் கொண்டவைபோல் விளங்குந்தோற்றமும் விண் மீன் கூட்டத் தோற்றந் தண்ணீரில் கண்டதும் சீற்றங்கொண்டெழும்பி திசைகடெங்கும் பாய்ந்து செல்வதும் ஏற்றம் மிகுந்த வீரர்கள் மாற்றலரைக்கண்டு தாட்சண்யமின்றி தாக்குவான் போல் நாற்புறமுமுள்ள கடலலைகளானது கொடிய அரக்கர்கள் மார்பினில் ஊடுருவிச்செல்லும் இராமபாணத்தைப்போல் இருண்ட கடலை இருகூறாய்ப்பிளந்து சென்று கொண்டிருக்கும் கப்பல்களை வந்து தாக்குவதும், படைமுகம்பார்த்தறியா கோழைகள் நோவென்றலறி கூக்குரல் போட்டோடுவது போல் மோதியடித்த அலைகள் பேரிரைச்சலுடன் பெயர்ந்தோடுவதும் அலைகள் மோதி ஆகாயத்தெழும்பும் வெண்ணுரைகள் ஆகாயத்திலிருந்து வெற்றிபெற்ற வீரர்களுக்கு முல்லைமலர்கள் தூவுவது போல் வந்து சொரிவதுவும் எதற்கும் அஞ்சாத வீரனைப்போல் அந்தகாயசைந்தோடுங் கப்பலின் அதி சிறப்பும் அச்சமின்றி அதன் மீது வசிக்கும் அனேகவார்க்கும் அஃதொரு சிறு தீவெனச் செப்பவேண்டும்.

பிரபல குற்றவாளிகளுக்குச் சொந்தமான அந்தமான் தீவு ஆழிக்கடல் நடுவே காணப்பட்டதும், பிரயாணிகள் பலர் மகா ஆறுதலடைந்து ஆரவாரிக்கின்றனர். சர்வஜீவ தயாபரனுடைய சிருஷ்டியின் அற்புதம் ஆகாயத்திலும் பாதாளத்திலும் விளங்கும் பான்மைகளைக் கண்டானந்தங்கொண்டாடாதமனிதரும் இம்மானிலத்திலுளரோ! நாது பாரதகட்டிற்கு விசிறிபோன்ற வங்காள விரிகுடாக் கடலைக் கடந்து செல்லும் பிரயாணக்கப்பல்கள், பர்மாவின் ஐராவதமென்னும் அழகிய நதியின், முகத்துவாரத்தில் நுழையும்போதே அரசாங்கத்தார் காவலையும் அந்நதியின் இருகரைகளிலும் அண்டத்தையளாவிய மாடமாளிகைகளையும் கூடகோபுரங்களையும், யாம்நெல் முதலியவைகளைப் பண்படுத்தக்கூடிய யந்திரப்புகைப்போக்கிகளிலிருந்து வெளியேறும் புகைகள் மேகமண்டலம்போல் சூரியப்பிரகாசத்தை மறைத்துக்கொண்டிருப்பதையும் பௌத்தமதாலயங்களின் உயர்ந்த கோபுரங்களின் ஒளி வீசிக்கொண்டிருப்பதையும் செல்வக் குழந்தைகள் சிறுதேரூருட்டி விளையாடுவது போல் ஆற்றின் நடுவிலே அங்குமிங்கும் சிறுபடகுகள் ஓடிக்கொண்டிருக்கும் அழகையும் பல்லக்கிட்டிப் பரிந்து கேட்கும் ஏழைகளுக்கும் சுயாதலோபிகள் இதையம்போல் சற்றேனும் அசையாது நிற்கும் அளவற்ற கப்பல்களையும் சகல ஜனங்களுக்கும் தருமங்கொடுக்கும் அன்னச்சத்திரம்போல் சர்வதேசங்களுக்கும் நெல் முதலிய உணவுப்பொருட்களை சதாவும் ஏற்றுமதி செய்துகொண்டிருப்பதையும் பார்க்கப் பரமானந்தமாயுளது.

தேவேந்திர நகரமெனச் செப்பும் இவ்வரங்கமா நகரத்திலுள்ள பற்பல வீதிகளின் ஒழுங்கும் அழகும் பலதரப்பட்ட மதாலயங்களும் பற்பல வர்த்தகசாலைகளும். வித்தியாசாலைகளும், உயர்ந்த வைத்தியசாலைகளும், சர்வதேசத்துச் சனங்களின் வாசஸ்தலங்களும் பண்புள்ள நிலங்களும், நாடகசாலைகளும், குதிரைகாட்டியசாலைகளும். பயாஸ்கோப் காட்சிகளும் வெகு மனோரம்மியமாயுளது. இவ்வளவு மேன்மை பொருந்திய பர்மாதேசத்தை 1852ஹு ஜெனரல் ஆர்தர் என்னும் புருஷோத்தமர் பிரிட்டிஷ் ஆட்சிக்குட்படுத்தினரென்று சொல்லப்படுகிறது. அவருடைய ஞாபகச்சின்னமாக அங்கே உயிர்க்காட்சிச்சாலையில் அவருடைய உருவச் சிலையொன்று வைக்கப் பெற்றிருக்கிறது. ஆனால் நமது ஆங்கிலேயர் இப்பர்மா தேசத்தைப் பார்ப்பதற்கு முன்னமே நமது ஆந்திர தேச சகோதரர்கள் பார்த்திருப்பதாக வழங்குகிறது. மேலும் நமது மூவேந்தர் (சேர சோழ பாண்டியன்) களில். ஓர் வேந்தனுகிய குலோத்துங்க சோழன் சுமார் 1500 வருஷங்களுக்கு முன்பே இப்பர்மா தேசத்துக்கு வந்ததாகச் சரித்திரமுமிருக்கிறது. நமது இந்திய அரசர்கள் சுயாட்சி செய்த அக்காலத்திலேயே கப்பல் வியாபாரங்கள் வெகு கீர்த்தியுடன் நாற்றிசைகடெங்கும் நடாத்தியிருக்கின்றார்கள். ஆகாயத்தில் பறக்குங் கப்பல்கள் உலாவுமந்த நாளில் சாதாரணக்கப்பல்கள் சட்டவும் இந்தியர் மனதில் வாதாடுங் காலமாய் வந்துவிட்டது. சர்வஜீவதயாபரன் ஆதீனத்துள்ளடங்கியசர்வ தேசங்களில் பர்மாதேசமுமொன்றேயாம். உலகத்திலுள்ள பிரதானபட்டணங்களில் இவ்வரங்கமா நகரமும் ஒரு பட்டணமேயாம். நமது காருண்ய பிரிட்டிஷ் அரசாங்கம் செங்கோலோச்சும் இந்தியாக் கவர்ன்மெண்டின் இப்பர்மாதேசம முன்னர் ஒரு லெப்டினெண்ட் கவர்னரவர்களால் ஆளப் பெற்று புதிய சீர்திருத்தப்பலனுல் தற்சமயம் ஸர். ஹார்கோர்ட்பட்லர் அவர்கள் கவர்னர் என்ற ஹோதாவில் ஆளப்பெற்று வருகிறது. நகரபரிபாலன சபையாகியமுனிஸிபாலிட்டியானது கார்பொரேசனைப் பெற்றுயிருக்கிறது. பர்மாவுக்கு தனி யூனிவர்ஸிட்டியும் உயர்தர நீதிஸ்தலமும் புதிதாக ஏற்பட்டிருக்கிறது. பற்பல வகுப்புப் பிரதிநிதிகளுமுளவிட்ட சட்டநிரூபண சபையொன்று 2-2-23 ல் ஸர் ஹார்கோர்ட்பட்லர் அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது. பற்பல வகுப்பு அங்கத்தினர்கள் அச்சபையின் முதற் கூட்டத்தில் நின்று ராஜவிஸ்வாசப் பிரமாணஞ் செய்யும்போது சினப்பிரதிநிதிகள் தங்கள் மதாசாரவழக்கப்படி காகிதங்களை நெருப்பிவிட்டுக்கொளுத்திப்பிரமாணஞ் செய்த காட்சியே காட்சி.

பர்மாவுக்கு இரங்கூனே தலைநகரமாக விளங்குகிறது. நமது கவர்ன்மெண்டார் ஜனசௌகரியத்தின் சுகாதாரத்திற்கேற்றவாறு புதிதான அமைப்பில் இந்நகரத்தை வெகுமேன்மையாக அமைத்து சுமார் 20 வருஷங்களுக்குள்ளாக மிக்கவுன்னத நிலைமைக்குக் கொண்டுவந்திருக்கிறார்களானாலும் ஜன நெருக்கம் பொருக்கமுடியாமல் நகரத்தை இன்னும் வெகு விஸ்தாரமாக்கும் பொருட்டு தீவிரவான வேலைகள் நடந்து கொண்டிருக்கிறது. ஆகையால் இன்னும் இருபது வருஷங்களுக்குள்ளாக இவ்வரங்கமாநகரம் பிரான்சு தேசத்து பாரிஸ்பட்டணம் போல் பிரசித்தி பெற்ற பட்டணமாக விளங்கலாமென்று நம்புகின்றோம். தற்சமயம் புரோத்தமிகவுடைய ஸ்ரீயான்கள் பிற்காலத்தில் மேன்பட்ட கோடீஸ்வரர்களாக விளங்குவார்கள் என்பதும் நாம் சம்பலாம். நாற்புறமும் ரோட்டும் 'காப்புச் சேவகர் பிட்டும் வெகு கோர்த்தி நேர்த்தி. காலை மாலை குளிர்ந்த நேரங்களில் வெள்ளைச் சேவகரும் மண்டை பிளந்து போகும்படியாக அருணன் ஆகாயத்தின் மத்தியில் வரும்போது கருப்புச்சேவகரும் நாற்புற வீதிகளொன்று சேருமிடங்களில் நின்று காவல் புரிகின்றனர்கள். சில சமயம் வெயிலில் வெள்ளைச்சேவகர்கள் நிற்கு மிடங்களில் அவர்கள் தலைக்கு மேல் குடையொன்று நாட்டப் பெற்றிருக்கிறது. இம்முறை கருப்பு வெள்ளையென்ற வித்தியாசமா? சம்பளம் உயர்வுதாழ்வு என்ற பாகுபாடா? வெயிலால் வெள்ளைகருப்பாகிவிடுமென்ற காருண்யமா! வென்பது விளங்கவில்லை.

இன்னும் வரும்.

பத்திராதிபர்.

விசேஷ போஷகப் பிரபு.

நாடார்குல மித்திரனுக்கு

இரங்கூன், பிரபல வர்த்தகரும், இட்டமொழியூர் ஹைஸ்கூல் ஸ்தாபகரும், பர்மா, சட்டநிரூபணசபை அங்கத்தினரும், லக்ஷாதிபதியுமான ஸ்ரீமான்

A. V. ஜோஸப் நாடார்

அவர்கள்

விசேஷ போஷகராக இருந்து வருவதற்கு இசைந்திருக்கிறார்கள்.

நாம் இரங்கூனுக்கு விஜயஞ் செய்திருந்தபோது 2—3—23 யில் இன்னவரோடு சுமார் மூன்று மணி நேரம் சம்பாஷணை செய்ததில் அவர்களுடைய மேன்மையான குணங்களும், வர்த்தகத்தில் சிறந்த அனுபோகங்களும், குலாபிமானமும், தேசாபிமானமும், ராஜீய ஞானமும் சிறந்து விளங்கக் கண்டோம்.

இந்தியா நாடார் சமூகத்தவர்களுக்கு தம்முடைய வர்த்தகத்தின் நீண்ட அனுபோகங்களை எடுத்துரைப்பதற்கு மிகுந்த ஆவலுள்ளவர்களாயிருக்கிறார்களென்றுந் தெரிகிறது. வரப்போகிற நாடார் மகாஜன சங்கம் ஒன்பதாவது கான்பரன்ஸுக்கு விஜயஞ் செய்வார்களென்று நம்புகின்றோம்.

நமது மித்திரனுக்கு விசேஷ போஷகராயிருந்துவர மனமுவந்திசைந்ததற்கு நமது நன்றியறிதலைச் செலுத்தி மனமார வாழ்த்துகின்றோம்.

பத்திராதிபர்.

சீமைத் தக்காளி

(Tomats)

நம் பாரதமாதாவின் அபிவிருத்தியை கருதி பலரும் பலவகையாய் முயற்சிக்கின்றனர். அம்முயற்சிகளுள் கல்வி வியாபாரம், விவசாயம், கைத்தொழில் விசேஷித்தவை. நான் இங்ஙனம் விவரிப்பது விவசாயத்தின் ஓர்பாகமே யாகும்.

கறிவகைகளுக்கு உதவுகிற காய்களில் கத்திரிக்காய் விசேஷித்தது. தக்காளிக்காயும் ஓர்வகை கத்திரிக்கா யென்றே சொல்லலாம். ஐரோப்பியர் தவிர மற்றவர்கள் இதின் உபயோகத்தை அறியார் அவர்களும் அதின் பழத்தைமட்டுமே உபயோகித்து வருகிறதை நான்பார்த்திருக்கிறேன். நான் முதலாவது இதை பயிர்செய்யும்போது ஜனங்கள் இதை ஒரு விளையாட்டுச்செடியாகவே நினைத்தார்கள். நானும் இதை ஒரு விசேஷித்த பழச்செடி யென்றே தான் வளர்த்துவந்தேன். ஆனால் இதன் காயை சமைத்து சாப்பிட்ட பிறகுதான் இதன் அருமை தெரியவந்தது.

மணற்பாங்கான இடத்தில் இது விசேஷமாய் உண்டாகின்றது. செப்டம்பர் மாதத் தலைக்கதில் வேண்டிய அளவு விதைகளை நாற்றங்கால்களில் பாவி ஒழுங்காய் தண்ணீர் விட்டால் ஏறக்குறைய 4 வாரத்திற்குள் நடுகைக்குத்தயாராகிவிடும். அப்பொழுது அவைகளைப் பிடுங்கி நன்றாய் ஆழமாய் உழப்பட்ட நிலத்தில் மூன்றாம் அடிக்கு ஒன்றாய் வரிசைக்கிரமமாய் ஒழுங்காய் கட்டித் தண்ணீர்விட்டு வரவேண்டும். அடிக்கடி கவனித்து கோப்பட்ட செடிகளை அப்புறப்படுத்தி அவ்விடங்களில் வேறு செடி நடவேண்டும். கொஞ்சம் அடர்ந்தவுடனே ஒவ்வொன்றுக்கும் ஆறு ஏழு அடி உயரமுள்ள பலத்த கம்புகள் நட்டி செடிகளை அவற்றில் கட்டி விட்டு, தரியில் தளிர்க்கிற அனாவசியமான கொப்புகளை களைந்துவிடவேண்டும். செடியில் பூங்காம்புகள் காணப்பட்டவுடனே நன்றாய் உரம் போட்டு கொத்திக்கொடுக்கவேண்டும். இச்சமயத்தில் மாட்டுச் சாணம் கரைத்துவிடுவது நல்லது. டிசம்பர் 15 தேதிக்குள்ளாக காய்கள் பறிக்கலாம். ஒழுங்காய் தண்ணீர்விட்டு வந்தால் ஏப்ரல் வரை செடி பட்டுப்போகாமல்காய்க்கும்.

தக்காளியில் அநேக தினுசுகள் உண்டு. ஒருஜாதியின் காய் ஒன்று சுமார் ஒரு ராத்தலுக்கு மேலிருக்கும். சில ஜாதிச் செடியிலுள்ள பழங்கள் சிவப்பாகவும் சில மஞ்சள் நிறமாகவுமிருக்கும். கத்திரிக்காயைவிட இக்காய் அநேக வகைகளில் சிறந்தது. கத்திரிக்காய்க்கு ஓர் வகை காால்உண்டு. இக்காய் அப்படியல்ல இதில் காயைவிட பழமே கறிக்கு விசேஷம். ஆகையால் பழுத்துகெட்டுப் போகுமென்கிற பயம்வேண்டியதில்லை. கத்திரிக்காய் பறித்து வைத்தால் வாடிப் பழுத்துப்போகும். அதைப்பறித்துவைத்தால் 15நாள் வரையிலும் வாடிப்போகாமலிருக்கும். முற்றின காய்கள் பழுத்துவிடும். பழங்களை சாப்பிடலாம். வயிற்றுநோய்களுக்கு இது நல்ல ஔஷதமென்று சொல்லுகிறார்கள். அநேக வகையான விசேஷங்களையும் தணிக்கின்றனவாம். கத்திரிச்செடியைவிட இது அபரிமிதமாய்க் காய்ப்பதால் நம் நாட்டில் இதை விசேஷமாய் பயிரிடலாம். அரைசெண்டு நிலத்தில் பயிரிட்ட செடிகளில் 147 ராத்தல காய்கள் கிடைத்தன. ராத்தல் அரை அணாவாக விற்றாலும், (சாதாரணமாய் ஒருஅணாவிற்கு விற்கும்) உத்தேசம் ஏக்கருக்கு 900 ரூபாய்க்கு மாருல் கிடைக்கும். நமது ஜில்லாவில் இச்செடியின் அருமையை ஜனங்களுக்கு தெரிவிப்பது விவசாயிகளுக்கு ஓர் [illegible] வியாகும்.

இச் செடியின் விதை வேண்டியவர்கள் எமக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

G. குமரப்பநாடார்

பாமன் குறிச்சி

காயாமொழி P. O.

(திருநெல்வேலி ஜில்லா)

நிலாப்ஸ் ஜுரம்.

(சென்னை விளம்பர சபையிலிருந்து பிரசுரிக்கப்பட்டது.)

சென்ற குளிர்காலம் முதல் 'நிலாப்ஸ் (திரும்பிவரும்)ஜுரம்' என்ற ஒரு புதிய ஜுரம் நம்மூரில் வந்திருக்கிறது.

இந்த ஜுரம் வராமல் தடுப்பதற்குள்ள முக்கியமான வழிகளுள் ஒன்று என்னவென்றால், உங்கள் உடம்பிலும் துணி முதலிய சாமான்களிலும் பேன்வராமல் பார்த்துக்கொள்வதே. தலைமயிரை சுத்தமாய் வைத்துக்கொண்டால் பேன்வராது. நீங்கள் தலையை மழுங்க க்ஷவரம் செய்துகொள்ளவாவது மயிரைக் கத்தரிக்கவாவது செய்யலாம். பேன் இருக்கிற இடத்தில் கெரோஸின்(மண்ணெண்ணெயையாவது ரஸ்லேப்ன சவையாவது (Mercury ointment) போட்டு தேய்த்தாலும் பேன் ஒழிந்துபோகும். துவைத்து அல்லது வெளுத்து ஈரமாருக்கும் துணியை நல்ல வெயிலில் உலர்த்தினால் அவைகளிலுள்ள சிறு (சீலைப்) பேன்கள் செத்துப்போகும்.

எந்த ஊரிலாவது ஒரு வீட்டில் எவருக்கேனும் இந்த ஜுரம்கண்டால் பேன்கள் வசிக்கக்கூடிய அந்த நபருடைய படுக்கை துணி இவைகளுக்கருகில் மற்றவர்கள் போகாமலிருந்தால் இந்தஜுரம் பரவாமல் தடுக்கப்பட்டுப்போகும். அந்த படுக்கை துணி முதலியவற்றிலுள்ள பேன் எல்லாம் செத்துப்போவதற்கு முன் சிக்காளியின் சமீபத்தில் போவது [illegible]ருக்கும் அபாயகரமானது.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

இந்திய சட்டசபை

உப்புவரி.

3-24ஆம் வருஷத்திய வரவுசெலவுகணக்கு செய்யப்பட்டபோது, வருமானத்தை செலவினங்களில் அதிகமாய் செய்ய உத்தேசித்திருக்கும் 5-கோடியே 85 லக்ஷம் ரூபாயை விழுந்ததில் ஈடுசெய்தது 4½ கோடியே சொச்சத்திற்கு ஈடுவதற்கு முடியாமல் போய்விட் வேறு எந்த இனத்திலாவது வரி கூட்டிவிதிக்கவும் வழியில்லை. பொனங்கள் அதிகவரி போடுவதைத் தொன்னுவதற்கும் பொருளாதாரமையும், காலமும் தேச நிலைமையும் யில்லை இப்படிப்பட்ட நிலைமையில் து ஜனங்கள் தலையில் அதிக வரி தூக்கி வைக்க ஒத்துக்கொள்ள டார்கள். மேலும் வருமான இனங் கூட்டி விதிக்க வேண்டியவைக பார்க்கவில்லை. சென்ற வருடத்தில் செலவுகணக்குத் திட்டம் ஆஜராபோதே எந்த எந்த இனங்களில் டிவிதிக்கலாமோ அவைகளை எல் கூட்டி விதித்தாகி விட்டது. ஆனா உப்புவரியை மட்டும் சென்றவருடத்ம் உயர்த்த கவர்ன்மெண்டார் தங்கான பிரயாசை யெடுத்தும், அங்கர்கள் சம்மதிக்க வில்லை. உப்புவரி உயர்த்துவதில் அநேகமாய் ஏழைமத்தான் பாதிக்கு மென்று எண்ணி அப்படியே அதை விட்டு வைத்தார்கள். இதர இனங்களில் இயற்வே வரியை அதிகப் படுத்தி விட்டால் இந்தவருடத்திலேனும் உப்பு வரி கவர்ன்மெண்டார் உயர்த்தவேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் இந்திய சட்டசபை அங்கத்தினர்களில் பெருன்மையோர் உப்பு வரியை உயர்த்தற்கு விரோதமாய் ஓட்டுக் கொடுத் இணங்கவியோரனை தோற்றுப் போட்டது. அதை மறுபடியும் இராஜாங்கயில் ஆஜர் செய்து பெரும்பா கவர்ன்மெண்டு அங்கத்தினர்களின் யைக் கொண்டு நிறைவேற்றி விட்கள், அதை மீண்டும் இந்திய சட்டக்கு இராஜப்பிரதிநிதியின் சிபார்சு ஆஜர் செய்யப் பட்டதாயினும் சட்ட அங்கத்தினர்கள் ஒரே பிடிவாத சிறிதும் விட்டுக் கொடுக்காமல் கவர்ன்மெண்டாருடைய உப்புவரியை உயம் பிரேரணையை நிராகரித்து விட்ன். பொது ஜனங்களும் உப்புவரி உயர்வைப் பற்றிக்கொண்ட கவலை ஒருவாறு நீக்கிக் கொண்டார்களாயி கவர்ன்மெண்டாருடைய பிடிவாதால் இன்னும் அதைப்பற்றி என்னப் போகிறார்களோவென்று முடி எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்.

கலப்பு விவாக மசோதா.

மசோதாவானது இதற்குமுன் இரண் இந்திய சட்டசபையில் ஆஜர் யப்பட்டிருக்கிறது. மூன்றாம் தடவாக கனம் டாக்டர் கோர் யென்பவ கொண்டுவரப்பட்டதாயினும், கடைசி மசோதாவை நிறைவேற்றவில் பொது ஜனங்களின் அபிப்பிராயவும் அதனைப்பற்றி நன்றாய் பரி செய்வதற்காகவும் ஒரு செலக்ட் டி ஏற்படுத்தி, ஒத்தி வைக்கப்பட் ட கமிட்டியின் அபிப்பிராயத் அனுசரித்து, காலது 22—3—23 இந்திய சட்டசபையில் கலப்பு விமசோதாவை டாக்டர் கோர் மீண் பிரேரணை செய்தார். அந்த மசோன் மேல் சுமார் 2-மணி நேரம் வி நடைபெற்றுக் கடைசியில் நிறையது. இந்த மசோதாவின் முக்கிய மாவது:—கலப்பு விவாகம் செய்து ள அனுமதி கொடுக்கமட்டும் இம் தா உதவியாயிருக்கும். இம்மசோவை பயன்படுத்திக் கொள்ள இஷ்டதவர்களைப்பற்றிக் கவலையில்லை. க்கள், ஸீக்கியர் ஜெயினர் பௌத்ர்களுக்கு மட்டும் மசோதா ந்தும். முகமதியர், கிறிஸ்தவர், க்காரர் யூதர் ஆகியவர்களுக்குப் ந்தாது. பாகமாகாத அவிபக்தகுடு சேர்ந்த ஒருவன் இந்த மசோ டி விவாகம் செய்து கொண்டால் படி குடும்பத்திலிருந்து அவன் பா பிரிக் கொண்டு விலகுவதாக மாகும். மேலும் இச்சட்டப்படி ம் செய்து கொள்ளுவோர் சந்ததி ய விஷயத்தில் பிறமதங்களைத்த வர்களைவிட எவ்விதத்திலும் கே நிலைமையில் இருக்கமாட்டார்கள். விவாகம் செய்து கொண்டவர்

நமது கிழச்சிங்கம்.

அது யார்? சென்னையம்பதியிலே தண்டையார் பேட்டையிலே தாண்டவராய கிராமணி வீதியிலே ஸப்தமேகங்களும் நடுநடுங்குமாறு வீர கர்ஜனையுடன் வெற்றிக் கொடிபிடித்து விஜயத் துவஜாரோஹணம்புனைந்து ஜெயபேரிகை முழங்கி நாடார் குலோத்தமர்களின் சமூகவாழ்க்கையைப் புனருத்தாரணம் செய்யத் தோன்றிய ஸ்ரீமான் ஸ்ரீ விஜயதுரைஸ்வாமிக் கிராமணியாரவர்களையே 'நமது கிழச் சிங்கம்' எனப் பெயரிட்டோம். நாடார் நன்மக்களின் அருந்தவப் பயனால் தோன்றிய இப்புண்ணிய புருஷோத்தமர் தாம் நடத்திவருகிற "க்ஷத்திரிய மித்திரன்" எனும் பெயர்வாய்ந்த சிறந்த செந்தமிழ் மாதசஞ்சிகை வாயிலாய்த் தமது ஆழ்ந்த கல்வித் திறமையையும் நூலாராய்ச்சியையும் இடைவிடாமற் பிரசுரித்து நாடார்குலப் பெருமையை யாவரும் பிமிக்குந்தன்மையாய் நிலைநாட்டி வருவது யாவரும் நன்கறிந்தவிஷயமே. இப்பெரியாரின் நிலைமையைச் சற்று உற்றுநோக்கினால் பெருவியப்பாயிருக்கும்- தமிழ் இலக்கண இலக்கிய வல்லுனராய் தெலுங்கு கிரந்தம் ஆங்கிலம் முதலிய பல பாஷைகளில் விசேஷ பாண்டித்யமுள்ள பிரபல வித்வத்தன்மைவாய்ந்த இவர் கலாசாலைகளில் பண்டிதராயமர்ந்து அல்லது பல வேறுவழிகளில் ஈடுபட்டும் நூல்களியற்றியும் இதுகாறும் தமது செல்வாக்கை நிலை நிறுத்த முற்பட்டிருப்பரேல் இவரது கீர்த்திப் பிரதாபம் உலகெங்கும் பரவி ஏராளமாய்ப் பொருளும் சம்பாதித்திருப்பாரென்பதிற் சந்தேகமில்லை. தனக்கென வாழாப் பிறர்க்குறியாளரான இவரோ அத்தகைய சுயநல முயற்சியில் ஈடுபட்டாரில்லை. இன்று உலக சிரேஷ்டராயக் கருதப்படும் மஹாத்மாகாந்தியடிகள் இந்தியாவிலுள்ள பிரபல பாரிஸ்டர்களில் ஒருவராய் தம்திறமையால் லக்ஷங்கணக்கான பொருள் சம்பாதிக்கக் கூடிய ஆற்றல் பெற்றவராயிருந்தும் அப்பெரும் பேற்றினைப்பொருட்படுத்தாமல் உதறித்தள்ளித் தம்ஜன்ம பூமியாகிய பாரத நாட்டின் விடுதலைக்காக உழைப்பதே தமது கடமையெனப் போந்து சகிக்க முடியாத பல ஆபத்துகளுக்கிடையே தமது மனோசக்தியை உலகமுழுதும் செலுத்தி இந்து தேச மகாஜனங்களின் சுகதுக்கங்களைத் தமதாகப்பாவித்துத் தேசாபிமானத்தில் ஈடுபட்டிருப்பதேபோல் நமது கிழச் சிங்கமாகிய ஸ்ரீமான் கிராமணியாரவர்கள் பூர்வீகமான தமது சொத்துக்களையும் அபாரவருமானங்களையும் கொஞ்சமும் லக்ஷியம் செய்யாமலும் அத்தனையும் செலவிட்டுப் பல பாஷைகளையும் ஐயந்திரிபறக்கற்றுணர்ந்து பன்னூலாராய்ந்து நமதுகுலப் பெருமையை நிலைநாட்டுவதே தமது மாபெருங் கடமையாய்க் கொண்டு சுயநலத்தை வெறுத்துக் குலாபிமானமொன்றையே தமது லக்ஷியமாய்க் கருதித் தமது நோக்கத்தைப் பூர்த்தி செய்துவருகிறார். நாடார் குலததுக்கு விரோதமான வித்வான்களை வாயடக்கி ஜெயம்பெற்றார். நாடார்குலப் பெருமையைப் பண்டிதரும் பாமரரும் உண்மையுடன் ஒப்புக்கொள்ளச் செய்தார். இன்னம் இவரது பெருமைகளை ஒவ்வொன்றாய்ச் சொல்லுவதாயின் மித்திரன் இடங்கொடான். இத்தகைய பேரபிமானிக்கு நாடார் ஜனசமூகம் எத்தகைய கடப்பாடுடைத்து? தமது குலநலத்திற்காக, அரியபெரிய தியாகங்களைச் செய்து உழைத்து வருகிற இப்பரோபகாரிக்கு போதிய ஆதரவு இல்லாதிருப்பது விசனிக்கத்தக்க விஷயம். எத்தகைய கஷ்டநஷ்டங்களுக்கிடையில் க்ஷத்திரிய மித்திரனைத் தொடர்ந்து நடத்தி வருகிறாரென்பதைச் சமயம் வாய்க்கின் மறுமுறை விஸ்தரிப்பாம். இப்பெரியாருக்குத் தற்சமயம் வயது சுமார் 50 ஆகியிருக்கலாம். விருத்தாப்பிய திசையில் தாம்செய்து முடிக்கவேண்டிய வேலை ஜாஸ்திபாக்கியிருப்பதாகக் கருதுகின்றார். தமது முழு ஆராய்ச்சியையும் மாத சஞ்சிகையாகிய க்ஷத்திரிய மித்திரனில் பிரசுரிப்பது அசாத்யமென்றும் ஆகவே தமது காலத்தில் இன்னுமநேக நூல்கள்வெளியாகவேண்டியதிருப்பதாகவும், "நாடார் சொல்லாராய்ச்சி"யெனும் நூல்பகிரங்க அரங்கேற்றம்பெற வேண்டுமென்பதும் அவரது அத்யந்த விருப்பமாயிருக்கிறது. அவருடைய பிரசுரங்கள் நாடார் குலப் பின்வாரிஸ்களுக்கு வயிரப்படைபேடென்றபலத்த அரணாயிருக்கு மென்பதும் மறுக்கமுடியாத உண்மை. எனவே ஸ்ரீமான் கிராமணியாரவர்களுக்கு நாடார் மகாஜனங்களின் பூரண ஆதரவு அவசரதேவையாயிருக்கிறது. ஏஜெண்டுகளாவது உதவி ஆட்களாவது பிரசாரகர்களாவது இல்லாமல் தாமாகவே தனிமையாய் பத்திரிகை நடத்தி வருவதால் அவருக்கு ஒத்தாசைசெய்ய ஒவ்வொரு நாடாரும் முன்வரவேண்டும். இப்பவோ பின்னையோ சற்றுநேரத்திலோ வென்பது மானிடவாழ்க்கை ஆதலால் நன்றென்புதை இன்றே செய்யவேண்டும். நாடார்களுக்குள் முதன்முதலாய் பத்திரிகைஉற்பத்திக்குக்காரண பூதர்களாயிருந்தவர்களும் நாடார் சொல்லாராய்ச்சி அரங்கேற்ற நிதி, 'நாடார்குல மித்திரன்' க்ஷேமநிதி, க்ஷத்திரியமித்திரன் பாதுகாப்புநிதி முதலிய நிதிகளை முதலாவது ஏற்படுத்தியவர்களும் குலாபிமான முயற்சியில் சதா முன்னணியில் நிற்பவர்களுமான இலங்கை நாடார்களின் பூரணஅபிமானத்தை முதன்மையாகப் பெறவேண்டு மென்ற நோக்கத்துடன் நாலது ஏப்ரல் மாதத்தில் இலங்கைத்த விஜயம் செய்வதாயறிவித்திருக்கிறார்கள். ஸ்ரீமான் கிராமணியாரவர்களை நேரிற்சந்திப்பதை இலங்கை நாடார்கள் பெரும் பாக்யமாய்க் கருதுவார்களென நம்புகிறோம். கண்டி, காலிமற்றும் காட்டுப்புறங்களிலுள்ள நாடார்களும் கனம் கிராமணியாரவர்களைத் தமது பகுதிகளுக்கும் அழைத்து கௌரவப்படுத்தவேண்டியது கடமை. இலங்கைவாசிகளான நாடார்குலாபிமானிகளனைவரும் தத்தம் சக்திக்கேற்றவாறுநன்கொடை கொடுத்தும் சந்தாதார்களாய்ச் சேர்ந்தும் போஷகப் பிரபுக்களாகவும், ஜீவிய சந்தாதார்களாகவும் சேர்ந்தும் சேர்த்துக்கொடுத்துதவியும் தமது கடமையை நிறைவேற்றக்கோருகின்றோம். பத்து லக்ஷ நாடார்களின் க்ஷேமத்தை தம்சுயக்ஷேமமாய்க் கருதி குலாபிமானத்தில் ஈடுபட்டிருக்கிற இப்பெரியாருக்கு குலநலம் ஒருசிறிதுங் கருதாமல் நம்சுயநலங்கருதி யுழைக்கிற நாம இயன்றளவு ஒத்தாசைசெய்து மென்மேலும் உற்சாகமூட்டவேண்டுவது நமது மாபெருங்கடமையாகும். நமது கிழச் சிங்கம் நீடிய ஆயுளோடிருந்து தளரா ஊக்கத்துடன் உழைக்கப் பரமன் கிருபையைச் சதா பிரார்த்திப்போமாக. சுபம்!

கெ. கலியாணசுந்தர நாடார் கொழும்பு.

கள் எந்த மதசம்பந்தமான உத்தியோகம் அல்லது மததர்ம சொத்து நிர்வாகத்துக்கும் பாத்தியமுடையவரல்ல. சந்ததி பாத்தியச் சட்டப்படி சகல சொத்துக்களுக்கும் உடையவராவர். ஒரு குடும்பத்தில் ஒருவர் தமது மனச்சாட்சிப்படி வேறு ஜாதி வகுப்புகளில் விவாகம்செய்து கொள்ள இச்சட்டத்தின்படி உரிமைபெற்றிருப்பதுபோல் அந்த நபருடைய தகப்பனும் இன்னொரு பிள்ளையை ஸ்வீகாரம செய்துகொள்ள சட்டப்படி உரிமை யுண்டு. தனக்குப் பின் பிள்ளை சிரார்த்தம் செய்ய வேண்டு மென்று ஒரு தகப்பனார் விரும்புவது சகஜம். பிள்ளை தனது மனச்சாட்சிப்படி விவாகம் செய்து கொள்ள இச்சட்டப்படி உரிமையுண்டாயினும் வேறு புத்திரனை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள தகப்பனுக்கும் உரிமை கொடுத்திருக்கிறது. இந்த மசோதாவினால் நமது அவிபக்த குடும்பங்களோ, மதச்சொத்துக்களோ, குடும்ப வாழ்வோ பாதிக்கப்படமாட்டாது. ஒரு சிலரே அச்சட்டத்தின் மூலமாகப் பரிகாரம் தேட தைரியமாக முன்வருவார்கள். ஒருவன் தமதுமனச்சாட்சிப்படி நடக்க அனுமதி கொடுப்பதே மசோதாவின் நோக்கமாகும்.

நாடார்குல மித்திரன்

க்ஷேமநிதி.

இரங்கூனில் மிஸ்டர் ஏசுதாஸ் நாடார் அவர்கள் மூலம்.

ஸ்ரீமான்களான

ந. மா. சங்கரக்குமார்நாடார்	ரூ 10.
S. S. செல்லையா நாடார்	ரூ 10.
ச. பெ. தெய்வநாயகநாடார்	ரூ 10.
தொ. செ. சாமிக்காளை நாடார்	1.
ம. க. சு. செந்தூர் நாடார்	ரூ. 1.
அ. ரா. மூக்க நாடார்	ரூ 1.
த. செல்லையா நாடார்	ரூ 1.
ச. வடிவேல் நாடார்	ரூ 1.
வா. சாமிநாத நாடார்	ரூ 1
ஆக	ரூ 36.

பர்மா

வர்த்தமானம்.

(நமது நிருபரிடமிருந்து)

பர்மா இந்திய கிறிஸ்தவர் சங்கம்.

ஸ்ரீமான் A. V. ஜோசப் நாடார் M. L. C. அவர்களைத் தலைவராகக்கொண்ட மேற்படி சங்க 25-வது வருஷக்கொண்டாட்டம் (silver Jubilee Celebration) சென்ற பிப்ரவரி மாதம் 10-ந் தேதி சனிக்கிழமை 5½ மணிக்கு கிழக்கு இரங்கூன் ஸ்ரீமான் சிதம்பர செட்டியார் ஹைஸ்கூல் கட்டடத்தில் நடைபெற்றது. அவ்வமயம் ஸ்ரீமான் F. D. எட்வர்ட்ஸ் அவைத்தலைமை வகித்தனர். முதலாவது மிஸ். G. ஹென்றி மெஸ்ஸர்ஸ் பிலிப் ஸாமு, ஹொரடியாவும், மிஸ் H. ஹென்றி, மிஸ்டர் லோபோமுதலியவர்கள பல வித் வாத்தியங்களின் மூலமாய் இனிமையாகப் பாடினார்கள். காரியதரிசி ஸ்ரீமான் S. M. குழந்தை B. A. அவர்கள் விஜயஞ்செய்த கனவான்களுக்குவரவேற்பு வந்தனோபசாரம் செய்தனர். பின்புதமிழில் ஜூபிலிகீதம் கவி ராஜ ஸ்ரீமான் ராஜாராவ் அவர்களாலும் பால வித்துவான் மிஸ்டர் தேவராஜா அவர்களாலும் பாடப்பட்டது. பின்னர், 1897ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்ட மேற்படி சங்க 25 வருஷ சரித்திரம் இங்கிலீஷில் எழுதப்பட்ட விஷயம் ஸ்ரீமான் Y. D. சார்லஸ் நாடார் B. A. அவர்களால் வாசிக்கப்பட்டது. பின்பு கொண்டாட்டத்திற் கென்று தெரிந்தெடுக்கப்பட்ட பாடல் ஒன்றையிஸ் M ராஜகோபால் அவர்கள் பாடினார்கள்.

அப்பால் நமது குலாபிமானியும் தனகோடி வர்த்தகரும் பர்மா சட்ட நிருபணசபை மெம்பருமான ஸ்ரீமான் A V. ஜோசப் நாடார் அவர்கள் பர்மா சட்டசபையில் மெம்பர் ஆனது பற்றி ஸ்ரீமான் D. P. துரைராஜ (நாடார்) ஐயர் சந்தோஷ உபசாரம் கூறினார்கள். கீதம் ஒன்று மிஸ் H. ஹென்ரி அவர்களால் பாடப்பட்டது. சிறிது ஓய்வுநேரம் கொடுக்கப்பட்டது.

இரண்டாம் பாகமாக முதலாவது இந்தியராகங்களில் கவிராஜ ஸ்ரீமான் ராஜாராவ் அவர்களாலும் பால வித்துவான் மிஸ்டர் தேவராஜா அவர்களாலும் வெகு இனிமையாக பாடப்பட்டது.

அப்பால் அடியிற் கண்ட பட்டதாரிகளுக்கு ஸ்ரீமான் D ஜேசுவடியான் நாடார் B. A. அவர்களால் நல்லுபசாரம் கூறப்பட்டது. பட்டதாரிகள் பின்வருமாறு-மெஸ்ஸர்ஸ் A. டேவிட் பி. ஏ. S. S. தேவர் B. A, G. D. வில்லியம்ஸ் B. A, M. ஆரோன் B. Sc. J. A. ரோஸ் B. A. B. L. முதலியவர்கள்.

அப்பால் இங்கிலாந்து சென்று படித்துத்திரும்பிய ஸ்ரீமான் S.S. ஞானவீர நாடார் பி. ஏ யல் டி. Bar-at-Law M R, A. S; F. R. H. S F. R. G. S; அவர்களுக்கும் இரங்கூனில் டெப்யூடி அக்கௌன்டென்ட் ஜெனரலாக வருக்கும் ஸ்ரீமான் K. M. ஆபிரகாம் பி. ஏ. அவர்களுக்கும் ஸ்ரீமான் மலாக்கி பி. ஏ. அவர்களால் வரவேற்பு உபசாரம் செய்யப்பட்டது. பின்னர் பலகீதங்கள் பாடப்பட்டது. கடைசியாக அக்ராசனர் முடிவுரை கூறினார்கள், இராஜ வாழ்த்துடனும் சிற்றுண்டி சந்தண புஷ்பதாம் பூலாதிகளுடனும் சபைகலைந்தது.

தேவை.

இம்பீரியல் காட்டு ஸேர்விஸ்.

1923 வருஷம் ஜூன் மாதம் 30-தேதிக்குள் சாஸ்திரத்தில் (science) முதல்தரமாக பரீக்ஷையில் தேறின பி. ஏ. யாவது எம். ஏ. யாவது 19 வயதுக்கு குறையாமல் 24வயதுக்கு மேற்படாத இந்தியர்களும் பர்மியர்களும் பர்மா ரெவினியூ செக்ரட்டேரிக்கு டாக்டர் சர்ட்டிபிக்கேடு விண்ணப்பம் செய்துகொள்ளலாம். இதைப் பற்றிய விஷய சூசனம் பர்மாரெவினியூ செக்ரட்டேரி ஆபீஸில் கிடைக்கும். இவ்விளம்பரத்தில் கண்டபடி இந்தியர்களும் மனுச்செய்யலாம். காலமும் சிறிது நீடித்திருக்கிறபடியால் நமதுகுல சாஸ்திரவிற்பன்னர்கள் இந்த நல்ல சந்தர்ப்பத்தை இழந்து விடாதிருக்கும்படி வற்புறுத்தி தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

பல திரட்டு.

(மேனி எழுதுகிறார்.)

ஐய ஐயோ ஐரோப்பாவே!

ஐரோப்பாவே! உன் கதியுமா இப்படியாகவேண்டும்? உனது நாகரீக சொரூப எங்கே? உனது வியாபாரமுழுக்கெங்கே? உனது அதிகாரமும் ஆடம்பரமும் எங்கே போனது? உலகமெல்லாம் உன்மயமாகத்தானே இருந்தது. இருந்திருந்தாப்போல் திடீரென்று உன் நிலைமை மிகவும் விட்டுத் தெரிகிறதே? 30மைல் 67மைல் தூரம் பாய்ந்தடிக்கும் உனது பீரங்கிகளெல்லாம் எங்கே! ஆகாய விமானம், கப்பல் படை, காலாட்படை தரைப்படை, தண்ணீர்ப்படை எல்லாம்என்னசெய்கிறது? கடந்த 17வது நூற்றுண்டிலிருந்துகொஞ்சம் கொஞ்சமாகப்பெருகிக்கொண்டு வந்த உனது செல்வாக்கு20வது நூற்றுண்டின் ஆரம்பத்திலேயேஅழியும்காலம்ஏற்பட்டுவிட்டதே! பொருளாதார நிலைமைகுன்றிவிட்டதே! வேலையில்லாதார் கூட்டம் அதிகரித்துவிட்டதே! சண்டைசெய்ய சக்தியில்லாமல் சாத்வீகப்போராடங் காலமுமாச்சே! கட்டுண்டு கண்மூக்குத்தெரியாமலிருக்கிறது. உனது குருக்கெலும்பு ஒடிந்துவிட்டதுபோலல்லவா இருக்கிறது. சரித்திரம் இனி உன்னை தலைதூக்க விடாதே! உனது ஆசாரம், நீதி, மதம் மூதலியவை மங்கிவிட்டதே! நீயும் இந்த நிலைமையடைந்தாயா? பாவம்! பரிதாபம்!! கொடுமை!!! இருந்தாலும் உனது நிலைமை சீர்பட இன்னும் எத்தனை நூற்றுண்டுகள் செல்லுகின்றனவோ!

சபாஷ் சட்டசபை.

இந்திய சட்டசபையே! சபாஷ்!! உனதுவேலை மிகவும் மெச்சத்தகுந்தது. இவ்வளவு கைசாக்கையும்வைத்துக்கொண்டு இவ்வளவு காலமும் சும்மாதானே இருந்தாய்? பொது ஜனங்கள் உன்னைப்பற்றி ஒருவாறல்லவோ நினைத்திருந்தார்கள். கைச்சாக்கை கடைசியில் காட்டுவோ மென்று வகையைக்கட்டிக்கொண்டு சும்மா இருந்தாயா? என்ன பைத்தியக்காரத்தனம்! ஆதிமுதல் நீ இப்படிப்பட்ட சபாஷ் வேலை செய்திருப்பாயாகில் பொது ஜனங்கள் உன்னைப்போற்றித்துதிப்பார்களே!

உப்புவரியில் தான் உனது உயர்ந்த நோக்கங்களும் பரந்த எண்ணங்களும் வெளியானது. நீ; பப்ளிக் சிவில் கமிஷனுக்கு 3 லக்ஷம் ரூபாய்கள் தரமாட்டோமென்று ஆக்ஷேபணைசெய்ததில்கூட பொதுஜனங்[illegible] உன்மேல் பிரியம் ஏற்படவில்லை ஆனால் உப்புவரி விவாதத்தில்தான் [illegible] ஒருவாறு தெரியலாயிற்று [illegible] நிலைமையைய் உணர்ச்[illegible] மிகவும் சாமார்த்திய மாய்[illegible] மெச்சத்தக்கதே. ஆனால்,நீ சமீபத்தில் இருக்கும் மறு தேறுதலுக்குஆசைப்பட்டு இப்படியெல்லாம் பாவனை செய்திருந்தால் இழிந்த குணமுண்டென்று எல்லோரும் ஏளனம் செய்வதற் கிடமுண்டாகுமன்றோ? ஆகவே, உனக்கியற்கையான நற்சுபாவத்துடன் எப்பொழுதும் பிரகாசிப்பாயாக!

செத்தபாம்பு அடிப்பதில் கெட்டியப்பா!

பிரான்சு செத்த பாம்பு அடிப்பதில் கெட்டியப்பா! இந்த,சூத்ரவீரத்தன்மையை எப்படித்தான் மெச்சுவதோ! உலகமெல்லாம் ஒரு பக்கந்திரண்டு தன்னை நோக்கிச்சண்டைசெய்தபோதும்நான்கு வருடமும் விடாமலும் களைக்காமலும் சளைக்காமலும்தொடர்ச்சியாகப்போராடி இப்போதுபொருளாதாரநிலைமைகெட்டு யுத்தமயக்கம் தெளியாமல் ஏங்கிக்கிடக்கும் ஜெர்மனியின்மேல் பிரான்சு படையெடுத்துச் சென்று ஜெர்மனியின் உயிர் நிலைக்குச் சமானமான சகல கைத்தொழில் வளப்பங்களும் நிறைந்த ரூர்பிரதேசத்தை கைப்பற்றிக்கொண்ட வீரசூர, தீர, பராக்கிரம தைரியத்தை எப்படித்தான்மெச்சுவதோ நமக்குதெரியவில்லை சபாஷ்!பிரான்சு!! செத்தபாம்பு அடிப்பதில் உனக் கிணையில்லை இந்த வீரத்தன்மையை மகாயுத்தத்தின்போது ஜெர்மனி யிடத்தில் காட்டி யிருக்கலாமே. ஜெர்மனி இப்போது சாத்வீகப் போராடிக்கொண்டு உனக்கு யாதொரு கெடுதலும் செய்யாமலும் சண்டைக்கு எதிர்க்காமலும் இருக்கும்போதே சுமார் 78-லக்ஷம் பவுன்கள் செலவுஏற்படுவதற்குத் தகுந்தபடி படைகளையும் பீரங்கி மோட்டார்களையும் ஆகாய விமானங்களையும் செலவு செய்து ரூர்பிரதேசத்தை பிடித்திருப்பதானல், ஜெர்மனி முன்போல் தனது முழு சக்தியையும் மறுபடியும் காட்ட முற்படுமானல் உன் கதி என்னவாகுமென்று நினைத்தாய்? பிரான்சே! உனதுசக்திக்கும் யுக்திக்கும் புத்திக்கும் சரியானதைச் செய்! வீணில் பக்கபலத்தை திடமாக எண்ணி ஏமாந்து காரியத்தைக் கெடுத்துக்கொள்ளாதே, கடைசியில் உனக்கொரு நல்ல வார்த்தை அதாவது:-ஒவ்வொருவரும் தன் காரியத்தில் தான் கண்ணுயிருப்பார்கள். மற்றவர்கள் தேவைக்குதவிசெய்வார்கள் என்பது சந்தேகந்தான்.

மதில் பூனையா?

நமது காருண்ய பிரிட்டிஷ்கவர்ன்மெண்டாருக்கு, எட்டினல் கொண்டையைப் பிடிப்பதும் எட்டாவிட்டால் காலைப் பிடிப்பதும் கொஞ்சினல் மிஞ்சுகிறதும், மிஞ்சினல் கொஞ்சுகிறதுமேவழக்கமாம். இப்படியும் சில பத்திரிக்கைகள் எழுதுகின்றன. ஒரு சுவரின் மேலிருக்கும் பூனை எந்தப்பக்கந்தான்குதிக்குமென்று உறுதியாய் சொல்லமுடியாதாம் அதுபோலவுமென்றுசுட்டிக்காட்டுகின்றன அது வாஸ்தவந்தானு வென்ற ஐயம் நமக்கேற்படுகிறது. எல்லாம் வரவரக் கண்டறிவோம்.

உசார் !

மகா ஜனங்களே உசார்! ஓட்டர்களே உசார்! உசார்!! சமீபத்தில் நடக்கப்போகும் தேறுதலுக்கு விழிப்புடனிருந்து ஓட்டுக்கொடுங்கள். உசாராய்த்தானிருக்கிறோம்! விழிப்புடன் தானிருக்கிறோம் இனி ஏமாறமுடியாது என்று ஜனப்பிரதிநிதிகளெனச்சொல்லுவோர்க்கு எச்சரிக்கை செய்யுங்கள். வீணர்களுக்கும் பயங் கொள்ளிகளுக்கும் பதர்களுக்கும் வாய்ப் பேசத்தெரியாத பொம்மைகளுக்கும்போலிகளுக்கும் ஓட்டுக்கொடுக்கதயாராயில்லைஎன்றுதாராள்மாக சொல்லுங்கள். ஆடம்பரத்திற்கும் கௌரவப் பட்டங்களுக்கும் பெரிய உத்தியோகங்களுக்கும் ஆசைப்படுவோர்களுக்கும் சுயநலமுள்ளவர்களுக்கும் தேசமுன்னேற்றத்தில் அபிமான மில்லாதவர்களுக்கும் ஓட்டுக்கொடுப்பதில்யாதுபயன்?

நான்குநேரித் தாலுகா.

நாடார்மகாஜனகான்பரன்ஸ்

சிதம்பரபுரம்,

களக்காடு போஸ்ட்.

அக்கிராசனம் வகிக்க ஒப்புக் கொண்டிருக்கும் பெரியோர்கள்.

முதல்நாள் முற்பகல்.

சென்னை சட்டசபை மெம்பர் ஸ்ரீமான் ஊ. பு. அ.

சௌந்தரபாண்டிய

நாடார் அவர்கள்

முதல்நாள் பிற்பகல்,

ஸ்ரீமதி

A. காருண்ய அம்மாள்

அவர்கள் மிஸ்வி, டோணவூர்.

இரண்டாம்நாள் முற்பகல்.

நாடார் மகாஜன சங்கம் காரியதரிசி ஸ்ரீமான்

மா. வே. பழனிச்சாமி

நாடார் அவர்கள் மதுரை.

இரண்டாம்நாள் பிற்பகல்

நாடார் மகாஜன சங்கம், கௌரவ மானேஜர், ஸ்ரீமான்

A. பொன்னைய நாடார்

அவர்கள் B. A. மதுரை.

நாடார்குல கனவான்களே !

நமதுகுல முன்னேற்றத்தைக் கருதி நான்குநேரித் தாலுகா நாடார் மகாஜன கான்பரன்ஸ் ஒன்று சிதம்பரபுரத்தில் நாளது 1923-ம்ஸு ஏப்ரல்மீ 5, 6-தேதிகளுக்கு தமிழ் துந்துபிஸு பங்குனிமீ 23, 24-ம் தேதிகளில் நடைபெறும் அவ்வமயம் அக்கிராசனம் வகிக்க மேல்க்கண்ட பெரியோர்கள் அன்புடன் மனமுவந்திருக்கிறார்கள். அந்த மங்களமானகாலத்தை ஒவ்வொரு அபிமானிகளும் தங்கள் தங்கள் உன்னத காலமாகக் கொண்டு இவண் விஜயஞ் செய்து பெரியோர்களால செய்யப்படும் குலமுன்னேற்றத்திற்குரிய தீர்மானங்களையும், கல்வி, அறிவு, ஒழுக்கம், ஒற்றுமைக்கேதுவாகச் சொல்லப்படும் உபாயங்களையும் நேரில் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியம்

கான்பரன்ஸ் சிறப்புடன் நடைபெற வேண்டி டிக்கட்டுகளைப் பெற்றுக் கொண்டு நாடார் குலாபிமானிகளனைவரும் தவறாது விஜயஞ் செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

அயலூர்களிலிருந்து வரும் டெலிகேட்டுகளுக்கு இடவசதியும் போஜன வசதிகளும் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. தனி ஜாகை விரும்பும் கனவான்கள் உபசரணைக் கமிட்டி ஆபிசுக்கு லெட்டர் மூலமாய் தெரிவித்தால் அவ்விதம் செய்து கொடுக்கவும் முடியும்.

டிக்கட்டு விபரம்.

முதல் வகுப்பு டிக்சட்	ரூ 2—0—0
இரண்டாவது வகுப்பு டிக்கட்	ரூ 1—0—0

உபசரணைக் கமிட்டியார்கள்,
சிதம்பரபுரம்

சிதம்பரபுரம் }
24—3—23. }

சென்னை சட்டசபைக் குறிப்புகள்.

ஒதுக்கி வைக்கப்பட்ட இனங்களின் முக்கிய புள்ளி விபரங்கள்,

1923-24ஸு வரவு செலவு திட்டத்தின் மேல் செலவு இனங்கள்விவாதிக்கப்பட்டது,

கலால் இலாக்கா சம்பந்தமான கொள்கை விஷயமாக ஆறு கனவான்கள் செலவைக்குறைக்கவேண்டு மென்றும மதுவிலக்கு சம்பந்தமாக கவர்ன்மெண்டார் பலமுறைகளைகையாளல் வேண்டும் என்றும் விரிவாகப் பேசியிருக்கிறார்கள். ஆனல் மந்திரிகனம் ராவ்பகதூர் பத்ரோபதிலளிக்கையில் கனம் மெம்பர்களின் அபிப்பிராயத்திற்கு மாறுபட்ட கொள்கை தமக்கில்லை என்றும் பொக்கு இலாக்காக் கமிட்டிக்கு எழுதி குறிப்பொன்றில் கவர்ன்மெண்டார் லால் வருமானத்தை விட்டுவிடலா என்று சொல்லியிருப்பதாகவும் லைசென்ஸ் கட்டணத்தை உயர்த்துவதாலே குடிவழக்கத்தை ஒழிக்கவேண்டு மென்றும், இவ்விஷயமாக நிபுணர்களும், அக்கறையுள்ளவர்களும், ஜனங்களும் கொடுக்கும் ஆலோசனையை ஏற்றுக்கொள்ளலாமென்றும் தெரிவித்திருக்கின்றார். கலால் இலாகாவிற்காக ரூ 2 லக்ஷத்து 67 ஆயிரம் செலவழிக்க வேண்டுமென்று ஒதுக்கிவைக்கப் பட்டிருக்கிறது,

• • •

முத்திரைக் கடிதஇலாகா விஷயமா ஸ்ரீமான் வி. வி. வெங்கட்டராமணயங்கார் இந்தியாவில் முத்திரைக் காகிதாசி செய்யவேண்டு மென்றும் கவர்ன்மெண்டார் இதுவிஷயமாக நடபடிக்கை எடுக்கிறார்களாவென்றும் கேட்ட இவ்விஷயம் கவனிக்கப்பட்டு வருகிற என்று பதிலளிக்கப் பட்டதுடன் 58, 5000 ரூபாய் செலவினத்திற்கு ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது.

• • •

காட்டிலாகா மொத்தநிர்வாகச் செலவுகளுக்கென்று 430000 ரூ ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. கன்ஸர்வேட்டர் பதவிகளில் ஒன்றை இந்தியருக் கென்று ஒதுக்க வேண்டுமென்று கேட்டதில் இவ்வருஷம் புதிதாய் ஒருவரையும் நியமிக்கப் போவதில்லையென்றும் தகுதியான இந்தியர் ஒருவர் அகப்பட்டால் கன்ஸர்வேட்டராக நியமிக்கப்படுவாரென்றும் பதிலளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

• • •

பத்திரப் பதிவு இலாகா சம்பந்தப இலாகாவை திருத்தியமைக்க வேண்டுமென்று ஒரு மெம்பர் எடுத்துரை மாகாணத்தின் செல்வநிலை சீர்படும்வரையில் இவ்விதம் செய்வதற்கில்லையென பதிலளிக்கப்பட்டதுடன் டி இலாகா செலவுக்கென்று 23 லட்சத்து 52, ரம் ரூபாய் ஒதுக்கிவைக்கப் பட்டிருக்கிறது.

• • •

நீர்ப்பாசன இலாகா சம்பந்த (ஸிவில் இலாகாவுக்கு) 8லட்சத்து ஆயிரம் ரூபாய் செலவுசெய்ய ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது.

• • •

மராமத்துஇலாகா நீர்ப்பாசனப்பட்ட விஷயமாக மராமத்து உத்தியோகஸ்தர்களின் செலவுக் கென்று 52 லக்ஷத்து 67ஆயிரம் ரூபாய் செலவு செய்ய அனுமதி கொடுக்கப்பட்டது.

• • •

பொது நிர்வாகச் செலவு விஷய கவர்னரின் மெய்க்காவலாளர் ணக்செலவு குதிரைச்செலவுகவர்ன பரிவாரங்கள்சில்லரைச்செலவு முதலியவைகளுக்காக 6லட்சத்து 89 ஆயிரம் ரூபாய் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது.

• • •

சட்டசபைக்கென்று 3லட்சத்து ஆயிரம் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது.

• • •

நிர்வாகச் செலவுக்கென்று 15 லட்சத்து 84ஆயிரம் ரூபாய் செலவுசெய்ய அனுமதி கொடுக்கப்பட்டு ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது.

• • •

மிலைவாசச் செலவிற்கென்று ரூபாய் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

D நாடார்குல மித்திரன், விசேஷ அனுபந்தம்.

ருத்ரோத்காரி௵ பங்குனிமீ 19௳.

பொதுவர்த்தமானம்.

இந்திய வெற்றி.

டாக்டர் உ. என். தாஸ் எடின்பரோவில் நடந்த எப். ஆர். வி. எஸ். (F. R. C. S.) பரீட்சையில் முதல்வராகத்தேறினார்.

உலகத்தின் சேனைகள்.

இராஜ்யங்கள்.	தொகை.
போலந்து	274000
ஸ்பெயின்	215 90
அமெரிக்கா	65000
ருஷ்யா கிரமமான சேனை	250 00
,, சாப்புச் சேனை	16[illegible]0
ஸ்வீடன்	1[illegible]0 00
செக்கோஸ்லோவியா	150000
பெல்ஜியம்	118969
நார்வே	60000
ஹங்கேரி	350 0
பல்கேரியா	33 00
நெதர்லாண்ட்ஸ்	290 0
சியாம்	18430
பிரான்ஸ்	736 61
ஜப்பான்	150000
இத்தாலி	21[illegible]00
ருமேனியா	200000
சுவிட்சர்லாந்து	16[illegible]000
பின்லாந்து	121600
ஜக்கோஸ்லேவியா	109 00
ஜெர்மனி	100000
போர்த்துக்கல்	40[illegible]0
டென்மார்க்	33 00
ஆஸ்டிரியா	3[illegible]000
லாட்வியா	25 00
எஸ்தோனியா	16000
லித்துனியா	13000
பிரிட்டிஷ் யுத்தசேனை	2440 0
,, ரிஸர்வ்சேனை	90000
,, டெரிடோரியல்சேனை	13500

கொசுவினால் பிழைத்தான்.

திருநெல்வேலி வாசலைச் சேர்ந்த ஒரு காட்டில் ஒரு குடியானவன் இருட்டித்தனமாய் காசங்கழி என்னும் ஒரு வகை மரத்தை வெட்டுவதற்கு இரவில் சென்றான். அவன் வெட்டிக் கொண்டிருக்கையில் ஒரு நாகம் அவனைத் தீண்டியது. நிலவில் அந்நாகத்தையும் கண்டான். சிறிதுநேரத்தில் அவனுக்கு பிரக்ஞை தப்பிவிட்டது. காலையில் சூரிய வெப்பத்தில் எழுந்து பார்க்கையில் பெரியகாட்டுக் கொசுக்கள் இவன் மேலும் இவனைச்சுற்றி 6-அங்குலக் கனத்தில் இறந்து கிடப்பதைக் கண்டான். இவ்விதம் தப்பிவந்த இவன் கண்பரிடமும் காட்டினான் இவன் சரீரத்தில் பரவிய விஷத்தை கொசுக்கள் இழுத்து விட்டதால் பிழைத்தான் என்று சொல்லப்படுகிறது.

நாய்களுக்கு ஆராதனை.

புதுநெல் அறுவடையானதும் அதிலிருந்து சமைக்கப்பட்ட சாதத்தின் முதற்கவளம் பசுக்களுக்கு இந்துக்கள் வழங்குவது வழக்கம். ஏனெனில் பசுக்களாலேயே விவசாயம் நடைபெறுகின்றதால் இத்தகைய நோக்கத்தோடுதான் சங்கராந்திப் பண்டிகை கொண்டாடப்படுகின்றது. ஆனால் சைனா தேசத்தார் புது நெல் சாதத்தின் முதற்கவளத்தை நாய்களுக்கு சமர்ப்பித்து ஆராதிக்கிறார்கள். வெகு காலத்திற்குமுன் சீனாதேசத்தில் நெல்விளைவில்லை. தங்களுக்கு வேண்டிய நெல்லை வெளி தேசங்களிலிருந்து அவர்கள் வரவழைத்து வந்தார்கள். தேசத்தில் நெல்பயிர் வேண்டுமென்று அவர்கள் முயற்சித்தபோது விதைகள் கிடைக்கவில்லை. தாங்கள் இறக்குமதி செய்த நெல்களெல்லாம் வேகவைத்து தங்களுக்கு அனுப்பப்படுவதால் அவற்றினின்றும் விதைகள் சுத்தப்படுத்த முடியவில்லை. சீனாதேசத்தவரின் முயற்சி இவ்வாறு கைகூடாமல் போய்விட்டதால் அவர்கள் வியாகூலமடைந்திருக்கும்போது ஒருநாய் இவர்கள் உட்கருத்தை தெரிந்து நெல் உற்பத்திப் பிரதேசம் சென்று காயவைக்கப்பட்டிருந்த புது நெல் குவியலில் புரண்டு தன் தேகத்தில் நெல்மணிகளை ஒட்டிக்கொள்ளும்படி செய்து ஒரு ஆற்றைக் கடந்து தன் இருப்பிடத்திற்கு வந்ததாம். ஆற்று ஜலத்தில் போனதுபோக மீதி நெல்மணிகளை உதறவே சீனா தேசத்தார் அம்மணிகளை ஜாக்கிரதையாக பயிரேற்றினார்களாம். இப்போது சைனாதேசமெல்லாம் நெல் வயல்கள் மிகுந்து இருக்கின்றதாம். அக்காலத்தில் நாய் செய்த உதவிக்கு நன்றியாக புது நெல்லின் முதற்கவள அன்னம் நாய்களுக்கு இடப்படுகிறது. இவ்வருடம் அநேகமாக நெல்விளைந்திருப்பதால் இக்கொண்டாட்டம் பலமாக இருக்கிறதாம்.

ஸ்ரீமான் A. V. ஜோசப்நாடார் அவர்கள் M. L. C; பேட்டி கொடுத்தவிபரம்.

(நமது நிருபரிடமிருந்து)

2-3-23 ல் வெள்ளிக்கிழமை மாலை 5-மணிக்கு நமது குலதிலகம் ஸ்ரீமான் A. V. ஜோசப் நாடார் அவர்கள் கனம் பத்திராதிபரவர்களுக்கும், கௌரவ மானேஜரவர்களுக்கும் பேட்டி கொடுத்து சுமார் 3மணிநேரம் பேசினார்கள். இரங்கூனுக்கு வடகிழக்கே அடர்ந்த மரங்களும் நந்தவனங்களும் சுற்றியுள்ளதும், சுத்தஜலம் தங்கிய ஏரிக்கரை யோரமாக ஐரோப்பியர்களின் வாஸஸ்தானங்களுக்கு மத்தியில் பார்க்ரோட்டிற்கு அடுத்தாற்போல் கட்டப்பட்டிருக்கும் ஸ்ரீமான் நாடாரவர்கள் பங்களாவுக்கு அன்னவர்கள் அழைப்புக்கிணங்கி கனம் அதிபரவர்களும், சகாக்களும் சென்றிருந்தனர் வரவை எதிர்நோக்கி யிருந்த நாடாரவர்கள் அன்னவர்களைக் கண்டதும் வரவேற்று உபசரித்து இந்தியாவில் நமது குலத்தவர் நிலைமையையும் அவர்களின் எதிர்கால வாழ்வின் போக்கையும் ஜனங்களுக்குள்ளிருக்கும் புத்துணர்ச்சியின் தன்மையையும் நாடார் மகாஜன சங்க நிர்மாண, வேலையின் நடபடிக்கையையும் தலைவர்களின் ஜாதீய ஊழியத்தையும் கேட்டுத்தெரிந்து அவர்கள் அடைந்த ஒரு மனச்சந்தோஷத்திற்கு எல்லையில்லை என்றே சொல்லலாம். அப்பால் நமது நாடாரவர்கள் தென்னாட்டில் ஒவ்வொரு வகுப்பாரின் நிலைமையையும் வகுப்புத் துவேஷங்களின் தன்மையையும் பற்றி விசாரித்தார்கள். அன்னவர்களது சம்பாஷணையின் மத்தியில் எழுந்த குலாபிமானத்தையும் தேசாபிமானத்தையும் நினைக்க மனம் பூரிப்படைகின்றது.

பின்னர் ஸ்ரீமான் நாடாரவர்கள் பர்மாவின் வியாபார விஷயங்களையும் இந்தியர் வியாபாரத் துறையில் முற்போக்கடையாதிருக்க சில குறுகிய புத்தியுடைய ஐரோப்பியர் செய்யும் அட்டூழியங்களையும் எடுத்துரைக்கும்போது நமது பாரதநாட்டின் உத்தமதேச பக்தர்களில் இவரையும் ஒருவராக எண்ணவேண்டியதிருந்தது. அப்பால் நமது அதிபரவர்கள் நமது குல பத்திரிகைகளின் கொள்கையையும் 'நாடார்குலமித்திரனின்' ஜீவியசரிதையையும் தங்களது உள்கருத்தையும் தெளிவாகசொன்னார்கள் மாலைசுமார் 8மணிக்கு கனம் அதிபரவர்களும் சகாக்களும் ஸ்ரீமான் நாடாரவர்களின் வந்தன உபசாரத்தைபெற்று திரும்பினார்கள்.

மீசைக்குப் பரிசு.

அமெரிக்காவில் மீசை வைத்துக்கொண்டிருப்பவருடைய சங்கம் ஒன்று இருக்கிறதாம். இதில் அதிக நீளமீசை வைத்துக் கொண்டிருப்பவர்களுடைய காட்சி ஒன்று நடைபெற்றதாம். 17 அடிவரை மீசைவளர்த்துக் கொண்டிருந்த ஒருவருக்கு முதற்பரிசு கிடைத்தது. இரண்டாவது பரிசு பெற்றவரின் மீசை 12 அடி நீளம் வளர்ந்திருந்தது. இந்தக் காட்சி முடிந்தவுடன் சிலர் தங்களுடைய மீசையை சிரைத்து விட்டார்களாம். சிலர் தங்களுடைய மீசையை தெருவில் குப்பைகூட்டுவதற்காகவும் பிரஸ் செய்வதற்காகவும் உபயோகித்துக் கொள்ளச் சொல்லப் போகின்றனராம்.

உலகத்தில் உயர்ந்தமனிதன்.

சமீபத்தில் ஹங்கேரியில் நடந்த கண்காட்சியில் சைபீரியாவிலிருந்து காசான் லோப் என்னும் 34-வயதுடைய மனிதனை யழைத்து வந்தனராம். அவன் உயரம் 8-அடி 3-அங்குலமும் திடசரீரமுடையவனும்; மணிக்கட்டு முதல் நடுவிரல் அளவு 1-அடி 1 அங்குலமும் பாதம் 1-அடி 9 அங்குலமும், மார்பளவு 56 அங்குலமும் தலையின் சுற்றளவு 25 அங்குலமும்; நிறையில் 458 பவுண்டும் இருந்தானும். 24 மணிநேர தூக்கமும் ஏராளமான சாப்பாடும் வேண்டுமாம்.

இரண்டு கொம்புகளுள்ள குழந்தை

டாக்காவைச் சேர்ந்த ஆகா நவாப்தியோத்தி என்ற இடத்திலிருக்கும் ஒரு முகம்மதிய குடும்பத்தைச் சேர்ந்த ஸ்திரீ ஒருத்தி சென்ற செவ்வாய்க்கிழமையில் ஒரு குழந்தையைப் பிரசவித்தாள். அக்குழந்தையின் தலையின் இருபுறத்திலும் இரண்டு கொம்புகள் இருந்தன. இன்னும் அக்குழந்தையின் தலையில் நீண்ட மயிர்கள் இருந்ததல்லாமல் வாய்முழுமையிலும் பற்கள் வயதானவர்களுக்கு அமைந்திருப்பதுபோல் அமைந்திருந்தன. பிறக்கும் போதே குழந்தை இறந்துவிட்டது. சிலர் அக்குழந்தையை வாங்க முயற்சித்தும் பயன் அளிக்க வில்லை. பின்னர் அக்குழந்தை முகம்மதியர் வழக்கப்படி புதைக்கப்பட்டு விட்டது.

நாடார் மகாஜன சங்கம் மதுரை.

பட்ஜெட் மீட்டிங்கு.

நாளது துந்துபி௵ பங்குனிமீ 30௳ (12-4-23) வியாழக்கிழமை மாலை 4-மணிக்கு சங்கம் ஆபீஸில் நடைபெறும். அவ்வமயம் மற்றும் அநேக முக்கியமான விஷயங்களைப் பற்றியும் ஆலோசிக்கப்படும். கௌன்ஸில் மெம்பர்கள் தவறாது விஜயஞ் செய்ய கேட்டுக் கொள்ளுகிறோம்.

மதுரை 27-3-23 } காரியதரிசிகள்.

இலங்கை ரத்தினபுரியிலிருக்கும் நமது குலாபிமானியான ஸ்ரீமான் ப சி. சு க சிதம்பர நாடார் அவர்கள் புதிதாக மெம்பர்கள் சேர்த்து வசூலித்தனுப்பிய அங்கத்தினர் சந்தா விபரம்:—

ப. சி. சு. க. சிதம்பர நாடார்	2.
சா. குருசாமி நாடார்	1
எம். திரவிய நாடார்	1.
பி. எஸ். திரவிய நாடார்	1.
பெ. முத்தைய நாடார்	1.
அ. ஷண்முகவேல் நாடார்	1.
எ. ஆர். பி. முத்து நாடார்	1.
சே. ருமைய நாடார்	1.
எ. வேலு நாடார்	1.
இ. கருத்தைய நாடார்	1.
ப. துரைச்சாமி நாடார்	1
இ. தங்கவேலு நாடார்	1.
வெ. பாண்டிய நாடார்	1.
இ. ஆறுமுக நாடார்	1.
வே. பொன்னுசாமி நாடார்	1.
வே. அருமை நாயக நாடார்	1.
வே. சவரிமுத்து நாடார்	1.
அ. சி. தங்கசாமி நாடார்	1.
டீ. எஸ். பால் நாடார்	1.
ஆக மொத்தம் ௹	20.

பிழை திருத்தம்.

1923-ம் ௵ மார்ச்சுமீ 11௳ வெளியேறின நமது மித்திரன் சஞ்சிகையின் ஐந்தாவதுபக்கத்தில் நாடார்மஹாஜன சங்கம் கவுன்ஸில் மீட்டிங்கு நடபடிக்கைகளில் நான்காவது பாராவில் கண்டவிஷயங்களை பின்வருமாறு திருத்திவாசிக்கவேணுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது:—

"பெண்களின் படிப்புக்காக முதலாவது பாரத்துக்கு மீ 1-க்கு ரூ 4-ம் இரண்டாவது பாரத்துக்கு மீ 1-க்கு ரூ 5-ம் மூன்றாவது பாரத்துக்கு மீ 1-க்கு ரூ 6-ம் நான்காவது பாரம் முதல் 6-வது பாரம் வரை மீ 1க்கு ரூ 15-ம் இண்டர் மிடியேட் வகுப்புக்கு மீ 1-க்கு ரூ 20-ம் பி. ஏ. வகுப்புக்கு மீ 1-க்கு ரூ 25-ம் ஸ்காலர்ஷிப் கொடுக்கவேணுமாய் தீர்மானிக்கப்பட்டது."

காரியதரிசிகள்.

பேருபட்டியின் நற்செய்தி.

சில தினங்களுக்குமுன் அவ்விடம்நான் சென்றிருக்கும்போது, அறிந்துகொண்டதில் முக்கிய விஷயமாவது இவ்வூரிலுள்ள நம்குல கனவான்கள் நம்குல பிள்ளைகளுக்கு கட்டாயப் படிப்புகற்பித்துவருவதும் நம்குல வாலிபர்கள் ஒன்றுகூடி க்ஷத்திரிய அபிவிர்த்தி சங்கம் ஸ்தாபனம்செய்து மேற்படி சங்கத்தின் மூலமாய் படிப்புதெரியாத வாலிபர்களுக்கு இராப்பாடசாலை ஒன்று மேற்படி யூர் ஸ்ரீமான் ஆ. காளிநாடார் அவர்களால் திறக்கப்பட்டிருக்கிறதும் மேற்படி கனம் முதலாளி அவர்கள் சிரேஷ்ட புத்திரி உண்ணுமலை தாயம்மாள் சிவபதம் அடைந்த ஞாபகச் சின்னத்திற்காக மேற்படியாரால் நம்குல பெண்மணிகளுக்கு பெண்பாடசாலை யேற்படுத்தியிருக்கிறதும் பக்தியுடன் நடேசபஜனையும் மேற்படி யார்களின் முயற்சியால் நடந்து வருவதோடு மாதந்தோறும் கடைசி வெள்ளிக்கிழமையன்று கடைகளை பூட்டியும் சில்லரை தொழில்களை நிறுத்தியும் பக்தியோடு காளீஸ்பரிக்கு பூசை நைவேத்தியம் நடத்திவருகிறதும் போற்றத்தக்கது இந்த உத்தம புண்ணியசீலரைப் போல் ஒவ்வொரு ஊரிலும் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி நம்குல மாணவர்களை படிக்கவைக்க யேற்பாடு செய்வார்களானால் அடுத்த சென்ஸஸ்க்குள்ளாக நம்மவர்களில் படியாதவர்களில் எவரும் இல்லையென்ற பெரும்பெயரை அடையலாம். இக்கனவானை அந்நகர்வாசிகள் அனைவரும் நானும் நன்றிபாராட்ட கடமைப்பட்டுள்ளோம்.

தாயில்பட்டி, நாடார் கனவான்களும் பெண் கல்வியும்.

இக்காலத்திலெவ்விடங்களிலும், கல்விவிருத்தியில் பல கல்விமான்களும் செல்வவான்களுமாகிய அநேக பரோபகார சிந்தையுள்ள கனவான்கள் விடாமுயற்சி யுள்ளவர்களா யிருக்கிறார்கள். மேலும் நாகரீகம் கல்வி செல்வம் முதலிய நற்காரியங்களில் சிறந்தோங்கும்படியாக ஏராளமான பணத்தைச் செலவுசெய்து கல்விமான்களும் செல்வவான்களுமாகிய சான்றோர் கனவான்கள் விடாமுயற்சியுடையவர்களாய் நடத்திவருகிறார்கள். இதிலும் விசேஷமாய் பெண்கள் கல்வி விஷயமாய்நம்மவர்கள் ஏராளமான பணத்தைச் செலவுசெய்து பாடசாலைகள் ஏற்படுத்தி பெண்மக்கள் படிப்புக்கு பல ஏற்பாடுகள்செய்து வருகிறார்கள்.

அதிலும் விசேஷமாய் நம் காருண்ய கவர்ன்மெண்டார் பெண்கல்விக்காக விசேஷித்த செலவுசெய்து பெண்களுக்கு சம்பளமில்லாமலும் ஏழைப் பிள்ளைகளுக்கு புஸ்தகம் முதலியவை இனாமாக கொடுத்தும் பாடசாலைகளை கிராமங்கள் தோறும் ஏற்படுத்தி நடத்திவருகிறார்கள் இதுபோன்ற ஓர் பள்ளிக்கூடம் தாயில்பட்டி என்ற கிராமத்திலும்பெண்மக்கள் படிப்புக்கென்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். மேற்படி பள்ளிக்கூடம் நம்நாடார் தெருவிலேயே ஏற்பட்டிருப்பது அதிலும் நன்மையே! ஏறக்குறைய 80 வீடுகளுள்ள நம்மவர்களில் சுமார் 30 பெண்பிள்ளைகள் படிக்க லாயக்குள்ளவர்களாயிருக்க 10 பிள்ளைகள் பட்டிலும் படிக்கிறார்கள். மற்ற 20 பிள்ளைகளுக்கும் இந்த நன்மை இல்லையா

சிவகாசி, விருதுபட்டி, அருப்புக்கோட்டை முதலிய பெரிய ஊர்களில் நம்மவர்கள் தங்கள் சொந்தப் பணத்தைச் செலவழித்து பெண்கல் கல்விக்காக கட்டடங்களைக்கட்டி உபாத்தியாயர்களை ஏற்படுத்தி தங்களபெண்மக்கள் கல்வியிலும் நாகரீகத்திலும் தேற்சியடையச் செய்து வருகிறார்கள்.

தாயில்பட்டியின் பக்கத்திலுள்ள பேராபட்டி என்ற கிராமத்திலும் நம் மகான்கள் தங்கள் சொந்தப்பணத்தைக் கொண்டும் நாடார் மகாஜன சங்கத்தின் உதவியாலும் தங்கள்கிராமத்தில் ஓர் பெண்பாடசாலை ஏற்படுத்தி நடத்திவருகிறார்கள் என்ற விஷயம் நமக்கு வெகு சந்தோஷமாயிருக்கிறது. இன்னொரு விதத்திலும் அவர்கள் தாயில்பட்டி நாடார்களுக்கு முன்மாதிரிகளாயு மிருக்கிறார்கள்.

இவ்விதமாய் ஒவ்வொரு தேசமும் ஜாதிகளும் குடும்பங்களும் சீர்திருந்த மடைய காரணர்களாகிய தங்கள் பெண்மக்களின் படிப்புக்காக தங்கள் பணத்தையும் தங்களையும் கொடுத்து முயற்சியுடையவர்களாயிருக்கவேண்டியது நியாயமாயிருக்கிறது. ஆனால் தாயில்பட்டி நாடார் கனவான்களில் சர்க்கார்போர்ட்டு பெண்பாடசாலையில் இலவசமாகபாடம்கற்பிப்பதோடு பாடப்புஸ்தகங்கள் சிலேட்டுகள் இனாமாகக்கொடுத்தும் ஐயா, அம்மா உங்கள் பெண்மக்களை படிக்கஅனுப்புங்கள் என்று உபாத்தியாயர் தினம்தினம் காலைமாலை வீடுவீடாய் நடந்தாலும் ஏனென்று கேட்பாருமில்லை பெண்கள் படிப்பைப் பற்றி கவலைப்படுபாருமில்லை. அந்தோ! என்ன பரிதாபம்!!

சர்க்கார் இனாமாக ஓர் பெண்பாடசாலை உங்கள் ஊரில் வைத்திருந்தும் உங்கள் பெண்மக்களை பாடசாலைக்கு அனுப்பாவிட்டால் முன்சொன்ன குடியானவனுக்குண்டான வியாகூலமே பெண்கல்வியை அசட்டை செய்கிறவர்களுக்குமுண்டு.

இனிமேலாகிலும் நம் பெண்மக்கள் எல்லாரையும் பெண் பாடசாலைக்கு அனுப்பி, ஜாதிமுன்னேற்றத்திலீடுபடுவீர்களாக என்று ஒரு குலாபிமானி எழுதுகிறார்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection